CHINTHAMANI.

A HIGH CLASS TAMIL MONTHLY.

(Devoted mainly to the cause of Indian Women.)

EDITOR — SISTER V. BALAMMAL.

Vol. II.] **March 1926.** **[No. 8.**

श्रीशारदायै नमः ।

श्रीरामचन्द्र परब्रह्मणे नमः

JL
415m2,N24
N26·2·8
190376

சிந்தாமணி

சுபோத ராம சரிதம்.

COMPOSED AND ANNOTATED BY
SISTER V. BALAMMAL
DAUGHTER OF
Late Dr. A. R. VAIDYANATHA SASTRIAR, M.A., M.B. & C.M.

(*All Rights reserved by the Authoress.*)

सुबोधराम चरिते

॥ अयोध्याकाण्डः ॥

राघवस्याग्रजस्याथ निपत्य पदयोर्भृशम् ।
उक्त्वा तातस्य मरणं मुमूर्छ भरतस्तदा ॥ ३० ॥

भरतः பரதன் अग्रजस्य முன் பிறந்தோனாகிய राघवस्य ராமனுடைய पदयोः கால்களில் भृशं விரைவாக निपत्य விழுந்து अथ பிறகு तातस्य தந்தையின் मरणं மரணத்தை उक्त्वा சொல்லி तदा அப்பொழுது मुमूर्छ மூர்ச்சித்தான் ॥ ३० ॥

रामः स्वं हृदयं तञ्च समाश्वास्य महानुजः ।
सीतया सहितः स्नात्वा ददौ पित्रे तिलोदकम् ॥ ३१ ॥

सहानुजः தம்பியோடு கூடினவராகிய रामः ஸ்ரீராமன் स्वं தன்னுடைய हृदयं மனதை யும் तञ्च பரதனையும் समाश्वास्य சமாதானப்படுத்தி விட்டு सीतयासहितः (सन्) சீதையுடன் கூடியவராக स्नात्वा ஸ்நானம் செய்து पित्रे தந்தைக்கு तिलोदकं சமவிதிக்கான எள்ளுந் தண் ணீரை ददौ கொடுத்தார் ॥ ३१ ॥

प्रार्थितो भरतेनासौ नगरागमनं प्रति ।
दत्त्वा स्वपादुके रामो भरतायेदमब्रवीत् ॥ ३२ ॥

भरतेन பரதனால் नगरागमनं प्रति அயோத்திமா நகருக்கு வரும்படி प्रार्थितः வேண்டப் பட்டவரான असौ அந்த रामः ராமர் भरताय பரதன் பொருட்டு स्वपादुके தம் பாதுகைகளை दत्वा கொடுத்து इदं இவ்வாறு अब्रवीत् உரைத்தார் ॥ ३२ ॥

चतुर्दश समाश्शीघ्रं नीत्वाऽरण्यनिवासतः ।
आगमिष्यामि नगरं मा स्म शोचस्तरामिति ॥ ३३ ॥

चतुर्दश பதினான்கு समाः வருஷங்களை अरण्य विवासतः வனவாசத்தால் शीघ्रं விரை வாக नीत्वा கழித்து नगरं அயோத்திக்கு आगमिष्यामि வருவேன் मा स्म शोचस्तरां துக்கப்பட வேண்டாம் इति என்று अब्रवीत् உரைத்தார் ॥ ३३ ॥

(*To be continued.*)

சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கிய
மாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர். சகோதரி வி. பாலம்மாள்.

மலர் II.] குரோதன—மார்ச். [இதழ் 8.

செந்தமிழ் நாட்டுச் சிறப்புக் கும்மி.

(ஸ்ரீமான் நா, கோவிந்தசாமி பண்டிதர்)

(388-ம் பக்கத் தொடர்ச்சி.)

பக்குவங் கண்டு பராபரன் வண்டினம்
பாடுந்துடவைப் பெருந்துறையில்
தக்க குருந்தினில் அன்பர்க் குபதேசம்
சாற்றியிருந்திடக் கண்டனரே. (84)

கண்டனர் தேசிகன் தாள்பணிந்தேயிரு
கையுந்தலையிசைக் கூப்பிநிற்க
பண்டுதிரிபுரம் எரித்த ருத்திரன்
பத்தற் குபதேசம் பண்ணினரே. (85)

பெற்ற சுவாநுபவப் பெருக்கால் தமிழ்
பேரின்பவாரிதி போலெழவே
கற்றவர் போற்றிடுங் கண்ணுதல் மாணிக்கக்
கல்லிதுவென்று மிகக் களித்தே. (86)

மாணிக்கவாசக ரென்றொரு நற்பெயர்
மாநிலம் போற்றவே தந்தருளி
மானுக்கிடப்பாகம் தந்த பரம்பொருள்
மாகமதாகி மறைந்திடவே. (87)

குதிரைவாங்கவே கொண்டுவந்த பொன்னைக்
கோயில் திருப்பணி செய்திருந்தார்
மதுரைக் காவலன் காரணம் யாதென்று
மந்திரிக் கோலை யனுப்பினன்காண். (88)

மந்திரி யாரான் சந்நிதி தன்னிலே
வணங்கி நிற்க எழுந்தருவே
கந்துகஞ் சின்னாளில் காண்பிரென்றேகூடல்
காவலற் கறைதி யென்றொரு சொல். (89)

கேட்டுமறையவர் கூடலிற் சென்றுயர்
கீர்த்தி கொள் பாண்டியன் தன்னைக்கண்டு
பூட்டுங் கடிவாளப்புரவி சின்னாளில்
போதருமென்றே புகன்றனரே. (90)

குதிரைவாராத காரணத்தால் தீயர்
கொண்டுபோய்த் தண்டிக்க மந்திரியை
மதுரைமன்னவன் தன்னிடம் ஈச்வரன்
வாம்பரியீந்து வரிசை பெற்றே. (91)

போனபின் ஓரிப்புரவி யெல்லாமன்னர்
போருக்குயர்ந்த புரவிகளை
ஊனமுறக் கடித்தூனை யிட்டேகன்
றோடி மறைந்தன கானகத்தே. (92)

கண்டரி மர்த்தனன் கோபமுற்றான் மிகக்
கண்டனை தண்டனை பண்ணுமென்றான்
தொண்டரைவருத்த வைகை சிவன் சடைத்
தோன்று மந்தாகினி போலெழவே. (93)

கூடல் அழியுமென்றே மதி மன்னவன்
கொண்ட வெள்ளத்தைத் தடுத்திடவே
நாடதிலுள்ளவர் போடும் அணையெனு
நல்ல தமுக்கு முழக்கிடவே. (94)

ஊரிலுள்ளோர் தங்கள் பங்குக் கணையிட
உத்தமி வந்தியின் பங்கதற்கே
ஆரணியுஞ்சோம சுந்தரபாண்டியன்
ஆளாகிப் பிட்டுக்கு மண்சுமந்தும். (95)

வந்தியுடைப் படையாததனால் ஆனை
மன்னவன் பொற் பிரம்பாலடிக்க
அந்தரம் பூமியடங்கலும் பட்டன
ஆண்டவன் தானடியுண்டதனால். (96)

நடுங்கி நிற்கின்ற மாறனை நோக்கியே
நம்பன் திருவுளந் தானிரங்கி
ஒடுங்க நின்சினம் உத்தம பத்தனை
உற்றுத் தொழுக வென்றே மறைந்தார். (97)

(தொடரும்.)

மாதர் சங்க அமைப்பு.

பத்திராதிபர்.

மாதர் சங்கத்தின் உபயோகத்தைப் பற்றி சென்ற சஞ்சிகையிற் கூறினோம். மாதர் சங்கம் உபயோகமுள்ளதென்ற உணர்ச்சி ஜனங்களிடையே தற்காலம் பரவி வருகிறதாயினும் ஆங்காங்கு மாதர் சங்கம் காணப்படாததேன்? மாதர் சங்க அமைப்பு யாரைப் பொருத்திருக்கிறதென்பதை எடுத்துரைத்தல் இச்சமயம் பொருத்தமாகும். நவ நாகரிகம் ஒரு புறத்திலும் சமூக முன்னேற்றம் மறுபுறத்திலும் சிந்திக்கப்படும் இந்நாளில் பெண்களின் அபிவிருத்திக்குரிய வழிகள் சிறிதும் சிந்திக்கப்படாதிருத்தல் விசனிக்கத் தக்கது. சமூக வாழ்க்கையிலும் முன்னேற்றத்திலும் பெண்கள் இயற்கையாய்க் கலந்திருப்பினும் இவ்வுண்மையை ஆடவர் அறியாது தம்மைப் பொறுத்த மட்டில் தனியே ஓர் அபிவிருத்தியிருப்பதுபோல எண்ணிக்கொண்டு தமக்கு மட்டும் வாசக சாலைகள் என்றும் சங்கங்கள் என்றும் அமைத்துக் கொள்வரேல் பெண் மக்களைக் கவனிப்பவர் எவர்? பெண்களைக் கண்டிக்கும்பொழுதும் அவர்களிடத்திலுள்ள சொத்துக்களுக்குப் பாத்தியங் கொண்டாடுங் காலத்திலும் ஆடவர்கள் தாங்கள் அதிகாரிகளென்றும் பாத்தியஸ்தர்களென்றும் வாதாடுகின்றார்கள். பெண்களுக்குரிய கல்வி, நற்பழக்கம், நற்பொழுது போக்கல் இவைகளை யேற்படுத்துவதில் மட்டும் தங்களுக்கு ஒரு சிறிதும் பொறுப்பில்லையென்று வாளா விருப்பதுடனில்லாது, பெண்கள் அபிவிருத்தி யடையவில்லை, முழு மூடர்களா யிருக்கின்றார்கள், வீண் செலவு செய்கின்றார்கள், ஆடம்பர வாழ்க்கையைக் கைக் கொள்ளுகிறார்கள், குடும்பக் காரியத்தை வெறுக்கின்றார்கள், குடும்ப சச்சரவிற்குக் காரணமா யிருக்கின்றார்கள், வீண் பொழுது போக்குகின்றார்கள், வெட்டிவம்பளந்து காலங் கழிக்கின்றார்கள் என்று வாயாரப் பேசித் தூற்றுவதையும் எண்ணுங்கால் பெண்களின் நிலைமையானது தற்காலம்போல துரதிருஷ்டமான நிலையில் எக்காலத்திலும் இருந்ததுமில்லை, இனி இருக்கப்போவதுமில்லை என்பது உண்மை. இனியேனும் பெண்களின் முன்னேற்றத்திற்குரிய வழியை நாடி உழைத்தல் ஆடவர்கள் கடமை யென்பதை நன்குணர்ந்து நடத்தல் அவசியம்.

மாதர் சங்கம் அமைக்கப்பட்டு செவ்வனே நடை பெறுவதற்கு ஆடவர் ஆதரவே முக்கியமாயிருக்கின்றது. சங்கமென்பது மாதர்க்காயிருப்பினும் அதன் மேன்பார்வையும் அமைப்பும் ஆடவரைப் பொறுத்திருக்கவேண்டும். ஆடவர் தமக்கு சங்க மமைத்துக்கொண்டு அதை யடுத்துப் பெண்கள் சங்கமும் அமைத்தல் வேண்டும். பெண்கள் தனியே வெளிச் செல்ல முடியாதவர்களாகையினால் ஆடவர் சங்கத்திற்குச் செல்லும்போது தம் வீட்டுப்பெண்களையும் அவர்கள் சங்கத்திற்குச் செல்லுமாறு தம்முடனழைத்துச்செல்லல் வேண்டும். மாதர் சங்கத்திற்குவேண்டிய புத்தகங்களைத் தொகுத்தெடுத்து அவைகளை அச்சங்கத்திற்குதவ வேண்டும். மாதர் சங்கத்தில் அவர்க்கேற்ற விஷயங்கள் வாரத்திற்கொரு முறையேனும் உபன்யசிக்கப்படல் வேண்டும். உயர்ந்த விஷயங்களை இனிய எளிய நடையில் எழுதித் தந்து அவர்களைப் படிக்கச் செய்யவேண்டும். இவ்வாறு ஆடவர் முழுப்பொறுப்

பும் வகித்து மாதர் சங்கத்தை ஆங்காங்கு ஏற்படுத்தி நன்கு நடைபெறச் செய்வாராயின் எங்கும் மாதர் சங்கமேற்பட்டு செவ்வனே நடைபெற்று வருமென்பதில் தடையில்லை. இவ்வாறு மாதர் சங்க மமைக்கப்படுமாயின் இதன் மேன்பார்வையில் அவ்விடத்துள்ள பெண்பாடசாலைகளை பெண்மக்கட்குரிய கல்விச்சாலைகளாக நடைபெறச் செய்யக்கூடிய சிரத்தையை மாதர் சங்கத்திய அங்கத்தினர் கைக் கொள்வர். மாதர் சங்க மூலமாகப் பெண்மக்களுக்குக் கல்வி, தேகாரோக்கியம், மதப்பற்று, ஒற்றுமை, மக்கள் வளர்த்தல் முதலிய இன்றியமையாத பல விஷயங்களைத் தக்கவர்களால் பிரசங்கிக்கச் செய்யலாம். இவற்றால் பெண்களுக்குக் குடும்ப நிர்வாகத்தில் உற்சாகமும், தேகாரோக்கியத்தில் சிரத்தையும், குழந்தை வளர்த்தலில் பொறுப்பும், மதானுஷ்டானத்தில் பற்றுதலும், பூர்வீக வாழ்க்கையில் அன்பும், வீண் வம்பளப்பதில் வெறுப்பும், உயர்ந்த நூல்களைப் படிப்பதில் நோக்கமும் நாளுக்குநாள் விருத்தியடைந்து அன்புமிக்க தாய்மாராகவும் ஆதரவு மிக்க சகோதரிகளாகவும் பொறுப்பு மிக்க மனைவிகளாகவும் தங்கள் நிலைமைகளை நிலைநிறுத்தி, உத்தமப் புதல்வர்களை யீன்று தேகத்தில் சுக வாழ்க்கையும், மனதில் சாந்தியும், முகத்தில் ஒளியும், நடவடிக்கைகளில் அமைதியும் கொண்டு பெண்கள் தெய்வமெனப் போற்றக்கூடிய உன்னத நிலை யடைந்து உலக வாழ்க்கையின் உண்மை ஒளியைப் பரப்பி உயர்ந்து வாழ்வார்கள் என்பதில் ஆட்சேபமே கிடையாது. இதுபற்றிப் பெண்கள் அபிவிருத்திக்கு மூலகாரணமாயிருக்கும் மாதர் சங்க அமைப்பில் ஆடவர்கள் விரைவில் சிரத்தை கொள்வார்களாக.

அகல்யை—ஒரு சிறு கதை.

(ஸ்ரீமதி நாமகிரி)

சாதாரணமாய்ப் பெண் மரபினர்களே எவ்விதக் கஷ்டங்களையும் சமயத்திற்கேற்றபடி அப்பப்பொழுது ஏற்றுக்கொண்டு சகித்துக் கொள்ளும் சக்தியையுடையவர் எனக்கூறலாம். கஷ்டகாலங்களில் கணவனிடம் முகம் கோணி நில்லாமலிருப்பரே மனைவி எனப் பெயருடையவர் எனலாம்.

சுதா என்பவளின் தந்தை ஒரு காலத்தில் நல்ல நிலைமையிலிருந்தார். வீடு நிறைய உண்பார் — உடுப்பார் — எடுப்பார் — கொள்வார் முதலியோர் அனேகர் களிப்பாய்க் கூடியிருந்தனர். முன்யோசனை சிறிது மற்ற அந்தப் பாவித் தந்தையானவர் பிதுரார்ஜித சொத்து, சுயமாகத் திரட்டிய தனம் யாவற்றையும் குடி, சீட்டாட்டம், சூதாட்டம் முதலியவற்றிலும் பரஸ்த்ரீகளிடமும் தொலைத்து விட்டு இறக்கும் தறுவாயில் தம் ஒரே மகளைத் தவிர யாருமின்றித் தவித்தார். கையின் வலுவு குறைந்ததும் தேன் ரசத்திற்குத் தேனீக்கள் சூழ்ந்திருப்பதைப் போன்று தம்மைச் சூழ்ந்திருந்தவர்கள் யாவரும் தம்மை அம்பலத்தில் விட்டு நீங்குவதைத் தமது கண்களாலேயே கண்டார்— மனம் வருந்தினார் — அலறினார் — இருக்குங் கால் கதறி அழுத தனது இன்னுயிர் இல்லாளை எண்ணி வருந்தினார். யாது செய்தென்ன பயன்? அன்பே உருவெடுத்த ஓர் இளஞ் சகோதரன் தவிர, தமது தவத்தின் பலனாய்க் கிடைத்த ஒரே சிறு மகளைத் தவிர வேறொருவரும் அவரது இல்லத்திலிருந்தாரில்லை.

சுதா குமரிக்கு மூன்று பிராயம் பூராய் முடிவதற்குள் பெற்ற தாய் காலமாய்விட, சிற்றின்பங்களில் மூழ்கியிருந்த கமலதேவர் மறுதாரம் தாமே செய்துகொள்ளப் பிரியமற்றவராய் தன்னிளம் சகோதரனான சுந்தரதேவனுக்குச் சந்திரகாந்தை என்றொரு ஏழைப் பெண்ணைப் பெண் கொண்டு அவளை இல்லத் திறைவியாக்கினார். அம்மாதரசியும் சாம்பலால் புறட்டப்பட்ட அனற் கட்டிபோல வெளிக்கு மூத்தாரிடமும் அவரது ஒரே மகளிடமும் அவளது கை சலிக்கும் மட்டும் வெகு அன்பாயிருப்பதாகக் காண்போர் உருக நடந்து வந்தாள். ஆனால் அந்தோ, பணமானது ஒரிடத்தில் தங்கிவாழும் பொருளோ? கமலதேவர் லட்சாதிபதி அல்ல பிட்சாதிபதி என்று அவளுக்குத் தெரியவரவும், கடுஞ்சொல்லும் வன்முகமும் அவளிடம் பிரத்தியட்சமாயின. நல்லோர்க்கிது காலமன்றே.

மரணப் படுக்கையில் கிடக்கும் பொழுது தம்மிளங் குமரிக்கும் தம்மினிய மனைவிக்கும் மகா அகிருத்தியங்களைச் செய்த கமலதேவர் கண்ணுங் கண்ணீருமாய், சுகப்பட்ட நாட்களிலும் கஷ்டப்படும் நாட்களிலும் தம்மிடம் ஒரே மாதிரி நடந்து வரும் தம்மிளம் சுந்தரதேவனைக் கட்டிக்கொண்டு அங்கலாய்க்கலானார்:—

"தம்பியே—என் கண்மணியே,

ஒரு காலத்தில் அறிவு மழுங்கிப்போய்ப் பல தீச்செயல்களுக்கு இரையாய், இதோ நான் அதன் பலனான பாபத்தை மூட்டையாகக் கட்டிக்கொண்டு செல்லும் நேரம் சமீபித்துவிட்டது. கடவுள், பாமரட்சகரான தேவன், என்னை அழைக்கிறார்—இனி எனக்கும் இப்பாழுலகத்திற்கும் உருதியாய்க் கட்டப்பட்டிருந்த கயிறானது மக்கிப்போய் அறுந்துகொண்டுவந்துவிட்டது. இதோ—இப்பாவையைப் பெற்றவனான நான் கை சோர விட்டுவிட வேண்டிய நாள் சமீபித்து விட்டது—இதோ — இந்த ரத்னத்தை உன்னிடம் ஒப்புவித்து விட்டேன்— இதை அதன் மீது தூசி படியாது காப்பாற்ற வேண்டியது உனது கடன். தம்பி 'அப்படியே காப்பேன்' என எனக்கு ஆறுதலளிக்க உன் மனம் தயங்குகிறதோ?" என்றார்.

வஞ்சனையின்றியே சுந்தரதேவன் சுதாவைக் காப்பாற்றி வந்தான். மூத்தோனின் மகள் மீது அவன் என்னமோ அன்புடனிருந்தான் எனினும் தனது சண்டி போன்ற மனைவியை — அவளை — அவளது கொடுமைகளை வேரறுக்கச் சாதுப்பிரகிருதியையுடைய அவனால் இயலவில்லை. சிறு பெண்ணான சுதாவை அவள் — அந்த ஆசை நாயகி, "தாசி, வேசி" என்றழைப்பது காதிற் படினும் வாய் கொடுத்தாற் பசைபோல் பற்றுவாள் என்றறிந்து பட்டும் படாதது போற் செல்வது அவனுக்கியல்பாயிருந்தது. "சுதா என்றென்னடி பெயருனக்கு? நீ தாசியா, இல்லை வேசியா" என்பாள் சிறிய தாயார். 'தம்பி யிருக்கிறானே, தம்பி மனைவி பெண்ணை வளர்த்தாளே, என்று வேறொன்றும் வைக்காவிடினும் நமக்குச் செலவுக்கு உன்னையாவது வைத்து விட்டுப் போனாரே' என்று முணுமுணுப்பாள். சுதா சகலவற்றையும் பொருத்துக் கொண்டே காலத்தைக் கழித்து வந்தாள்.

கலாசாலை அவ்வூரிலிருந்த பொழுதிலும் சந்திரகாந்தை, "நாளைக்குக் காண்டி பிடித்து அன்னம் பரிமாறும் அடுப்பங்கரை வாழ்வுக்குப் படிப்பென்னத்திற்கு?" என்று அதட்டி விட்டாள். சிறந்த பிறப்பாகிய அழகிய ரூபத்தையும் உடலை மூட ஒரு கிழிந்த கந்தையையும் தவிர்த்து அப்பச்சைப் பாலகி யாதொன்றுமறிந்ததுமில்லை, அடையவுமில்லை. அரசகுமாரத்திபோல் வாழத் தகுந்தவள் அவளது

தந்தை செய்த வினைகளால் ஓர் ஏழைப் பெண் போல வாழ வேண்டியவளாய் விட்டாள்.

சுந்தரன் எப்பொழுதாவது தனது அண்ணன் மகளான அருமைச் சுதாவுக்கு என்று ஏதாவதொரு அதிசயமான பொருளை அகஸ்மாத்தாய் வாங்கி வந்தால் அறிவிற் சிறந்த பாவைசந்திரகாந்தை "அதையெடுத்தாலுடைந்து போகும், பார்த்தால் கரைந்து போகும்" என்று கண்ணிற்கூடக் காட்டாமற் ஒளித்து விடுவாள்.

இங்ஙனமே சுதா பனிரண்டு பிராயமுள்ள பெண்ணானாள். அதற்குள் அவள் தனது சிறிய தாயிடம் பட்டவேதனைகள் இவ்வளவவ்வளவல்ல. அவள் மனதின் கண்ணிருந்த துக்கம் வாய் விட்டுக் கூறுதலரிது.

ஒரு நாள் சந்திரகாந்தை கணவனை "ஏது, அண்ணன் மகள் ஆயிரம் வருஷங்களாயினும் அணங்கல்லவோ, விவாகம் எப்பொழுது செய்யப் போகிறீர்" ? என்றாள்.

சுந்தரனது மனம் சிதை யுண்டது. ஏழையவன் அந்த அழகு வாய்ந்த அறிவுடைய பாதேசிப் பெண்ணுக்கு ஏற்ற மணமகனை எங்கே போய்த்தேடுவான்? யாரைக்கொண்டு பேசுவான்? என்ன வேலை செய்து பணம் கொடுப்பான் ? ஆ ! பாவியவன் பெண்ணைப் பெற்றுப் பரதேசியாக்குவதற்குப் பதிலாய்ப் பிள்ளையாவது வைத்துப் போனானா!

பசு பிரம்மாண்டமான தேகத்தை உடையதெனினும் அது சும்மா இருப்பின் சின்னஞ்சிறு காக்கையும் அதன் முதுகைக் கொத்தும் போல நல்ல வம்சத்தைச் சார்ந்தும் கால வித்தியாசத்தால் கஷ்ட திசையை அடைந்த சுந்தரதேவனது அண்ணன் மகளான சுதாவை ஒரு பரம ஏழை தன் பிள்ளைக்குக் கட்டிக் கொடுக்கும்படி கேட்டான். சுந்தர தேவனின் இருதயம் உடைந்துவிட்டதென்றாலும் அப்பொழுது சந்திரகாந்தை வந்து "நாதா, இவனிலும் சிறந்தவன் உங்கள் அண்ணன் மகளைத் தேடி வருவதில்லை என்பது நிச்சயம்; ஆகவே பொருமைப்பட்டு விவாகத்தை நிறைவேற்றுங்கள்" எனத் தேற்ற அவனும் தேறிக் கிழவனது இளங் குமாரனுக்கு மகளைக் கொடுப் தாக முடிவு செய்தான்.

ஆனால் கிழவனார் தூரதேசத்தினரல்ல. பணத்தின் மமதை பிடித்தலையும் பணப்பேயலல்ல, ரூபத்திற்கு மாறான குரூபியுமல்ல. ஆகவே ஏழைச் சுதா இந்திர குமாரனை மணம் புரிய மறுக்கவுமில்லை, மனம் வேறுபடவுமில்லை. விடிந்தது முதல் இருள் சாயும்வரைக் கடுகடுவென்று பேசும் சிற்றன்னையுடனிருப்பதைவிட ஆரைக்காசுள்ள அன்பனுடன் வாழ்வதே வாழ்வாகும் என அவ்வேழைச் சிறுமி நம்பினாள்.

சுந்தரனும் சுதா இந்திர குமாரனிடம் பிரியப்படுவதைக் கண்டு மனம் தேர்ந்தான். காக்கைக்குப் பனங்காயும் ஒரு பெரிய சுமைபோல, சிறிது கடனை வாங்கினதற்குக் கூடப் பெரிதும் அல்லற் பட்டான். கடன்காரர்களும் 'இரப்பார்க்கு ஈசன் நிலை' என்பது போல அரசனைப் போல ஒருகாலத்திலிருந்த கமலனின் மகளுக்கு விவாகம் என்று தெரிந்ததும் முகம் சுருங்காமல் பணமருளினர். விவாகம் ஒரு வழியாய் முடிவுற்றது.

ஏழைக் குமாரதேவன் மருமகளை அன்பாகவே பார்த்து வந்தான். அவன் அன்போடீந்த கீழ்த்தர உணவுப் பொருள்களையும் அவள் பரிவோடு பக்குவம் செய்து வாய்க்கு ருசியாய் உள்ளத்திற்குக் குளிர்ச்சியாய் சமைத்துப் போட்டதைத் தந்தையும் தநயனும் ஆசையோடருந்திக் கவலையின்றித் தங்கள் காலத்தைக் கழித்து வந்தனர். சுதாவும் கணவனிடம் வன்முகம் ஒருநாளும் காட்டியதில்லை. இன்சொல்

லும் இன்முகமுமே அவளிடமிருந்தது. நல்ல பெயருடன், கீர்த்தியுடன் வாழ்ந்துவந்தாள்.

இந்திரகுமார் நாளாக நாளாக மனைவியை எண்ணி உருகினான். அப்பெயர்க் கொத்த கண்மணியையும், தன்னை வெகு அன்பாய் வளர்த்தெடுத்த தன் அருமைத் தந்தையும் வறுமை பிடிப்பதைக் காண அவனது மனம் தாளவில்லை. என் செய்வான் சிறு பையன் ? ஒரு நாள் பசியோடு வெளியிலிருந்து வந்தான். அவனது முகத்தைக் கண்ட சுதா அவனது வயிறு வாடியதை யறிந்து தான் காலையிலுண்ணாது இரவில் கணவர் பசியோடு வருவார் என்றறிந்து வைத்திருந்த உணவை ஆசையோடு கொற்றவனுக்குப் பரிமாறினாள். உணவை அவன் தொடக்கூட இல்லை. "சுதா, இன்று மாத்திரம் அமுது மீறக்காரணமென்ன?" என்றான். பொய்மையையே அறியாத அப்பாவை "நாதா, தாங்கள் நாளெல்லாம் உழைத்துவிட்டு இரவில் பசியால் வாடுவீர்களென்றறிந்தே இவற்றை நான் உண்ணாது வைத்திருந்தேன்" என, இந்திர குமாரன் உள்ளம் பதறிநின்றான். பிறகு பேசாதுண்டுவிட்டுக் குடிலின் முன்புறம் உலவினவண்ணமிருந்தான். குமாரதேவன் அயர்ந்த நித்திரையிலிருந்தான். சுதா கணவனுடன் பேசச் சடுதியாகத் தனது வேலைகளைக் கவனித்துவிட்டு வாயிலுக்கு வர, இந்திர குமாரனைக் காணோம். சுற்றுமுற்றும் பார்த்தனள். பயத்தை விடுத்து வயல்களிற் சென்று "நாதா,நாதா" எனக் குழலினுமினிய குரலிற் கூவினள். திகிலினால் கண்களிலிருந்து நீர் ஆறாகப் பெருகியது. ஓடி வந்து மாமனைத் தட்டி எழுப்பி "என் அன்பிற் சிறந்த முதியோரே, மகனைக் காணவில்லையே" என்று கூறி நடந்தவைகளைக் கூறினாள். குமரனும் அங்கம் பதறி மனமுடைய மகனைக் கூவிக்கொண்டே அங்குமிங்கும் அலைந்தான். இந்திரகுமார் அவ்விருட்டில் எங்கும் காணப்படவில்லை.

அடுத்த தினம் காலையில் வாயிற்படியண்டை ஓர் காயிதச் சுருள் கிடந்தது. அதில் "என் அன்பிற்சிறந்த அருமை மனைவியே, உன்னைவிட்டுப்பிரிந்தேன் என்று வருந்தாதே. எவ்வளவு நாட்கள் தான் நாமிவ்விதம் வறுமைப்படுவது. தூரதேசம் செல்வதாக எதிரில் கேட்டால் நீயும் எனது தந்தையும் மாறு கூறுவீர்கள் என்றே நான் மறைவாய்ச் சென்றேன். அனேகமாய் ஆறுமாதங்களுக்குள் பொருள் திரட்டிக் கொண்டு உங்களை அடைவேன் என்றெண்ணுகிறேன். ஈசனது இச்சைப்படியாய் முடியும். அதுவரை எனதன்பர்—என்னைப் பெற்ற பிதா—அவரின் முகம்கோணாமல் நீ நடப்பது உனது கடமை.

இங்ஙனம், உனது காதலன்,

இந்திரகுமார்"

என இருந்தது.

மகன் காணாமற் போன சமாசாரத்தை அறிந்த சுந்தரதேவன் மகளைக் காணவந்து குமாரனையுமவளையும் தன்னோடு வந்திருக்கும்படிக் கூற "சிறிய தாயுடன் மறுபடியும் எங்ஙனம் வாழ்வது?" என்று சிந்தித்து "இல்லை அப்பா, எனது கணவர் கூறியபடித் தனியேயிருந்தே காலங்கழிப்பேன்" என்றுத்தரம் கூறினாள்.

இப்படியே பல வருஷங்களாயின. வீட்டில் சேகரித்து வைத்திருந்த பொருள்கள் யாவும் 'எறும்பூரினும் கல் தேயும்' என்பதுபோல மலைபோலிருந்தது மண்ணோடு மண்ணாய் விட்டது. குமாரதேவனும் மிகவும் தள்ளாதவனாய் விட்டான். வீட்டிலேயே அமர்ந்து விட்டான். வெளியே சென்று வேலை செய்து கூலியைத் திரட்ட ஹேதுவற்றுப்போனான். போதாத குறைக்கு இன்று அவனது உடம்பு மிகவும்

குணமாயிருந்தால் நாளையிலிருந்து இன்னும் ஐந்து தினம் படுத்த படுக்கையாய்ப் படுக்கையில் விழுந்து விடுவது அவனது வழக்கமாய் விட்டது. ஏழைச் சுதா—பாலியப் பருவமுள்ள நங்கைமணி—வயிற்றுப்பிழைப்புக்கென்செய்வதென்றேங்கினாள். 'மாமா, வெளியே சென்று கூலியாவது, பிச்சையாவது எடுத்து வருகிறேன்' என்று கூறிப் பிரதிதினமும் ஏதாவது செய்து கால்ப் பணம் கொணர்ந்து வயிற்றுக் கொடுமையைத் தீர்க்கலானாள். சுதாவின் தவமானது வெகு கடூரமாயிருந்தது. அழகான அரண்மனையில், மிருதுவான பஞ்சணையில், நாற்புறமும் தாதியர் படை சூழப்பிறந்த அக்கன்னி காலத்தின் கோலத்திற் கிரையாய்ப் பிச்சை எடுத்துண்பவளாயினாள். கூலி வேலை செய்யத் தேகத்திற் போதிய வலி அவளிடமில்லாததும் ஒரு குறைவே.

ஒருநாள் குமாரதேவன் மரணத்தை எதிர்பார்த்தவனானான். சாவுக்கும் ஜீவனுக்கும் மத்தியில் அவனது ஆத்மா அலைந்துகொண்டிருந்தது. பரிசுத்தையான ஏழைச் சுதா சற்றும் மனம் கசியாமல் வன்முகம் தொடுக்காமல் அவனருகே அமைதியோடமர்ந்து அவனுக்கு வேண்டிய பணிவிடைகளைச்செய்து வந்தாள். என்ன காரணத்தாலோ குமாரதேவனின் தேக அசௌக்கியத்தை அறியப் பெற்றும் சுந்தரதேவன் மகளை விசாரிக்க அந்தப் பக்கமே எட்டிப் பார்க்கவில்லை.

குமாரனுக்கு ஜீவ ஓட்டம் மெதுவாக நின்று கொண்டு வரவும் சுதா கூவி யழ, சாந்தமே உருவெடுத்த குமாரன் இளம் தண்டுபோன்ற சுதாவினிரு கரங்களையும் பற்றி, "குழந்தாய், பெற்ற மக்களினும் மேலாய் என்னைக் காத்து ஆதரித்த என்னருமை மனோகரியே, கணவன் இட்ட கோடு தாண்டி நடவாத உத்தமப் பத்தினியே, என்றுமுன் மாங்கல்யம் காந்தியுடனிருக்கட்டும்" என ஆசீர்வதித்தான். சற்று நேரத்திற்குள் அவன் சுகுந்தமான உலகத்தை அடைந்தான். அங்கோ, தனம், தனமின்மை—ஏழை, தனவந்தர்—பொறாமை, பொறாமையின்மை—கஷ்டம், சுகம் எவ்வித கலவர சமாசாரமே கிடையாது; சாந்தியான உலகம், அதை அவன் அடைந்துவிட்டான்.

எவ்விதமோ பரிதாபகரமாய்ச் சுதா யாரார் காலைக் கட்டி அழுதோ, என்ன என்னவிதமாய்க் கெஞ்சியோ ஒருவிதமாய்மாமனுக்குச் சாமக்கிரியைகளைச்செய்து முடித்தாள்.

நிற்க, சாந்திமந்திரத்தில் ஒரு நாள் ஒரு பிச்சைக்காரி வெகு துக்கமுகத்துடன் வாயிலில் நின்றுகொண்டு பிச்சை கேழ்க்கப் பதினாறே வயதுடைய ஒரு இளம்பாவை அழகான ஆடையாபரணங்களணிந்தவளாய் ஒரு பிடியரிசியுடன் வெளியே வந்து இரப்பவளுக்குப் பிச்சையிட்டாள்.

பிச்சைக்காரி இன்னும் ஏதாயினும் கிடைக்கும் என்ற ஆசையுடன் நிற்பதைக்கண்ட ஓர் ஊழியன் "சீ! புறப்படு; இன்றுனக்கிதுதான் கிடைக்கும்—நாளை விசாழன் அன்று அம்மணிக்கு விவாகம்—அன்று வா—அம்மணி உனக்கு வயிறு நிறையச் சோறிடும்" என்று துரத்திவிட்டான்.

சாந்திமந்திரம் வெகு அழகாய்ச் சிங்காரிக்கப்பட்டு உள்ளும் புறமும் அந்தந்த இடங்களுக்கேற்றபடி நாற்காலிகள், சாய்மான ஆசனங்கள், பஞ்சணைகள் முதலியன அமைக்கப்பட்டு இந்திரலோகம் போல் விளங்கியது.

காலையிலிருந்து வாத்திய கோஷங்கள் கோஷித்துக்கொண்டேயிருந்தது. குயிலைப்போன்ற குரலையுடைய ஸ்திரீகள் ரீங்காரமாகப் பாடிக்கொண்டிருந்தனர். இன்னொருபுறம் அழகான ஆட்டக் கச்சேரி ஆடம்பரமாய் நடைபெற்றுக் கொண்டிருந்தது. உலகத்தின்கண்

உற்பவித்த மானிடர் யாவருமே அங்குற்றது போலச் சாந்திமந்திரம், எள்ளிட்டால் கீழே விழாது என, அவ்வளவு கூட்டத்தால் நிறையப் பெற்றிருந்தது. இவ்வளவு வைபவமும் அகல்யைக்குக் கல்யாணம் என்றே. வாத்திய கோஷங்கள் பலத்தன. ஸ்திரீகளும் புருஷர்களும் ஆரவாரிக்கலாயினர். முகூர்த்த நேரம் சமீபித்துவிட்டது. மணமகள் சகல அலங்கிருதையாய் மணமண்டபத்தருகே காத்துக்கொண்டிருக்கிறாள்! 'மணமகன் எங்கே—மணமகன் இன்னும் மங்களஸ்நானம் செய்யவில்லையோ?' என்று கூச்சலிட்டனர். யாவரும் விந்தை கொண்டனர். மணமகள் கொஞ்சம் திடுக்கிட்டனள்; சுற்றுமுற்றும் மணவாளனது வரவை எதிர் பார்த்தாள். ஒரு சிறு குழந்தை ஓடி வந்து "அக்கா, நீ அத்தானையா பார்க்கிறாய், அவர் தோட்டத்தின் வழியாகப் போனாரே" என்றது. திடீரென அகல்யை மணப்பந்தலை விட்டுப் புறப்பட்டாள். அவளது முகக்கமலம் வாடியது. கண்கள் சோர்வுண்டது, அங்கம் பதறியது. இவ்வளவிற்கும் காரணம் அவளது இருதயத்திலுண்டான அச்சமே! யாவரும் "கல்யாணப் பெண்ணே, மணப்பெண்ணே, அபசகுனம் செய்யாதே" என்று கூவினர். சிலர் தடை செய்தனர். அகல்யை ஒன்றும் கூறாமல் தோட்டத்தின்பக்கம் ஓடினாள். புற்றுகளிலும் புதர்களிலும் வேலிகளின் ஓரங்களிலும் ஓடி ஓடித் தேடினாள். யாவரும் அகல்யைக்குப் பைத்தியமே பிடித்துவிட்டதென்றெண்ணினர்.

அங்கு மிங்கும் அலைந்ததில் மணமகனை வித்தியாதரன் ஒரு பிச்சைக்காரியை, அவள் யார்—முந்திய வாரத்தில் ஒரு நாள் பிச்சையிடப்பட்ட பிச்சைக்காரி சுதாவே—அவளை மடிமீதிட்டுக்கொண்டே மரத்தடியில் மூர்ச்சையாயிருந்தான். என்ன காரணம்? என்ன நடந்துவிட்டது? பிச்சைக்காரியுடன் வித்தியாதரனுக்கு உண்டான நேசமோ இது? பிச்சைக்காரியை கோடீச்வரன் நேசிக்க என்ன காரணம்? அகல்யை ஸ்தம்பித்து நின்றாள். அவளைப் பின் தொடர்ந்து அவளது பெற்றோர், உறவினர் யாவரும் வந்திருந்தனர். அகல்யையை அவள் தாயும் வித்தியாதரனை அகல்யையின் தந்தையும் மூர்ச்சை தெளிவிக்க, மடியிற் கிடந்த சவத்தை மெதுவாக அழுதவண்ணமே புல்லின்மீது கிடத்தி வித்தியாதரன் அகல்யையைக் கட்டிக் கொண்டு "என் இன்பமே! என் செல்வமே! என்னையே நம்பின என் அகல்யே! நான் பாவியிலும் பாவிபடீ—இந்தப் பெண்ணின் வாழ்வையே கெடுத்துவிட்டேனடீ — வறுமை மிகுதியால் என் மனம் கசிந்துபோக யாருக்கும் கூறாமல் நான் ஓர் இரவு எனது ஏழைத் தந்தையையும் அருமை மனைவியையும் நடுக்காட்டில், விட்டு வெளியேறி, எங்கெங்கோ அலைந்து, வேலை வெட்டி செய்து, லட்சுமி கடாட்சம்என்மீது வீசப்பெறும் தனவந்தனானதில் இவர்களிருவரையும் மறந்தேபோனேன். போனவாரம் நீ இவளுக்குப் பிச்சையிடுகையில் மேல் மாடியிலிருந்து கவனித்த நான் இவளைச் சற்று சந்தேகப்படலானேன். அப்பொழுது எனக்கு என்ன காரணத்தாலோ எனது மனைவியின் ஞாபகமும் என் தந்தை ஞாபகமும் வர மனம் நொந்துகொண்டு பேசாமலிருந்துவிட்டேன். பிறகு இன்றைய தினம் பெரிய பிரதான வாயிலில் தற்செயலாய் இவளைச் சந்திக்க, நான் சந்தேக முற்று இவளை அனேக கேள்விகள் கேழ்க்க அவள் பயந்து தோட்டத்திற்குள் ஓடலானாள். நானுமவளைப் பின் தொடர, ஆ! அவள் பின்னும் பயந்து தான் திருடியல்லவென்றும், தனது கணவர் தன்னையும் தனது மாமனையும் வறுமையின் கொடுமையால் மனம் தாளாது விட்டுப்போனதாகவும், திரும்பி வருவதாகக் கூறிச்

சென்றவர் பல வருஷங்களாயும் திரும்பி வரவேயில்லை என்றும், பிறகு வயது சென்ற மாமனுமிறந்துவிட, தான் பிச்சை எடுக்கத்தலைப்பட்டதாகவும், கணவரது நினைவாலேயே தேகம் மெலிந்து கண்கள் குழிவுற்று ஒருகாலத்திற் கருமேகம் போன்றிருந்த அளகபாரம் ஜடைதிரிந்தது என்றும் இவள் கூறினாள். உடனே என் இருதயம் உடைந்துவிட்டது. எனது நா எழவில்லை. அங்கமெல்லாம் வியர்த்தது. "அடிகண்மணீ, உனது கணவன் உன்னை விட்டுப் பிரியுங்கால் உனக்கேதாவது கடிதம் எழுதியதுண்டா" என்று நான் வினவ, நான் அன்னியன் அவளைக் 'கண்மணீ' என்றதற்காக மனமிழந்தவளாய் பெருமூச்செறிந்து "ஐயா, அவர் எழுதி வைத்துப்போனக் கடிதம் இதோ இன்னமும் என்னிடமுள்ளது" எனத் தனது கந்தையினின்று ஓர் கடிதத்தைக் காண்பிக்க, ஆ! அது நான் இவளைப் பிரியுங்கால் எழுதிய இதுவே—இதோ இதை நீயே பார். இது எனது கையெழுத்தே. சுதாவென்னும் இவள் ஆ! எனக்காகப் பட்ட கஷ்டம் கொஞ்சமோ? ஈச்வரன் என்னால் நிராகரிக்கப்பட்ட அவளைத் தன்னிடம் சேர்த்துக் கொண்டதானது அவர் என்னைப் பார்த்து "ஏ, பாவி! உன்னால் நிராகரிக்கப்பட்ட இப்பேதைக்கு வேரிடமில்லை என்றே எண்ணினாய்; இனிமேல் அவளை எண்ணி மனமழிந்துபோ" என்று சாபமிட்டாற்போலிருக்கிறது—ஐயோ அகல்யே—நானிரு பெண் ஜன்மத்தை மோசம் செய்தவனாய் விட்டேனே—ஆ, இவள் தனது உத்தம ஜீவனை உடலை விட்டு என் மடியிலேயே நீத்தனளே" என்று கதறி அழுதான். அகல்யைக்குண்டான வியப்பும் விசனமும் இவ்வளவவ்வளவல்ல. அவளது பெற்றோர் வித்தியாதரனை மோசக்காரன் என ஏசினர்.

அகல்யை மனதைத் திடப்படுத்திக் கொண்டு காதலனைக் கண்ணைத் துடைத்துத் தேற்றி "அன்பரே, ஒரு சமயம் உங்கள் மனம் சிதறிப்போக மனைவியை விட்டுப் பிரிந்து விட்டீர். அது உமது பாபமல்ல, உம்மை வறுமையாக்கின அவ்வீசனின் திருவிளையாடலே. ஆனால் அந்தோ, பாழுலகம் பணத்தின் மீதே வாழ்கிறது, பணமே அதன் உருவம், பணமே அதன் தெய்வம்; தனத்தை அடைந்த வைபவத்தில் பெற்று வளர்த்த தந்தையையும், பரிவோடு காத்த மனைவியையும் மறந்தே போனீர். பணத்தின் மமதையானது உம்மை அண்டியது. அழகும், பணமும் நிறைந்த ஒரு புதிய மனைவியை அடைய உமது மனம் விரும்பியது. என்னை அடுத்து நின்றீர். ஆனால் அந்த வானத்தின் கண்ணுள்ள ஈச்வரனானவன் குற்றம் செய்வோரைத் தண்டிப்பதுடன் அவர்களுக்கு அதன் கஷ்டங்களைச் சகித்துக் கொள்ளத் திடமான மனதையளித்திருக்கிறார். செய்த பாபங்களை உமக்குணர்த்தின அந்தப் பரமநாதனின் அருளால் கிடைத்த திடத்தைக் கொண்டு மனதைத் தேற்றிக்கொண்டு இனி நல்வழிப்பட்டு வாருங்கள். இறந்துபோன உமது முந்தியமனைவியைக் கிரமப்படி அடக்கம்செய்து விடுங்கள். பரம பக்தியுடைய அந்த வனிதையானவள் உங்களது வரவிற்காக இதுவரைக் காத்திருந்து உங்களைத் தேடிப் பிடித்து உங்களது மடியில் பிராணனை விட்டதானது "பேதாய், உன் மனம் கல்லாயினும் உருகும். என்னை நினைத்துஅழு" என்பது போலும்; ஆகையாலினியாவற்றையும் மறந்து,நடக்கவிருக்கும் சுபகாரியத்திற்கு ஆயத்தப்படும்," என்றாள்.

வித்தியாதரன் தனது காதலியை மார்புரத் தழுவினான். "அகல்யே, சுதாவைப்போல நீயும் ஒரு தேவதையின் சக்தி போலும்; இல்லையெனில் இவ்வளவு புண்படுத்தக்கூடிய சங்கதிகளைக் காதிற் கொண்டும் நீ உறுதிவாய்ந்திருப்பதரிதே. என் மீது நீ வெறுப்புறாமல் எனது துக்கத்தை ஆற்றுவதானது என்னைப் பிரமிக்

கச்செய்கின்றது. எனது பாபங்களை எனக்குணர்த்துகிறது. என் மனதை ஓர் கோடாலியால் அது பிளக்கின்றது. கடவுளும் என்னை மன்னிப்பதருமையே" என்றான். அகல்யை அவனைப் பலவாறு தேற்றி "நாதா, உலகம் ஒரு மாயை; அதில் நாம் உண்மையைக் கடைப்பிடித்து நல்வழிப்பட்டு நடப்பதைத் தவிர்த்து நமக்கு வேறு வழியேயில்லை. அப்படி நடப்போமாயின் அதன் பின் நமக்கெவ்வித கதி கிடைக்கும் என்று நாம் நினைப்பதும் முடியாத காரியம். இவ்விதமான பல சங்கதிகள் உலகம் முடியும் மட்டும் அஞ்ஞானிகளான மனிதர்களால் ஆங்காங்கு நடைபெற்றிருக்கிறது, நடைபெற்றுக்கொண்டுமிருக்கிறது, இன்னமும் நடைபெறும். ஆகவே விதியின் பயனாய் நடந்த இவைகளால் மனம் சோராமல், கணவரே, என் கையைப்பிடித்து என்னை ஏற்றுக்கொள்ளும்' என்று வேண்டினாள்.

சுதாவின் மெலிந்த பிரேதத்திற்கு வித்தியாதரன் அழுதுகொண்டே கிரியைகள் செய்தான். அகல்யை தெய்வத்திற்கு நோன்பிருந்து இனிமேலும் வித்தியாதரனுக்கு மனச் சங்கடங்கள் நேராதிருக்க வேண்டினாள்.

அடுத்த முகூர்த்தத்தில் வித்தியாதரனுக்கும் அகல்யைக்கும் அழகாக விவாகம் நடந்தேறியது. பெற்றோர்கள் மனம் வெறுத்தும் அகல்யை தான் முதலில் வரித்த கணவனையே மணந்து சுகமே வாழ்ந்து வந்தாள்.

ஓம் சுபம்.

நாகரிகமென்பது எது?

(ஸ்ரீமதி வைதேகி.)

நாம் வசிக்கும் இப்பாரதநாடு ஆதிகாலம் தொட்டுச் செல்வத்திலும், கல்வியிலும், சிற்பத்திலும், இன்னும்அநேகவித கலைஞானத்திலும், வியாபாரத்திலும், இவைக்கெல்லாம் மேலான ஆத்ம விசாரத்திலும் மற்ற தேசங்களைவிட உயர்ந்ததாக விளங்கிற்றென்பது அனைவரும் அறிந்த விஷயமே. அத்தகைய இந்நாட்டில் தற்போது இயற்கைச்செல்வம் குறையாமலிருந்தும், இந்நாட்டு ஜனங்களில் பெரும்பான்மையோர் குடிக்கக் கஞ்சி இல்லாமற் தவித்து இதர தேசங்களுக்கு அடிமைகளாக வெளியேறிப்போய்க் கொண்டிருப்பதை யாவரும் அறிந்திருந்தும் இதற்குக் காரணம் என்னவென்பதைப்பற்றி யோசிப்பவரும், அதற்காகப் பாடுபடுபவரும் அபூர்வமாகவே யிருக்கிறார்கள். அவ்வாறு யாராகிலும் ஏதாவது சொன்னாலும் அதைக் கேட்பவரும் மிகச் சிலரே.

அயல் நாட்டார் அநாகரிகர்களான காட்டு ஜனங்களாக இருந்தபோதே நம் பாரத நாட்டார் பெரிய இராஜ்யங்களை ஸ்தாபித்து ஆண்டு வந்தார்கள். வியாபாரத்திலும் மிகவும் உயர்ந்த பதவியை அடைந்திருந்தார்கள். இந்த தேசத்துப் பொருள்களையும் வேலைத் திறமையையும் பார்த்து பிற நாட்டார் பிரமித்தார்களென்று நம் தேச சரித்திரத்தில் படித்திருக்கிறோம்.

காலத்தின் கொடுமையினாலோ, ஜனங்களின் மதியீனத்தினாலோ, அல்லது தமக்குள் ஒற்றுமை இல்லாமற் பிறருடைய உதவியை எதிர்பார்த்து அதிலிருந்து அவர்களுக்கே அடிமைகளாகவும் ஆனதினாலோ எல்லாவித சீரும் சிறப்பும் குலைந்து, மனோவலிமையும் சரீர வலிமையும் குன்றிப் பஞ்சைகளாக வாழநேர்ந்தது. புருஷர்கள் அடிமைகளானதினால் தமக்குள் அடங்கி யிருக்கும் ஸ்திரீகளையும் அடிமைக

ளாக்கி அவர்களுக்கு யாதொருவிதமான சுவாதந்திரியமும் கொடுக்காமல் அவர்களை பிரஜாசிருஷ்டிக்குக் காரணமான இயந்திரமாகக் கருதலானார்கள்.

இதனால் நம் தேசத்து ஸ்திரீகள் ஒன்றுமறியாத நிரக்ஷரகுக்ஷிகளாகிக் குழந்தைகளைப் பெற்று வளர்ப்பதை மாத்திரம் கவனித்துக் கொண்டு வந்தார்கள்.

நாளடைவில், கல்வியின்மையினால் மனோவலிமையும் பாலிய விவாகத்தால் சரீரவலிமையும் குறைந்துகொண்டே வந்துவிட்டது.

ஒரு காலத்தில் நாகரிகத்திற்கு முதன்மை ஸ்தானத்தை வகித்துப் பிறகு எல்லாம் அழிந்துபோய் மறுபடியும் நாகரிகர்களாக ஆவதற்கு நம்மவர் பிரயத்தனப்படுவது சுமார் 50 வருஷங்களுக்கு மேலாகிறது. அவ்வெண்ணம் கொஞ்சம் கொஞ்சமாகப் பரவி சுருசுருப்பாக வேலை செய்ய ஆரம்பித்துத் தற்போது நம்மவர் தாங்கள் நாகரிகர்களாக இருப்பதாகவே எண்ணுகிறார்கள். இவர்களுடைய நாகரிகம் அநேகவிதமாக இருக்கிறது. முக்கியமாக ஸ்திரீகளின் நாகரிகத்தைப் பற்றிச் சிறிது கவனிப்போம். அவை பின்வருமாறு:—

(1) பெரிய பரீக்ஷைகளில் தேறி உயர்தர பட்டங்களைப் பெற்று உத்தியோகங்கள் பார்த்து நடை, உடை பாவனை முதலியவைகள் எல்லாவற்றிலும் மேனாட்டாரைப்போல் இருக்க வேண்டுமென்று நினைத்து அதுதான் முன்னுக்கு வரக்கூடிய நாகரிகமென்பவர் சிலர்.

(2) உயர்தரப் படிப்பைமாத்திரம் படித்துவிட்டு மற்ற விஷயங்களில் டாம்பீகமில்லாமலிருப்பதுதான் நாகரிகமென்பவர் சிலர்.

(3) ஏதோ சிறிது எழுதப் படிக்கத் தெரிந்தால் போதும். ஆடையாபரணங்களை மாத்திரம் பிறர் மெச்சவேண்டுமென்ற ஆசையினால் புதிது புதிதாக அணிந்துகொண்டு, தம் பூர்வ ஆசார விவகாரங்களிற் சிறிதும் பிசகாமலிருப்பதாக எண்ணிக்கொண்டு பார்வைக்கு ஆடம்பரமாக இருப்பதுதான் நாகரிகமென்பவர் சிலர்.

(4) நல்ல படிப்பு இருந்தும் உலக ஞானமாவது, தேசாபிமானமாவது சிறிதுமில்லாமல் ஒருவிதத்திலும் நமக்கு ஒவ்வாதபடி உடுத்து அலங்கரித்துக்கொண்டு புருஷருடன் உலாவப் போவதும், வேடிக்கை விநோதங்களுக்குப்பெரிய கூட்டங்களிற் தாராளமாகப் பிரவேசித்தும் தாங்களே ஒரு வேடிக்கைக்குக் காரணமாகிறார்கள். இவ்வாறு நடந்துகொள்ளுவதுதான் முன்னுக்கு வரக்கூடிய நாகரிகமென்று நினைப்பவர் சிலர்.

(5) ஜீவாதாரத்திற்கு முக்கியமாக வேண்டிய ஆகாராதிகளைத் தயார் செய்வதில் சிரமப்படுவதால் பலஹீனம் உண்டாவதாக நினைப்பதோடு நம் தேசத்து ஆகாரங்களிலேயே சரீர புஷ்டிக்குத் தேவையானவை இல்லை என்று நினைத்து, மேனாடுகளிலிருந்து வரும் சிற்றுண்டிகளை மாத்திரம் விசேஷமாக உபயோகித்து ஏற்கெனவே உள்ள சக்தியையும் பாழாக்கிக்கொண்டு, குடும்ப வேலைகளைக்கவனியாமல், உல்லாசமாக உலாவுவதுதான் தேசமுன்னேற்றத்திற்கான நாகரிகமென்பவர் சிலர்.

(6) மேனாட்டாரைப்போல் குழந்தைகளை வளர்க்கவேண்டுமென்று நினைத்து அவர்கள் குழந்தைகளை செவிலித்தாய்மாரிடத்திலும் ஆயாக்களிடத்திலும் விடுவது போல், நம் தேசத்து அனுபவமில்லாத கூலி வேலைக்காரர்களிடம் ஒப்பிவித்து விடுகிறார்கள். ஆனால் மேனாட்டார் குழந்தைகளைக் கவனிப்பதுபோல் கவனியாமலிருப்பதோடு தாங்கள் செய்வதுதான் ஜனமுன்னேற்றத்திற்கான நாகரிகமென்பவர் சிலர்,

(7) தாங்கள் கற்ற அற்ப வித்தையை நாளடைவில் சிரமப்பட்டு விருத்தி செய்துகொண்டு அதன் மூலமாகச் சிறிது உலக ஞானம் பெற்று தம்வீடுகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவும், நோயாளிகளையும் குழந்தைகளையும் தாமே கவனித்துக்குடும்பத்தில் ஆரோக்கிய பாக்கியத்தை உண்டு பண்ணவேண்டுமென்றும், சாவகாசம் கிடைத்தபோது உலக ஞானம் விருத்தியாகக் கூடிய பத்திரிகைகள், கிரந்தங்கள் முதலியவைகளைப் படிக்கவேண்டுமென்றும், கால தேச வர்த்தமானத்திற்கேற்றவாறு சிறிது நம் பழக்க வழக்கங்களைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்றும் அதுதான் தேச முன்னேற்றத்திற்கு உதவியான நாகரிகமென்றும் நினைப்பவர் சிலர்.

(8) தனவந்தர் கிராம வாழ்க்கையை அநாகரிகமென்று நினைத்து அனாரோக்கியத்தை உண்டாக்கும் பட்டணவாசம் செய்து அநேகவித நோய்களுக்கு ஆளாகி, வைத்தியர்கள் உதவியை அடிக்கடி எதிர்பார்த்து மேனாடுகளிலிருந்து தருவிக்கப்படும் டானிக்குகளை விடாமல் சாப்பிடுவதற்குப் பழக்கம் செய்துகொண்டு, இதையே நாகரிகமென்பவர் சிலர்.

(9) தம் பிள்ளைகள் பெரிய பரீக்ஷைகளில் தேறியிருப்பதால் அவர்கள் விவாகத்தின்போது விசேஷமாக வரதக்ஷிணைகள் வாங்கிப் பிறருடைய கஷ்ட சுகங்களைச் சிறிதும் கவனியாமல் தங்களுக்கு அனாவசியமாகயிருந்தபோதிலும் பெருமைக்காக வீண் செலவு செய்வதுடன் அதுதான் சமூக முன்னேற்றத்திற்கு உபயோகமான நாகரிகமென்று நினைப்பவர் சிலர்.

(10) தங்களுக்குப் படிக்கத் தெரிந்ததன் பலனாக நம் சமூக வாழ்க்கைக்கு உபயோகமில்லாதபடி விசேஷ வருணனைகளுடன் எழுதியிருக்கும் நாவல்களைப் படித்து, அவ்வாறு தாங்கள் இருக்கவேண்டுமென்று எண்ணி மோட்டார், கமலம், சில்க் முதலியவைகளை விசேஷமாகச் சேகரிப்பதுதான் சமூக முன்னேற்றத்திற்கு உபயோகமான நாகரிகமென்பவர் சிலர்.

(11) சம்சாரத்திலிருந்துகொண்டே உயர்தரப் படிப்புக்குஆசைப்பட்டு இருவழிகளிலும் மிகுந்த சிரமமெடுத்துக்கொண்டு முடிவில் ஒருவகையிலும் திருப்தியாக வேலை செய்யச் சக்தியில்லாமல் அதுதான் நாகரிகமென்கிறவர் சிலர்.

(12) நல்ல படிப்பென்றால் நம் இந்து மதக் கிரந்தங்களாகிய பாரதம், பாகவதம், இராமாயணம் முதலியவைகளைப் படிப்பதும், நமக்குத் தெரிந்த நல்ல விஷயங்களைப் பிறருக்குச் சொல்லியும்,ஜனசமூகத்திலொற்றுமை உண்டாக்குவதும், டாம்பீகமில்லாத வாழ்க்கையும்தான் நவநாகரிகமென்பவர் சிலர்.

(13) பந்துக்கட்டு என்பதை முற்றும் மறந்து தமக்குத் தாழ்ந்த ஸ்திதியிலிருக்கும் பந்துக்களை உதாசீனப்படுத்தி அலட்சியம் செய்தும், ஆஸ்தியிலும் அந்தஸ்திலும் தமக்கு மேலிருக்கும் பந்துக்களையும் இதரர்களையும் ஆசிரயித்து அல்லாடுவதல்லாமல் அதுதான் நாகரிகமென்று சாதிப்பவர் சிலர்.

(14) தேவர்கள், பிதுர்கள், அதிதிகள், பெற்றோர், பந்துக்கள் இவர்கள் கடனைத் தீர்க்கவே மானிட ஜன்மமெடுத்திருப்பதைக் கனவிலும் மறந்து, நித்திய கர்மானுஷ்டானங்களைத் துறந்து, மேற்சொல்லிய விதிப்படி நடப்பவர்களையும் ஏளனமாகப் பேசி, ஜாதி, மதம், குலம், கோத்திரம் இவைகளுக்கு முற்றும் மாறாக நடந்து, அதையே நாகரிகமென்பவர் சிலர்.

இவ்வாறாக நம் தேசத்து நாகரிகம் பலவகைப்பட்டிருக்கிறது. பாஷைகளிற் பலவகை, ஆசார அனுஷ்டானங்களிற் பலவகை, நடை, உடை முதலியவைகளிற் பலவகை

ஆக மொத்தத்தில், எல்லாவிதத்திலும் சிறிதும் ஒற்றுமை யில்லாமல் நம் தேசம் பாழாகிக்கொண்டு வருகிறது. தோட்டி முதல் தொண்டமான்வரை நவநாகரிகமாக வாழ வேணடுமென்ற எண்ணம்மாத்திரம் தற்போது நம்மவரிற் குடிகொண்டுவிட்டது.

மேலே சொல்லிய பலவகை நாகரிகத்தில்ஈடுபட்டு வரவுக்கு மிஞ்சிய செலவு செய்து காலக்கிரமத்தில் கடன்காரர்களின் உபத்திரவத்திற்குள்ளாகி, மனோ உத்சாகம், சரீர ஆரோக்கியம் எல்லாம் குறைந்து அகால மாணத்திற்கு வசப்பட்டுப் போகிறார்கள்.

இதற்குப் பின்வருமாறு ஜனங்கள் நடந்துகொண்டால் சிறிது பரிகாரம் உண்டாகுமென்று நம்புகிறேன். அதாவது :—

நம் இந்து மத மனு நீதியின்படி நான்கு ஆசிரமங்கள் உண்டு என்பது யாவரும் அறிந்த விஷயம். அதன்படி ஒவ்வொரு வாலிபனும் தன்னுடைய ஆயுட் காலத்தின் முதற்பாகமான பாலியத்தில் பிரும்மசரிய விரதத்தைக் கைக்கொண்டு முதலில் வித்தியாப்பியாசம் செய்து பிறகு ஏதேனும் ஒரு தொழிலில் அமர்வது அவசியம். ஒவ்வொருவனும் தன் சக்தி அந்தஸ்து இவ்வளவு என்று அறிந்து வரவுக்கு மீறின சிலவு செய்யாமல் வாழ்வதற்கு எவ்வாறு நடந்துகொள்ளவேண்டுமென்பதை அறிந்த பின்பு விவாகம் செய்துகொள்வது உசிதம். இதனால் ஒவ்வொருவனும் 22-25 வயதுக்குமேலேயே கிருகஸ்தாச்சிரமத்தை வகிக்க நேரும். இதிலிருந்து அநேகவிதத் துன்பங்கள் குறைவதுமல்லாமல் நல்ல படிப்பும் சிறிது உலக அனுபவமும் ஆன பிறகு சம்சார பாரத்தை வகிப்பதால் அநேகமாக வறுமையின் தொந்திரவு குறையும்.

இதே மாதிரியாக ஒவ்வொரு பெண்ணையும் பெற்றோர்கள் 15-வயது வரை வித்தியாப்பியாசம் செய்வித்துப் பிறகு 2, 3 வருஷங்கள் குடும்பப் பழக்க வழக்கங்களைப்பற்றி நன்றாகத் தெறிந்து கொள்ளும்படி செய்து அப்புறம் அவர்களை கிருகஸ்தாச்சிரமத்தில் சேரும்படி செய்தல் அவசியம். இதனால் ஸ்திரீ குமார் 18, 19 வயதுக்கு மேல் சம்சார பாரத்தை வகிக்கும்படி நேரும்.

மேலே சொன்னதையும் நவநாகரிகத்தில் பல துறைகளில் ஒன்று என்று நம்மவர் அறிந்து அதன்படி நடந்தால் தற்போது நம் ஜனங்கத்தின் க்ஷீணதசைக்கு முக்கிய காரணமான அகாலப்பிரசவமும், சிசுமாணமும் பாதிக்கு மேல் குறையும். இரண்டாவதாக வீண் ஆடம்பரத்தில் மனம் ஓடாமல் நல்ல படிப்பினால் புத்தி விசாலமடைந்து இல்லறத்தை நல்லறமாக்கிக்கொண்டு வாழச் சக்தி உண்டாகும்.

தற்போது ஒரு கிருகஸ்தன் மனமானது தூண்டில் அகப்பட்டுக்கொண்ட மீன் போலத் தத்தளிக்கிறது : எவ்வாறெனில்:— பெற்றோர்கள், சகோதரர்கள், மனைவி முதலியவர்களைத் திருப்தி செய்யவேண்டும், பெண்களின் விவாகத்திற்கு ஆயிரக்கணக்கான பணத்தை வாரி இறைத்து விவாகம் செய்தும் மாப்பிள்ளைகளின் மனம் திருப்தியாவதில்லை. பிள்ளைகளைப் பெரிய பட்டங்கள் பெருவதற்காகப் படிக்க வைப்பதுடன் அவர்கள் சம்சார பாரத்தையும் வகிக்க நேருகிறது. இவ்வாறாகத் தம் சொந்த குடும்பச் சிலவுக்கு ஒருவன் சம்பாத்தியம் போதாமல் தம்மால் இயன்றமட்டும் சிரமப்பட்டுத் திரவியம் சேகரிக்கும் ஒரே எண்ணத்தால் கிருகஸ்தாச்சிரமத்தின் முக்கிய நோக்கமான பரோபகாரமென்பதைப் பூராவும் மறந்து விடுகிறார்கள். தற்போதியநவ நாகரிகத்தால் எல்லாருக்கும் மனப்புழுக்கமே யல்லாது மனோ சாந்தி உண்டாவதில்லை.

இது மாத்திரமல்லாமல் ஏழை பணக்காரன் என்னும் வேற்றுமையில்லாமல் சிறுவர்கள் பழகுவதற்கு குருகுலம் அல்லது போர்டிங் பாடசாலைகள் விசேஷமாயிருக்க வேண்டியது ஒரு முக்கியமான விஷயம்.

இவ்விஷயத்தில் முக்கியமாக தனவந்தர்களுடைய உதவிதான் அதிகமாகத்தேவையாயிருக்கும். இந்த குருகுல வாசத்தினால் ஒவ்வொருவரும் சமூக ஊழியம் என்பதை இன்னதென்று எளிதில் உணரச் சக்தி உண்டாகும். அதுவுமல்லாமல் குருகுல வாசம் செய்த பின்பு வெளிவந்த யாரும் தம் முன்னோர்களின் சம்பாத்தியம், அறிவு முதலியவைகளைப்பற்றி வீண் பெருமை பாராட்டமாட்டார்கள். ஒவ்வொருவனும் தன் சக்தியை அறிந்து வேலை செய்வதால் நம் தேசத்து ஜனங்களை வாட்டி வரும் வறுமையின் கொடுமை பெரிதும் குறையலாம்.

பொதுவாக சமூக முன்னேற்றத்திற்குவேண்டிய சாதனங்களைச் செய்வதே நவ நாகரிகமாகக் கருதி நம்மவர் அவ்வாறு செய்வதே நமது கடமையாகும். அதற்குக் கடவுள் துணை புரிவாராக.

நூர்ஜஹான் அல்லது
பரதகண்டத்துச் சௌந்தரியக்கொடி.

(ஸ்ரீமதி பாகீரதியம்மாள்)

(402-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஒன்பதாவது அத்தியாயம்.

விடியற்கால சமயம். அவ்வேளைவரை நித்திரையிலிருந்த ஜகம் கண் விழித்தெழுந்தது. மேல் நீல நிற ஆகாயம். கீழோ தெளிவான ஜலப்பிரவாகம். அப்பிரவாகத்தில் ஒரு சிறு படகு போய்க்கொண்டிருந்தது. அப்படகில் அநேக ஜனங்களிருந்தார்கள், சிலர் அமீனாவின் கன்னியைக் கரத்திலேந்தி விளையாடிக்கொண்டிருந்தார்கள். பஞ்சைப் பந்துபோற் சுற்றி அதை ஆட்டின் பாலில் நனைத்துக் குழந்தைக்குக் கொஞ்சங் கொஞ்சமாய் அப்பாலைப் புகட்டி வந்தனர். இக்காட்சியைக் கண்ட அயாஸ் தான் காணுவது கனவோ அல்லது வாஸ்தவந்தானோ என சமுசயிக்கலானான். பாலை வனத்தில் முன்னாற் கண்டுள்ள மாயையான காட்சியைப்போல் இதுவுமிருக்கலாமோவென சந்தேகமுற்றனன். சத்தியமோ அல்

லது சொர்ப்பனமோ, சொர்ப்பனமோ அல்லது சத்தியமோ என மாறி மாறி எண்ணலுற்றனன். இவ்வண்ணம் எண்ணியிருக்குங்கால் அச்சிறு படகும் ஒரு கப்பலருகிற் போய்ச் சேர்ந்தது. அதிலிருந்த ஜனங்கள் இப்படகைக் கண்டவுடன் ஆனந்தத்தால் நாலா பக்கங்களிலும் உரக்க ஆரவாரஞ் செய்தனர். 'நாம் எங்கிருந்தோம்? எங்கு வந்தோம்?' என்று மனதில் நினைத்துப் பிரமைகொண்ட அயாஸ் படகிலிருந்த ஜனங்களுடன் தானும் கப்பலிலேறினன். ஒரு அரசனைக் குடிகள் எவ்வண்ணம் வரவேற்று உபசரிப்பார்களோ அவ்வண்ணமே கப்பலிலிருந்த ஜனங்களெல்லோரும் அயாஸை வரவேற்று உபசரித்தனர். அநேக வருஷங்களாய்ப் பாராத உறவினனொருவனை அவனது குடும்பத்திலுள்ளோர் காணுங்கால் எவ்வண்ணங் குதூகலிப்பார்களோ அவ்வண்ணமே அக்கப்பலிருந்தோரெல்லோரும் அயாஸைக் கண்டு குதூகலமடைந்தனர்.

அக்கப்பல் கந்தஹார் பிரதேசத்தில் ஒரு பெரிய வியாபாரியைச் சேர்ந்தது. அவன் வியாபாரஞ் செய்யும்பொருட்டு இந்துஸ்தானத்திற்குப் பிரயாணஞ் செய்துகொண்டிருந்தான். அவனுடன் அநேக ஜனங்கள், ஆடுமாடுகள், மற்றும் ஆகாரத்திற்கு வேண்டிய சாமான்கள் யாவுமிருந்தன. அவ்வியாபாரியின் ஆடம்பரங்களைக் கண்ட அயாஸ் ஆச்சரியமுற்றவனாய், இது ஈச்வரனது கிருபையே யெனநினைந்தான். ஒரு க்ஷணநேரம் தான் முன்னாற் கண்டுள்ள மாயையான சித்திரம் ஞாபகத்திற்கு வர அடுத்த க்ஷணத்தில் தன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு "அதைரியமடையும் மனமே! ஈச்வரன் உனக்குப் பெருத்த உபகாரத்தைச் செய்துள்ளான் என்பதைமட்டும் மறவாதே" எனப் பகர்ந்துகொண்டே அவ்வியாபாரியின் சரணங்களில் வீழ்ந்து வணங்கினன். அச்சமயம் அவ்வியாபாரி ஒரு அழகிய ஆசனத்திலமர்ந்தவண்ணம் ஹுக்கா குழாயை வாயினில் வைத்து சுகந்தத்தை வீசிவந்த புகையை அடிக்கடி வெளியில் விடுத்து வந்தான். சரணங்களில் வீழ்ந்துள்ள அயாஸை அவ்வியாபாரி மிக்க ஆதரவுடன் கரங்களேந்தித் தன்னினிடம் உட்கார வைத்தான். கொஞ்சநேரத்திற்குள் அவ்வியாபாரியின் ஆட்கள் நானாவிதமான பழங்கள் நிறைந்த தட்டுகளையும் விலையுயர்ந்த ஷர்பத்துகளையும் அயாஸின் முன் கொணர்ந்து வைத்தனர். அதைகண்ட அயாஸின் கண்கள் நீரால் நிரம்பின. வியாபாரியைத் துதித்துப் பிறகு தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தனனாயினும், பேச நாவெழவில்லை. ஒரு வார்த்தையேனும் அவன் வாயினின்றும் வந்தபாடில்லை. நேத்திரங்களிலோ நீர் வடிந்த வண்ணமிருந்தது. அவ்வியாபாரி இதைக்கண்டு மனஞ் சகியாதவனாய், அயாஸை நோக்கி "ஐயா! பசியாலும் தாகத்தாலும் உமது பஞ்சப் பிராணனும் ஒடுங்கி யிருப்பதாகத் தோன்றுகிறது. முதலில் இலேசாயினு முண்டு, உமது பசியையுந் தாகத்தையும் சாந்தி செய்துகொள்ளுவீராகில், பிறகு இந்நாள் முழுதும் பேசிக்கொண்டிருக்கலாம்" என்றனன்.

இவ்வண்ணம் வியாபாரி சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, அந்தப்புரத்து ஸ்திரீகளின் ஆதரவிலிருந்த அயாஸின் குழந்தையை ஒரு வேலைக்காரன் அவ்விடம் கொணர்ந்தனன். அவ்வியாபாரி மிக்க உற்சாகத்துடன் துர்ப்பாக்கியசாலியான அக்குழந்தையைத் தன் மடியிலிருத்தி அதிக வாத்ஸல்யத்தோடு விளையாடலானான். இவ்வாத்ஸல்யத்தைக் கண்ணுற்ற அயாஸ், ஆச்சரியமுற்று, அவ்வியாபாரியை நோக்கி, "ஸ்வாமி! இவ்விதம் என்னை வரவேற்று உபசரித்ததாலுண்டான ஆனந்தத்தால் எனது பசி தாகமெல்லாம் மாயமாகப்

பறந்தன. பஞ்ச பக்குவான்னத்துடன் உண்டதாகவே எனக்குத் தோன்றுகிறது. இதுவரை இவ்வுலகை நான் வெறுத்து வந்தேன். இவ்வுலகில் தங்களைப்போன்ற ஜனங்களும் இருக்கின்றார்களென இன்றே என் அனுபவத்திற்குத் தெரியவந்ததால், இவ்வுலகில் இச்சைகொள்ள ஆரம்பிக்கலானேன். இப்புவியின் கண்ணுள்ள யாவரும் இவ்வண்ணமேயிருக்கும்பக்ஷத்தில் சுவர்க்கத்தை யடைய யார்தான் கஷ்டப்படுவார்? இன்று நான் மிருத்யுலோகத்திலிருந்தும் சுவர்க்க சுகத்தையே அனுபவிப்பதாகத் தோன்றுகிறது. கடவுள் உமக்குத் தீர்க்காயுளைக் கொடுப்பார்" என்றனன்.

அவ்வியாபாரி அயாஸை இறுகத்தழுவி, பலவித தின்பண்டங்கள், மற்றும் பழங்கள் நிறைந்த தட்டுகள் முதலியவற்றை அவன் முன் வைத்துத் தன் தேச சம்பிரதாயப்படி தானும் ஒரு சிறு தட்டில் பழங்கள் முதலியவற்றை வைத்து அவனருகிலுட்கார்ந்து அயாஸை உண்ணும்படி உபசரித்தனன். பல நாட்கள் உபவாசமிருந்த அயாஸால் அதிகமாய் உண்ண முடியவில்லை. கொஞ்சமே உண்டானாயினும் பசிதாகமெல்லாந் தீர்ந்து அவனது தேகத்திற்குக் கொஞ்சம் வலிமையுண்டாயிற்று. கொஞ்ச நேரஞ் சென்றபின் தான் அனுபவித்துள்ள கஷ்டங்களை அவ்வியாபாரியிடஞ் சாற்ற ஆரம்பித்தனன். ஒரு பெரிய ஆசனத்தில் மிக்க ஆடம்பரத்துடன் வியாபாரி வீற்றிருக்க அவனருகில் தனது குமரியை மடியிலிருத்தி அயாஸ் இருந்தனன். இவர்களைச் சுற்றி வியாபாரியின் ஜனங்களெல்லோரும் மௌனமுடனுட்கார்ந்திருந்தார்கள். அந்தப்புர ஸ்திரீகளனைவரும் ஒருமித்து அயாஸின் சரித்திரத்தைக் கேட்கும்பொருட்டுக் காத்திருந்தார்கள். தன் இருதயேச்வரியின் சோகம் நிறைந்த நாடகத்தை அயாஸே நடத்திக் காட்டவேண்டியிருந்ததால், பிறகு கேட்பானேன்? அக்கப்பலிலிருந்த ஜீவனற்றவைகளும் அந்நாடகத்தைக் கேட்டுக் கண்ணீரைப் பெருக்கின. தாயையிழந்து, தந்தையின் மடியில் தூங்கிவந்த குழந்தையை அடிக்கடி விரலால் சுட்டிக் காட்டிய வண்ணம் அயாஸ் ஒவ்வொன்றையுஞ் சொல்லலுற்றான். அந்தப்புரத்தில் ஒரு பெரிய குழப்பமுண்டாயிற்று. அக்குழந்தையின் கதையைக் கேட்டுவந்த சில தருணிகள் மூர்ச்சித்தனர். சில ஸ்திரீகள் தம் காதுகளை விரல்களால் மூடி, 'அல்லா! அல்லா!!' என துக்கத்தோடு பகர்ந்து, அயாஸின் விருத்தாந்தத்தைக் கேட்காமலிருந்தனர். வயது மிகுந்த சில ஸ்திரீகள் தம் வேலைக்காரர்களை யனுப்பி, கதையை நிறுத்தும்படி அயாஸை வேண்டிக்கொண்டார்கள். இவ்விதமாக அங்கு பெருங் குழப்பமேற்பட்டது. கடைசியாக அயாஸ் தன் கதையைப் பூர்த்தி செய்ய எண்ணி, "விதியை வெல்ல யாரால் மாளும்? அமீனா! என் கண்மணி அமீனா!" எனத் துக்கத்தோடு கதறிக்கொண்டு மூர்ச்சித்தனன். உடனே அருகிலிருந்த சிலர் அவனைக் காற்றோட்டமாக யிருந்த இடத்திற்குத் தூக்கிச் சென்று படுக்க வைத்தனர். அவனது குழந்தையை அந்தப்புரத்து ஸ்திரீகள் எடுத்துச் சென்றனர். இவ்வண்ணம் அன்று அயாஸின் நாடகம் முடிந்தது.

மறுநாள் கப்பல் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டது. கண்ணினுமினிய தன சொந்த பூமியை விடுத்து விடுக்கு முன வேறொரு உபாயமுமறியாத அயாஸ் தன் புதிய மித்திரர்களோடு சிரித்தும் விளையாடியும் நாட்களைக் கழித்துவந்தான். ஆனால் அமீனாவின் விக்கிரகத்தைத் தன் இருதயமாகிய ஆலயத்திலிருத்தி, ஒவ்வொருநாளும் அமீனாவை மானசபூஜை செய்துவந்தனன். இனி இந்துஸ்தானத்தின் ஸ்திதியைப் பற்றிக் கவனிப்போம்.

சுகாதாரமும் தேசமுன்னேற்றமும்.

(ஸ்ரீமதி தேசாபிமானி)

நம் தேசத்தில் தற்போது சுகாதாரத்தைப்பற்றி கவனிப்பதற்காக அநேகமாக எல்லா ஊர்களிலும் வைத்தியர்களும் வைத்திய சாலைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் நம் ஜனத்தொகுதிக்கு வேண்டிய அளவு இல்லை. நம்மவரில் அநேகர் அறிவீனத்தால் கிடைக்கும் உதவியையும் கைப்பற்றாமல் விட்டுவிடுகிறார்கள். இதனாலுண்டாகும் நஷ்டத்திற்கு ஓரளவே இல்லை.

ஒரு தேசம் முன்னேற்றமடைவதற்கு அத்தேசத்திலுள்ள கல்விமான்களும் சரீரஆரோக்கியமுள்ளவர்களுமான பிரஜைகளே காரணர்களாகிறார்கள். இத்தகைய பிரஜைகள் உற்பத்தியாவதற்கு ஆண் பெண் இருபாலரும் சரீர ஆரோக்கியமுள்ளவர்களாகவும் மனோ உர்ச்சாகம் உடையவர்களாகவும் இருக்கவேண்டுமென்பதை யாவரும் அறிவர்.

தற்போது நம் தேசத்து ஓர் ஆண் பிள்ளையை விட அமெரிக்கா தேசத்து ஒரு பெண் அதிக பலசாலியாக இருப்பதாக சில மாதங்களுக்கு முன் நான் ஒரு பத்திரிகையில் படித்தேன். இதைவிட அவமானமானது வேறொன்றுமில்லை யென்றே நினைக்கிறேன். சுயேச்சையாக வாழும் புருஷர்களே இப்படி யிருந்தால் அவர்களுக்குள் அடங்கி வாழும் ஸ்திரீகளைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ!

ஆனால் நம் பாரதமக்கள் எக்காலத்திலும் இவ்வாறே பலவீனர்களாகவும் அநேகவித நோய்களால் பீடிக்கப்பட்டவர்களாகவும் நிருர்ச்சாகிகளாகவும் மனோவலி குன்றினவர்களாகவும் இருந்தார்களென்று நினைக்கக்கூடாது. முன்னொருகாலத்தில் அநேக நாட்டினர்கள் நாகரிகமென்பதை அறிந்து கற்றுக்கொள்வதற்கு முன்னமே நம் பாரத நாட்டார் எல்லோராலும் மெச்சத் தகுந்தபடி நாகரிகத்துடன் மேன்மையாக வாழ்ந்தார்கள். காலவசத்தால் எல்லாம் அழிந்து போய் மறுபடியும் புது நாகரிகம் நம்மவரின் (பெரும் பாலோருடைய) மனதைக் கவர்ந்துகொண்டது.

இதிலிருந்து நன்மையை விடத் தீமையும் உபயோகத்தைவிட உபத்திரவமுமே அதிகரித்தது. நம்மவரும் தம் ஆசார விவகாரங்களில் தம் முன்னோர்களுடைய பழக்க வழக்கங்களை முழுவதும் மாற்றிவிடாமல் சிலவற்றைப் புது நாகரிகத்தின்படி ஏற்றுக்கொண்டும் மற்றும் சிலவற்றை நம் முன்னோர்கள் செய்து வந்ததை அனுஷ்டித்தும் வந்தார்கள். இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு உண்டாகும் அனர்த்தங்களுக்கு எல்லையே இல்லையென்று சொல்லலாம்.

இவைகளில் முக்கியமாக முற்காலத்திய பால்ய விவாகமும் போதுமான அத்தாட்சியாக யிருக்கிறது. எவ்வாறெனில் முக்காலத்தில் விவாகம் சிறு வயதிலேயே ஆனபோதிலும் பெண்களைப் புருஷன் வீட்டிற்கு உடனே அழைத்துச் செல்வது கிடையாது. அக்காலத்தில் அநேகமாக எல்லோரும் கிராமவாசிகளாகவே யிருந்தார்கள். ஆகாரம் விஷயங்களிலும் தற்காலம்போல் இராமல் விசேஷ மாறுபாடுகள் இருந்தன. இதைப்பற்றிப் பின்னால் கவனிப்போம்.

இம்மாதிரியாக அநேக காரணங்களால் அக்காலத்துப் பெண்கள் ஆரோக்கியத்துடன்

15-16 வயதுக்கு மேலேயே பருவமடைந்து புருஷன் வீட்டிற்குச் சென்றார்கள். அவ்விடத்திலும் தம் மாமன் மாமி முதலியவர்களுக்குப் பணிவிடைகள் செய்தும் அவர்கள் சொல்லும் புத்திமதிகளைக் கேட்டுக்கொண்டும் குடித்தனம் செய்ய ஆரம்பித்தார்கள். இவர்களுக்குச் சாதாரணமாக 19-20 வயது ஆன பிறகுதான் குழந்தைகள் பிறந்தன. ஆகையால் அச்சமயம் தாயும் குழந்தையும் பூரண ஆரோக்கியத்தை அடைந்திருந்தார்கள். தாய்மாரும் தாம் பெற்ற குழந்தைகளை எவ்வாறு போஷிக்கவேண்டுமென்பதை நன்றாகத் தெரிந்துகொண்டிருந்தார்கள்.

இது நிற்கத் தற்காலத்துக் குடும்பங்களைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். இக்காலத்தில் பட்டணங்களில் வசிப்பவர்களே அதிகம். இப்போதும் பால்ய விவாகமே பெரும்பாலோரால் அனுசரிக்கப்பட்டு வருகிறது. இக்காலத்துப் பெண்களும் நாகரிகமாகக் கல்வி பயின்று வருகிறார்களே யல்லாமல் சரீரப் பயிர்ச்சிக்காக யாதொரு வேலையும் செய்வதில்லை. இதனால் மிகவும் அசுகசரீரிகளாகி 11-12 வயதிலேயே பருவமடைகிறார்கள். பழைய வழக்கப்படி உடனே சாந்திகலியாணமும் செய்து புருஷன் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

இத்துடன் நிற்காமல் புருஷர்கள் தாங்கள் உத்தியோகத்திற்குப் போகும் இடங்களுக்குத் தம் மனைவிமாராகிய இச்சிறுமிகளையும் அழைத்துச் செல்லுகிறார்கள். இவர்கள் உதவிக்காகப் பெரியோர்கள் போவதும் அபூர்வமாயிருக்கிறது. இதனால் தற்பொழுது நம் தேசத்துப் பெண்கள் சிறுமிகளாகப் பாவிக்கப்பட்டு, தம் பெற்றோர்களால் ஏவப்பட்ட வேலைகளைச் செய்துவிட்டு கவலை யில்லாமல் ஆரோக்கியமாகவும் சந்தோஷமாகவும் வாழவேண்டிய 13-14 வயதில் தம் புருஷர்களால் ஆசாரம் விவகாரம், பாஷை எல்லாவற்றிலும் முற்றும் மாறான தூர தேசங்களுக்கு அழைத்துச் சொல்லப்பட்டு ஒரு குடும்ப பாரத்தையும் வகித்துக் குடித்தனம் பண்ணவேண்டியிருக்கிறது.

சிறு வயதில் தாயார் வீட்டிலிருக்காமல் 5-6 வயது முதல் பள்ளிக்கூடம் போய்ப் படித்த பெண்களில் அநேகருக்கு வீட்டு வேலைகளை எவ்வாறு செய்யவேண்டுமென்பதுகூடத் தெரியாது. இப்படியிருக்கப் புருஷன் வாங்கி வரும் சாமான்களைக்கொண்டு ஆகாரம் தயார் செய்து தாமிருவருமாகச் சாப்பிட்டு சரீரம் ஆரோக்கியமாக இருப்பதற்காகக் காலதேச வர்த்தமானத்திற்கு ஏற்றவாறு நடந்துகொள்ள வேண்டுமென்பது இவர்களுக்கு எவ்வாறு தெரியும்? இதற்கிடையே இவர்கள் கர்ப்பவதிகளாகிறார்கள்.

இது நிற்க நம் தேசத்துப் புருஷர்களைப் பற்றி சிறிது கவனிப்போம். இவர்களுக்குக் குடித்தனம் பண்ணத் தொடங்கும்போது சுமார் 20—22 வயதுதானிருக்கும். இருந்த போதிலும் பணம் சம்பாதிக்கவேண்டுமென்ற ஒரே எண்ணத்தைத் தவிர வேறொன்றும் இவர்களுக்குத் தெரியாது. தாம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதே தெரியாதவர்கள் தம் மனைவிமாரை எவ்வாறு கவனிப்பார்கள்.

பெரிய நகரத்தில் வசித்தால் அவ்விடத்தில் புலப்படும் கண் காக்ஷிகள் என்னும் ஆனந்த சாகரத்தில் மூழ்கிப்போய் விடுகிறார்கள். தம்மையே மறந்து காலங் கழிப்பவர்களுக்குக் குடும்பத்தைப்பற்றிக் கவலையேது?

இதிலும் ஜீவனத்திற்கு வேண்டிய அளவு சம்பாத்தியம் ஒரு சிலருக்கே கிடைக்கிறது. தம் சொந்த ஊரில் 20ரூபாய் கிடைக்குமானல்

அதை விட்டு விட்டுப் பெரிய பட்டணத்தில் 50 ரூபாய் கிடைக்குமானால் அதை கௌரவமென்று நினைத்து அவ்விடங்களுக்குச் செல்லுகிறார்கள். இதென்ன ஆச்சரியம்! நகர வாழ்க்கையில் ஜனங்களுக்கிருக்கும் ஆனந்தமே இதற்குக் காரணமென்று சொல்லலாம்.

இச்சிறு சம்பாத்தியத்தைக் கொண்டு இவர்கள் பட்டணங்களில் வீடுகளென்று அழைக்கப்படும் கூண்டுகளில் வசிக்கிறார்கள். மிருகக்காக்ஷி சாலையில் கூடுகளில் வசிக்கும் மிருகங்களுக்காவது சுத்தமான காற்று ஏராளமாய்க் கிடைக்கும். பெரிய பட்டணங்களில் மனிதர் வசிக்கும் கூண்டுகள் போன்ற வீடுகளில் சுத்தமான காற்று விலைக்குத்தான் கிடைக்கும் போலிருக்கிறது. அதுவும் சந்தேகந்தான்!

புருஷர்களுக்காவது உத்தியோகத்திற்காக காலை மாலைகளில் வெளியிற் சென்று வருவதால் கொஞ்சம் நல்ல காற்று கிடைக்கும். தூர தேசங்களில் வெளியில் வாராமல் இக்கூண்டுகள் போன்ற வீடுகளில் வசிக்கும் ஸ்திரீகளின் சுகாதாரத்தைப்பற்றி என்னவென்று சொல்வது.

இவ்வாறிருக்கும் ஸ்திரீ புருஷர்கள் தங்கள் கையிற்கிடைக்கும் பணத்தை எவ்வாறு செலவு செய்கிறார்களென்றால்:— ஸ்திரீகள் பட்டினி கிடந்தாவது பணம் சேகரித்து ஆபரணங்களையும் விலை உயர்ந்த பட்டு ஆடைகளையும் வாங்குகிறார்கள். புருஷர்கள் கண்காக்ஷிகளுக்காகவும், நாகரிகத்திற்கேற்றவாறு ஆங்கிலேயரைப்போல் உடை உடுப்பதற்காகவும் செலவு செய்கிறார்கள். இவ்வாறாக இவர்களுடைய சம்பாத்தியத்தில் முக்கால பங்கு வீண் ஆடம்பரங்களிற் செலவாகிறது.

படித்த புருஷர்கள் கவனிப்பதில்லை; சிறுமிகளான ஸ்திரீகளுக்குத் தாங்கள் இன்னது செய்யவேண்டுமென்பது தெரிவதில்லை. அனுபவமுள்ள பெரியோர்களுடைய உதவியும் இவர்களுக்குக் கிடைப்பதில்லை. பெரிய பட்டணங்களில் வசிக்கும் தனவந்தர்களைப்போல் பார்வைக்கு ஆடம்பரமாக வாழவேண்டுமென்ற ஆசைமாத்திரம் நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது. இதனால் வீண் பேராசை என்னும் பேயால் தூரத்தப்பட்டு அனாவசியச் செலவுகளை விசேஷமாகச் செய்து தம் ஆரோக்கியத்தைக் கெடுத்துக்கொண்டும் சிறிது காலத்திலேயே நாச மடைகிறார்கள். அல்லது அநேகவித நோய்களுக்கு ஆளாகிறார்கள்.

இவ்வாறாக சரீர ஆரோக்கியத்திலும், கல்விக் குறைவால் மனோ உற்சாகமும் குறைந்தவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் எப்பேர்ப்பட்டவைகள் என்பதைச் சொல்லாமலே தெரிந்து கொள்ளலாம். இச்சிசுக்கள் பிறக்கும்போதே மிகவும் மெலிவுற்றிருக்கின்றன. தாயாரிடம் பாலிருந்து அதனால் வளரும் குழந்தைகள் சிறிது நல்ல ஸ்திதியில் இருக்கின்றன. புட்டிப் பால் போட்டி வளர்க்கப்படும் குழந்தைகளை என்னவென்று சொல்வது!

குழந்தைகளின் வயதுக்குத் தக்கவாறு எந்தெந்த சமயத்தில் எத்தகைய ஆகாரம் கொடுக்கவேண்டும், என்ன அளவு கொடுக்க வேண்டுமென்பது அநேகம் பேருக்குத் தெரிவதில்லை. குழந்தைகள் அழும்போதெல்லாம் பால் கொடுக்க வேண்டுமென்னும் ஒரு கெட்ட வழக்கத்தால் சிசுக்கள் கட்டி முதலிய அநேக வித நோய்களுக்கு இரையாகின்றன.

அவ்வாறு நோயுண்ட குழந்தைகளை உடனே கவனிப்பதில்லை. பால் கொடுத்தால் கட்டி உண்டாகும் என்னும் எண்ணத்தால் கேப்பை, ஜவ்வரிசி முதலியவைகளால் செய்யப்பட்ட கூழ்களைக் கொடுக்கிறார்கள். இன்னும் சிலர்

ஹார்லிக்ஸ் (Horlick's) ஆகாரம், மெல்லின்ஸ் (Mellin's) ஆகாரம், ஆலன்பரிஸ் (Alunbury's) ஆகாரம் முதலிய மோனுட்டு ஆகாராதிகளையும் கொடுத்து வந்த போதிலும், குழந்தைகளின் ஜீரண சக்தியைப்பற்றி சிறிதும் கவனிப்பதில்லை. இதனால் வயிற்றுப் போக்கு, மலச்சிக்கல் முதலிய நோய்களுக்கு இடமுண்டாகிறது.

இவ்வாறு நோய்களால் வருந்தும் குழந்தைகளைப் பணச் செலவுக்குப் பயந்து வைத்தியரிடம்காட்டாமல் தங்களால் இயன்றமட்டும் கண்டவர்கள் சொல்லும் மருந்துகளையெல்லாம் கொடுத்து அக்குழந்தைகளை மிகவும் துன்பத்திற்கு ஆளாக்குகிறார்கள்.

இதற்கிடையே ஜீவித்து வாழும் குழந்தைகளும் மிகவும் கொஞ்சமே. இவ்வாறாக முற்காலத்தில் முதற் குழந்தை பிறந்த வயதில் தற்காலத்தில் 2, 3 குழந்தைகளும் அதற்கிடையே 1, 2 அறை குறை கர்ப்பங்களும் உண்டாகின்றன. பிறந்த குழந்தைகளில் எல்லாம் ஜீவிப்பதும் அரிதே. ஒருவேளை உயிருடனிருந்த போதிலும் மிகவும் பலவீனமாகவே இருக்கின்றன.

தற்போது நம் பாரத நாட்டுச் சிசுக்களின் நிலைகள் இவ்வாறிருக்கிறது. தாம் பெற்ற குழந்தைகளைப் பரிபாலிக்கச் சக்தியற்றவர்களுக்கு சுதந்திரத்தால் என்ன பலன் உண்டாகும்? சுயராஜ்யம்தான் இவர்களுக்கு எதற்கு?

இதற்குப் பரிகாரம் எனக்கு ஒன்றுதான் புலப்படுகிறது. அதாவது, ஐசுவரிய வந்தர்களும் தேசாபிமானிகளும் ஆன வாலிபர்கள் வைத்திய சாஸ்திரத்தில் தேர்ச்சியடைந்து, முக்கியமாக ஏழைகளுக்குப் பரோபகாரார்த்தமாக மருந்துகள் கொடுத்து, நோயாளிகளுக்கு எவ்வித ஆகாரம்கொடுக்க வேண்டுமென்பதைக் திட்டம் செய்து, அவ்வாறு நடக்கிறார்களா வென்பதை கவனித்தால் தேசத்தில் சிறிது சுகம் ஏற்படுமென்று நம்புகிறேன்.

தற்போது சுகாதாரத்தைப்பற்றி கவனிப்பதற்கு சர்க்காரால் ஜில்லாவுக்கு ஒரு உத்தியோகஸ்தர்போல் ஏற்படுத்தப் பட்டிருக்கிறார்கள். இவர்களால் அந்த ஜில்லாவிலுள்ள எல்லா கிராமங்களுக்கும் சென்று கவனிப்பது சாத்தியமாக இல்லை. ஆகையால் சர்க்கார் மூலமாக இன்னும் அநேக உத்தியோகஸ்தர்களை ஏற்படுத்தி இவ்விஷயத்தைப்பற்றி கவனிக்கச் செய்வது அவசியமேயாயினும் இதனால் அதிகப் பிரயோஜனத்தை அடைய முடியாது.

பிரதி ஒரு கிராமத்திலும் கொஞ்சம் படித்தும் பூர்வீக ஆஸ்தியும் சிறிது உள்ளவர்கள் தம் சொந்த விவசாயம் முதலியவைகளைத் தாமே கவனிக்காமல் பிறரிடம் ஒப்புவித்து விட்டுப் பட்டண வாசத்தில் பிரியப்பட்டு அவ்விடங்களில் கிடைக்கும் சிறு சம்பாத்தியத்தைக் கொண்டு ஜீவிக்கிறார்கள். இச்சம்பாத்தியம் அவர்கள்சாப்பாட்டுச் செலவுக்குக்கூட போதிய அளவு இல்லாததால் காலக்கிரமத்தில் கடன் அதிகரித்து, பூமி காணி முதலியவைகளைச் சிறிது சிறிதாக விற்றுக் கடைசியில் மிகுந்த ஏழ்மை ஸ்திதியை அடைகிறார்கள்.

இவ்வாறு செய்யாமல் தம் சொந்த பூமியின் விளைவு முதலியவற்றைத் தாமே கவனித்துக் கொண்டும், தமக்குத் தெரிந்த படிப்பைக் கொண்டு அக்கிராம வாசிகளுக்கு அடிக்கடி சுத்தமான காற்று, சுத்தமான ஆகாரம், சுத்தமான ஜலம் இவைகளால் உண்டாகும் பிரயோஜனங்களையும் அசுத்தமானவைகளால் உண்டாகும் நோய்களைப்பற்றியும் எடுத்துரைப்பதால் விசேஷ பிரயோஜனம் உண்டாகும். கிராம வாசிகள் தமக்குவேண்டிய சௌகரியங்களைத் தாமே ஒன்று சேர்ந்து செய்து கொள்ளுவதால் சீக்கிரத்தில் பிரயோஜனத்தை அடைவதற்கு

சௌகரியமாக யிருக்கும். நம் தேசத்தில் கிராமவாசிகளுக்கும், பட்டணங்களில் வசிக்கும் பெரும்பாலோர்க்கும் தற்காலத்தில் ஜனங்களைக் கொள்ளை கொண்டு போகும் காசநோய், கபவாத சுரம், ஜன்னி முதலிய அநேகவித பயங்கரமான கொடிய நோய்கள் வந்தால் அந்த நோயாளிகளை எவ்வாறு கவனிக்கவேண்டுமென்பதைத் தெரிந்து கொள்ளாமலே நாசமடைகிறார்கள்.

ஒவ்வொரு கிராமம், ஊர் பட்டணங்களிலும் சுகாதாரத்தைப்பற்றிப் பொது ஜனங்களுக்கு உபதேசிப்பதற்காக வாரத்தில் ஒரு முறையாவது பொதுக் கூட்டங்கள் சேர்த்து இவ்விஷயங்களைப்பற்றி உபன்னியாசங்கள் செய்ய வேண்டும். சங்கங்கள் ஏற்படுத்தி அதன் மூலமாகச் சுகாதாரத்தைப்பற்றி வெளிவரும் பத்திரிகைகளை எல்லாரும் படிக்கும்படி செய்ய வேண்டும்.

இதனால் ஒன்றுமறியாதவர்களுக்கு மாத்திரமல்லாமல் தெரிந்தவர்களுக்கும் அடிக்கடி கேட்பதால் மறந்து போகாமல் ஞாபகம் உண்டாக்குவதால் அதிக பிரயோஜனத்தைக் கொடுக்கும். இவ்வாறு செய்தால் எல்லோரும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளப் பிரயத்தனப்படுவார்களென்று நம்புகிறேன். நோய் வந்த பிறகு கவனிப்பதைவிட அதை வரவொட்டாமற் செய்வதுசிறந்ததாகும். ஒவ்வொருவரும் "நோய்க்கு இடங்கொடேல்" என்னும் மூதுரையை மனதில் நினைத்துக்கொண்டு அதன்படி நடக்கப் பிரயத்தனப்பட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பால்ய விவாகத்தைப்பற்றி முதலில் எழுதி விட்டுப் பிறகு சுகாதாரத்தைப்பற்றி எழுதியிருப்பது ஏனென்றால் :—பால்ய விவாகத்தால்தான் அவ்வித க்ஷீணதெசை உண்டாயிருக்கிறது. ஆனால் விவாகமானவர்களை இனி மாற்றுவது சாத்தியமானதல்ல. அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளை பலசாலிகளாகவும் வளர்க்க வேண்டியது பெற்றோர்களின் முதற் கடமையாகும். குழந்தைகள் நல்ல ஸ்திதியில் வளர்ந்து பெரியவர்கள் ஆன பிறகு தானே அவர்களுக்கு விவாகம் செய்ய வேண்டும். ஆகையால் அதைப்பற்றிப் பிறகு கவனிப்போம்.

பிரபஞ்சத்தில் ஜென்மம் எடுத்த ஒவ்வொருவருக்கும் ஆரோக்கியம்தான் முதலில் தேவையானது. சரீரம் நல்ல ஸ்திதியிலிருந்தால்தான் சுறுசுறுப்புடனும் மனோ உற்சாகத்துடனும் வேலை செய்ய முடியும்; சரீரவலிமையும் மனோதைரியமும் உள்ளவர்கள் செய்யும் வேலைதான் சபலமடையும். இதனால் மனதிற்கு திருப்தியும் சாந்தியும் ஏற்படும். சாந்தகுண முடையோர்களுக்கு எக்காலத்திலும் சுகமே உண்டாகும். ஒவ்வொருவரும் இந்த சுகத்திற்காகத்தான் பாடுபடுகிறார்கள். தோணியில்லாமல் ஆற்றைக் கடப்பது எவ்வாறு அசாத்தியமோ அவ்வாறே சரீரமென்கிற தோணி நல்ல ஸ்திதியில் இல்லாவிட்டால் சம்சாரமாகிற சாகரத்தைத் தாண்ட முடியாது. அதனால் நாம் ஒவ்வொருவரும் முதலில் ஆரோக்கிய பாக்கிய மென்னும் சம்பத்தை அடைவதற்கு முயற்சிக்க வேண்டும். இதற்கு கடவுளும் துணைபுரிவாரென்று நம்புகிறேன்.

சுபம்.

மார்க்கோ போலோவின் யாத்திரைகள்.

(ஸ்ரீமான் S. R. அனந்த நாராயண அய்யர்.)

(409-ம் பக்கத் தொடர்ச்சி.)

பதினாறாம் அத்தியாயம்.

கம்பலுவிலுள்ள கூப்ளேகானது அரண்மனை—அதன் வருணனை.

கம்பலு நகரம் கத்தேயின் வடகிழக்கு எல்லையிலிருக்கின்றது. அங்கு கூப்ளேகான் பிரதி வருஷமும், டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி ஆகிய மூன்று மாதங்களையும் கழிப்பது வழக்கம். அங்கு அவரால் கட்டப்பட்ட புது நகரத்தின் தென்பாகத்தில் ஒரு பெரிய அரண்மனை யிருக்கிறது. இவ்வரண்மனைக்கு அகழினாற் சூழப்பட்ட எட்டு மைல் நீளமுள்ள சதுரமான மதில் ஒன்றுளது. இம்மதிலின் சுவர்கள் ஒவ்வொன்றிலும் ஒரு வாசல் உண்டு. வாசல்களின் உட்புறத்தில் ஒரு மைல் சுற்றளவுள்ள இடத்திற் காவலாளர்கள் கத்தியுங் கையுமாய் நின்று கொண்டிருப்பார்கள். இதற்கப்பால் ஆறுமைல் சதுரமுள்ள பின்னுமொரு மதிலுளது. அதன் தென் பாகத்தில் மூன்று வாசல்களும் வடபாகத்தில் மூன்று வாசல்களுமுண்டு. இம்மூன்று வாசல்களிலும் மத்தியிலிருப்பது மாத்திரம் மற்றவையினும் பெரிதாகவிருக்கும். அதைக் கூப்ளேகான் அவ்வழியாய்ச் செல்லும்போதுதான் திறந்து வைப்பார்கள். மற்றைய சமயங்களில் மூடி விடுவார்கள். மற்றைய வாயில்கள் சாதாரண ஜனங்களின் போக்கு வரவுக்காக எப்போதும் திறந்து வைக்கப்பட்டிருக்கும்.

இம்மதிலின் ஒவ்வொரு மூலையிலும் நடுவிலும் ஒவ்வொன்றாக இக்கோட்டைக்குள் மொத்தம் எட்டு அழகான மிகப்பெரிய அரண்மனைகள் இருக்கின்றன. இவைகளுள் கூப்ளேகானுடைய யுத்த தளவாடங்களான குண்டு மருந்துகளும் சகலவிதமான வேறு உபகரணங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு அரண்மனையில் குதிரைகளும், மற்றொன்றில் விற்களும் வில்லாளிகளின் வேறு ஆயுதங்களும், பின்னொன்றில் இருப்புக் கவசங்களும், மார்க்கவசங்களும், தோலினாற் செய்த வேறு கவசங்களும், அவ்வாறே மற்றைய அரண்மனைகளில் வேறு சாமான்களும் நிறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன.

மேற் சொன்ன இரண்டாவது வளைப்புக்குள் அதைப்போன்றதும் வெகு கெட்டியும் பத்தடி உயரமுமுள்ள பின்னுமொரு கோட்டையிருக்கிறது. அதன் ஆரங்கம் வெள்ளையாகவும், ஒரு மைல் தூரமுள்ள அதன் மதில்கள் முன்னவையைப்போலவே ஆறு வாயில்களையுடையனவாகவும் எட்டு அரண்மனைகளையுடையனவாகவும் இருக்கின்றன. இங்கு அரசனுடைய களஞ்சியங்கள் இருக்கின்றன. கடைசியாகச் சொல்லிய இவ்விரு மதில்களினிடையே அநேக அழகான மரங்களும், மான்களும் வேறு வேட்டை மிருகங்களும் வசிக்கும் பசும் புற்றரைகளு மிருக்கின்றன; அவைகளுக்கு வேண்டிய புல் இங்கு யதேஷ்டமாயிருக்கின்றது. இப்புல் கெடாமலிருப்பதற்காக இங்குள்ள பாதைகளெல்லாம் இரண்டு முழம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இங்கு குப்பையோ சேறோ ஒன்றுங்கிடையாது. இக்கடைசியான மதிலுக்குள்தான் கூப்ளேகானுடைய அரண்மனை யிருக்கின்றது. இதுவே

மனிதர் கண்ட அரண்மனைகளெல்லாவற்றிலும் பெரியது. இது வடக்கிலும் தெற்கிலுமுள்ள மதில்கள் வரைக்கும் பரந்து பிரபுக்களும் வீரரும் செல்லும் வாயில்களுடையதாயிருக்கின்றது. இதற்கு மச்சுக்கிடையாது. மிகவுயர்ந்த கூரைதான் ஒன்றுளது. இதன் தளம் பத்துப்பனை ஆழமுள்ள அஸ்திவாரமுடையது; அதைச் சுற்றிலும் இரண்டடி அகலமுள்ள சலவைக்கல்லாலான பாதைபோன்ற ஒரு சுற்றுச் சுவருமுண்டு. இவ்வரண்மனையைச் சுற்றியிருக்கும் சுவரின் வெளிப்புறத்தில் ஒருகோடியில் கம்பங்களுள்ள ஒரு அழகான சிறு கோபுரமிருக்கின்றது.

இவ்வரண்மனையின் கூடங்களிலும் அறைகளிலுமுள்ள சுவர்களில் பறக்கும் முதலைகள், சேனைவீரர்கள், பறவைகள், பல விதமான மிருகங்கள் ஆகிய இவைகளின் உருவங்களும் யுத்த சரித்திரங்களும் வரைந்து வர்ணந் தீர்க்கப்பட்டிருக்கின்றன. கூரையானது பொன்னிறமும் சித்திரமுமேயன்றி வேறொன்றுந் தெரியாவண்ணம் கட்டப்பட்டிருக்கின்றது. அரண்மனையின் ஒவ்வொரு கட்டிலும் அனேகம் ஜனங்கள் இருக்கக்கூடிய கூடமொன்றுளது. அறைகள் சிற்ப சாஸ்திர விதிப்படி வெகு நேர்த்தியாய் அமைக்கப்பட்டிருக்கின்றன; கூரை சிவப்பும், பச்சையும், நீலமும், மற்றும் வேறு வர்ணங்களுமுடையதாயிருக்கின்றது. அரண்மனையின் பின்புறத்தில் அரசனது பொக்கிஷங்களுக்கும், ஆபரணங்களுக்கும், ஸ்திரீகளுக்கும், வேறு சொந்தக் காரியங்களுக்கும் உபயோகப்படும் பெரிய அறைகளும் கிடங்குகளும் இருக்கின்றன.

கூப்ளேகானது அரண்மனைக்கு நேராக எதிரில் அவரது மகனான ஜிங்கிஸ்ஸுக்கு ஒரு அரண்மனையிருக்கின்றது. அது எல்லா விஷயத்திலும் அவன் தகப்பனது அரண்மனையை ஒத்திருக்கிறது. இவ்வரண்மனையின் சமீபத்தில் வடபாகத்தில் ஒரு மைல் சுற்றளவும், நூறடி உயரமும், எப்போதும் பச்சைப்பசேலென்றிருக்கும் மரங்களால் அலங்கரிக்கப்பட்டுமிருக்கும் மலையொன்றுளது. தூரதேசங்களில் வளரும் மரங்களெல்லாம் அரசனது ஆணைப்படி வேருடன் பெயர்த்து யானைகளின் மேலேற்றிக் கொண்டுவரப்பட்டு இங்கு நடப்படுகின்றன. இம்மலை எப்போதும் பச்சைப்பசேலென்றிருப்பதினால் இதற்குப் பச்சைமலையென்று பெயர். மலையில் ஓரிடத்தில் எதிரெதிராக இரண்டு ஏரிகள் வெட்டப்பட்டிருக்கின்றன. இவ்வேரிகளுக்கு அவற்றினிடையேயோடும் ஒரு சிறு நதியின் வழியாக மீன்கள் வருகின்றன. இம்மீன்கள் தப்பியோடா வண்ணம் இந்நதியில் தடைகளும் போடப்பட்டிருக்கின்றன. கத்தே மாகாணத்தில் ஒரு பெரிய நதியின் கரையிலுள்ள கம்பலு பட்டணமானது முற்காலத்தில் மிகப் பிரசித்தி பெற்றதாயும், இராஜதானியாயுமிருந்தது. கம்பலு என்ற இந்தப் பெயருக்கு "பிரபு அல்லது சக்கரவர்த்தியினது நகர்" என்று பொருள். இப்பட்டணத்தார் சக்கரவர்த்திக்கு விரோதமாகக் கலகஞ் செய்வார்களென்று சோதிடர்கள் தெரிவித்ததினால், கூப்ளேகான் தமது ராஜதானியை அரண்மனைகளுள்ள நதியின் மறுகரைக்கு மாற்றிப் பழைய நகரத்திலிருந்தவரையெல்லாம் "தைடு" என்னும் இப்புது நகரத்திற்கு வரும்படிக் கட்டளையிட்டார். இந்நகர் ஒவ்வொரு பக்கமும் ஆறு மைல் நீளமுள்ளதாயும், இருபத்துநான்குமைல் சுற்றளவுள்ளதாயுமிருக்கிறது. அதன் கோட்டைச் சுவர்கள் அடியில் பத்தடி அகலமுள்ளனவாகவும், வரவரச் சிறுத்து உச்சியில் மூன்றடியகலமுள்ளனவாகவும் இருக்கின்றன. அதன் அலங்கங்கள் வெள்ளையாயிருக்கின்றன. மதிற்

சதுரங்கம் ஒவ்வொன்றிலும் மூன்று பிரதான வாயில்கள் வீதம் இக்கோட்டையில் மொத்தமாகப் பன்னிரண்டு வாயில்களிருக்கின்றன. இவைகளின் மேற் பாகங்களில் சகல சாமான்களும் நிறைந்த அரண்மனைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அவர்கள் கூடும் மூலைகளில் சில கொட்டகைகளும் இருக்கின்றன. அங்கு ஒவ்வொரு வாயிலையுங்காக்கும் ஆயிரக் கணக்கான சேவகர்களது ஆயுதங்களெல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றன. கட்டடங்களெல்லாம் கோடு கிழித்தாற்போல் வெகு நேராகவுமிருக்கின்றன. ஆதலால் ஒரு கோட்டையின ஒரு வாயிலிலிருந்து அதன் எதிரிலிருக்கும் மறு வாயில் வரைக்குமுள்ள பட்டணம் ஏககாலத்தில் தடையின்றிக் கண்ணுக்குப் புலப்படுகின்றது. இங்குள்ள வீடுகள் குடிகளின் அந்தஸ்க்குத் தக்கபடி வகுக்கப்பட்டுத் தோட்டங்களும மண்டபங்களுமுடையனவாய் அரண்மனைகளைப்போல் இருபுறமும் ஆகாயத்தை யளாவி நிற்கின்றன. ஊரின் மத்தியிலுள்ள ஒரு கம்பீரமான கட்டடத்தில் ஒரு மிகப் பெரிய மணி தொங்குகின்றது. பிரசவ வேதனையிலிருக்கும் ஒரு ஸ்திரீக்கு உதவி செய்யவோ அல்லது அதைப் போன்ற வேறு அத்தியாவசியமான காரியமோ இல்லாதவர் இராத்திரி அந்த மணியடித்தபின் மறுநாட் காலை வரையிலும் வெளியே நடமாடுவது கூடாது. அப்படிச் செல்வோர் கையில் விளக்குப் பிடித்துச்செல்லவேண்டும.

கோட்டையைவிடப் பேட்டைகளிலே அதிக ஜனங்கள் வசித்து வருவதினால் கம்பலு பட்டணத்துக்கு வெளியே அதன பன்னிரண்டு கோட்டைகளையுமடுத்தாற்போல் மூன்று நான்கு மைல் நீளமுள்ள பன்னிரண்டு பேட்டைகள் இருக்கின்றன. இங்கு வர்த்தகர்களும் புறநாட்டாரும் வசிக்கின்றார்கள். உலகத்திலுள்ள ஒவ்வொரு நாட்டு வியாபாரிகளும் இங்குள்ள அனேகம் கிடங்குகளில் வியாபாரம் செய்து கொண்டு அக்கிடங்குகளிலேயே வசித்தும் வருகின்றனர்.

இறந்தவர்களது பிணங்கள் ஒன்றாவது இவ்வூருக்குள் தகனம் செய்யப்படுவதில்லை. விக்கிரகாராதனைக்காரரது பிணங்கள் பேட்டைகளுக்கப்பால் சுடப்படுகின்றன; மற்றையோரது பிணங்கள் அங்கே புதைக்கப் படுகின்றன.

அபரிமிதமான சரேசர்கள் இங்கு வசித்து வருவதினால் இந்நகரத்திலும் இதைச் சேர்ந்த பேட்டைகளிலும இருபதனையாயிரத்துக்கு மேற்பட்ட வேசிகள் வசித்து வருகின்றனர். இவர்களை மேல் விசாரணை செய்வதற்காக நூற்றுவருக்கும் ஆயிரவருக்கும் ஓரோர் அதிகாரியும், அவ்வதிகாரிகளுக்கெல்லாம் மேலாகப் பிரதமாதிகாரியொருவனும் உண்டு. இவர்களது வேலை யென்னவென்றால், புறநாட்டரசர்களின் தூதர்களாவது, அல்லது அரசனிடம் அலுவலகளுள்ள வேறெவராவது இந்நகருக்கு வந்து உபசரிக்கப்படுகையில் இந்தப் பிரதமாதிகாரி அந்த தூதனுக்கும் அவனது பரிவாரத்திலிருக்கும் ஒவ்வொரு புருஷனுக்கும் ஒவ்வொரு ராத்திரியும் ஓரோர் புதிய ஸ்திரீயை இலவசமாக அனுப்பி வைப்பான்.

இராத்திரியில் குறித்த காலத்துக்குப் பின் தெருக்களில திரிவோரைக் காவற்காரர்கள் சிறைச்சாலைக்கு இழுத்துச்செல்வார்கள். குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்பட்டால் அவர்கள் தடியாலடி பெறுவார்கள். "பக்ஷிகள்" மனிதரைக் கொன்று இரத்தவெள்ளம் உண்டு பண்ணுவது கூடாதென்று சொல்லுவதால், இக்குற்றவாளிகள் கொல்லப்படுவதில்லை, ஆயி

னும் இத்தடியடியினாலேயே அனேகர் இறந்து போகின்றனர்.

சக்கரவர்த்திக்கு ஒருவரைப்பற்றியும் பயமில்லையென்றாலும், ஆடம்பரத்துக்காக அவர் தம்மரண்மனையில் இராஜ விசுவாசமுள்ள சாவிடன் என்றழைக்கப்படும் பன்னிரண்டாயிரம குதிரை வீரரைத் தம் மெய்காப்பாளராக வைத்துக் கொண்டிருக்கிறார். இவர்கள் மூவாயிரம் பேருக்கு ஒருவனாக நான்கு தலைவர்களுண்டு. ஒருதலைவன அரண்மனையிலுள்ள தனது மூவாயிரம் வீரர்களுடன் மூன்றுநாள் இராபபகலாய் அரசனைக் காத்துவந்தபின் பின்னொரு தலைவன் தனது வீரர்களுடன் அந்த வேலையை ஏற்றுக்கொள்வான். இவ்வாறு வருடமுழுவதும் முறையாகப் பாதுகாபபு நடந்துவருகின்றது.

திருநாட்களில் போஜன காலத்தில் அரசன் கொலுமண்டபத்தின் வடபாகத்தில் மற்றையோரினும் உயர்ந்த ஆசனத்தில் இடப்பக்கத்தில தமது பிரதம பத்தினி அல்லது பட்டமகிஷியுடன் தெற்கு முகமாக எல்லா ஆடம்பரங்களுடனும் வீற்றிருப்பார். அச்சமயம் அவரது பிள்ளைகளும் அவரது உடன பிறந்தாரது பிள்ளைகளும, மற்றும் வேறு ராஜகுமாரர்களும அவரது வலபபக்கமாக வீற்றிருபபார்கள். இவர்களது ஆசனங்கள் மிகத் தாழ்வான இடங்களில அமைக்கபபட்டிருபபதால அரசனது காலகள் கூட இவர்களது கைகளுககு எட்டுவதலலை. ஆயினும் இளவரசனது ஆசனம் மாத்திரம மறறைய இராஜ குமாரர்களின் ஆசனங்களை விடக் கொஞ்சம் உயர்ந்ததாகவிருக்கும். அவர்களது மனைவிமாரும இவ்வாறே தங்கள் தங்கள் அந்தஸ்துக்குத் தகுந்த ஆசனங்களில வீற்றிருபபார்கள். முதலில அரசனது மக்களின் மனைவிகளும், உறவினரின் மனைவிகளும் இடப்பக்கத்தில் தாழ்ந்த ஓரிடத்திலும் பின்பு பிரபுக்களின் மனைவிமாரும், அப்புறம் தளகர்த்தர்கள், சீமான்கள் முதலியோரின் மனைவிமாரும் அவரவர் அந்தஸ்துக்கும் பதவிக்கும் தகுந்தபடி வீற்றிருப்பார்கள்.

இவ்வாறு அமைக்கப்பட்ட அம்மண்டபத்தில் தமது ஆசனத்திலிருந்தபடியே அரசன் தம்முடன் விருந்துண்ணுவோரைக் கண்ணுறுவார். இம்மண்டபத்தில் விருந்துண்ணுவோர் எல்லோருக்குமே உண்கலங்கள் மேஜைகளின் மேல் வைக்கப்படுவதில்லை. சேவகர்களிலும் பிரபுக்களிலும் அனேகர் கம்பளங்களின் மேலிருந்து உண்டியருந்துவார். அரசனும் மற்றையோரும் இவ்வாறு விருந்துண்ணுகையில் மனிதர் மண்டபத்தின் வாயிலை அணுகாவண்ணம் இரண்டு பெருத்த ஆட்கள் தடியுங் கையுமாய்க் காத்துவருவார்கள். யாரேனும மீறி வாயிலை மிதித்துவிட்டால் அவ்வாட்கள் அவர்களது உடைகளை உரிந்துவிடுவார்கள். அரசனது உத்திரவுப்படிக் கசையடி பெற விருப்பமுள்ளவர்கள் தங்களது உடைகளைத் திருமபப் பெறுவர். ஏனையோர் அவைகளை இழக்கவேண்டியதுதான்.

தாங்கள் விடும் மூச்சு அரசன் அருந்தும் அன்னத்தையும் பானத்தையும் தாக்காமலிருக்கும் பொருட்டு அரசனுக்குப் பரிமாறுவோரும் அவருடன் போஜனஞ்செய்வோரும் பட்டுத்துணியால் தங்களுடைய வாய்களை மூடிக்கொள்வார்கள்.

அரசன் பானஞ்செய்ய விரும்புகையில் அதை வழங்குங் கன்னிகை மூன்றடி பின் சென்று முழங்கால் பணிவாள். அச்சமயத்தில் பிரபுக்களும் ஏனைய விருந்தாளிகளும் ஒருங்கே முழங்கால் பணிவர். வாத்தியக்காரர் தங்களது வாத்தியங்களை வாசிப்பார்கள்.

(தொடரும்.)

Pear's Soap—பியர்ஸ் சோப்.

ஒரு சிறு கதை.

(ஸ்ரீமான் மா. அருணாசல முதலியார்.)

திருச்சினாப்பள்ளிக்கு மேற்கே 25 மைல் தூரத்தில் அகண்ட காவேரிக் கரையில் 'மகவாசி' என்ற சிறிய கிராமமிருக்கிறது. இவ்வூரில் விபூதி ருத்திராக்ஷதாரியாய் சிவபூஜா துரந்தரராய் சிவசாம்பமூர்த்தி என்று ஒரு பிராமணரிருந்தார். அவர் தேகமுழுதும் அணிந்திருக்கும் ருத்திராக்ஷங்களைப் பார்த்து சிறு பையன்கள் அவரை ருத்திராக்ஷ கோட்ஸ்டாண்டு (coat-stand) என்று கூப்பிடுவார்கள். இவருடைய பேரன் சென்னை பிரசிடென்சி காலேஜில் பி.ஏ. வகுப்பில் வாசித்து வந்தான். அதற்கு ஆறுமாதத்திற்கு முன் இந்தப் பையனுக்குச் சாந்திக் கல்யாணம நடந்தது. புது தம்பதிகள் சயனக் கிரகத்தில உற்சாகமாயிருக்குந்தருணத்தில அவனபத்தினி அவன சென்னையிலிருந்து லீவுக்கு வருமபோது அவளுக்கு நலல சாமானகள வாங்கிவரும்படிக் கேட்டுக்கொண்டாள். பையனுக்குப் பத்தினியின் வார்த்தை குரு உபதேசம போல எப்பொழுதும் மனதிலிருந்து லீவுக்குத் தான் புறப்படும் சமயத்தில பட்டணம் பாக்கு, மஞ்சள், உயர்ந்த சீட்டிகள், பியர்ஸ் ஸோப ஒரு பெட்டி (3 கட்டிகள) இவைகளை வாங்கித் தான கிராமத்திற்கு வந்ததும பத்தினியிடத்தில் சமர்ப்பித்தான. அவள் குக்கிராம வாசியாதலால ஸோப்பை பார்த்ததுமில்லை, உபயோகிக்கும விதமும் அவளுககுத் தெரியாது.

புது தமபதிகள், தாராளமாயப் பேசிக்கொளள பிராமணர்கள் வீடுகளில சௌகரியப்படாது. ஜாடைமாடையாய்ப் பந்துக்கள் பார்வையன்னியில பேசுவதே அசாதயமான விஷயம். கருப்புக்கட்டி மாதிரி பெட்டியிலிருக்கிறதை என்ன செய்கிறதென்று பெணசாதி கேட்க அதை தேகத்தில அழுக்குப் போக்குவதற்கு ஸ்நான காலத்தில் உபயோகிக்கிறதென்று பையன ஜாடை மாடையாய்ச் சொன்னான். பத்தினியும் ஸோப் கட்டியின் பிரயோஜனம் நன்றாய்த் தெரிந்ததாக வெண்ணி, கிராமஸ்திரீகள் அரப்புக்கட்டியை உபயோகிப்பதுபோல் மூன்று சோப்புக்கட்டிகளின்பேரில் கொஞ்சம் ஜலத்தைத் தெளித்து அம்மியில் நன்றாக அரை மணிநேரம் அரைத்தாள். ஸோப் அரப்புப் போல் அரை படாததலால் மறுபடியும் கல்லுரலில் போட்டுச் சரிவர இடித்தாள். ஒன்றிலும் ஸோப் சரிவர அரைபடவில்லை. துண்டும், துணுக்கும, பிசுக்குமாயிருந்தது. அவைகளைத் தலையிலும், தேகத்திலும், நன்றாக அரை அங்குலகனம் வைத்துத் தேய்த்துக் கொண்டு மீதியைக் குடத்தில் அரப்பு ஒட்டி வைக்குந்தினுசில் ஒட்டிவைத்து அகண்ட காவேரிக்கு நீராடச் சென்றாள். ஸோபபுகளை அரப்புக் கட்டிபோல் பூசிக்கொண்டபடியால எவவளவு தேய்த்து ஸ்நானம் பண்ணியும நுரை நுரையாய்ப் போகிறதே யொழிய பிசுக்குப் போகவில்லை.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த ஆங்கிலேயம வாசிக்கும ஒரு சிறு பையன் சமாசாரத்தைத் தன் கோஷ்டியில தெரியப்படுத்த எல்லோரும் விழுந்து விழுந்து நகைத்தார்கள். ஸோப் பெண்ணின புருஷன மறுதினம் கிராமத்தில அயலாரகளுடன சம்பாஷித்துக்கொண்டிருக்கையில ஒன்றும் தெரியாதமாதிரி ஒரு சிறுவன பையனைப்பார்த்து 'சோபனஸெனனையிலென்ன?' என்று வினயமாய்க் கேட்டான். பையன பதில சொல்லாமலெழுந்திருந்துபோய் விட்டான. இந்த சமாசாரம காலேஜுக்கு எட்டவே அவர்கள பொதுவாக ஸோபபைபபற்றி பிரஸ்தாபித்தால பையன நழுவி விடுவான.

பர்வதகுமாரி.

இரண்டாம் பாகம்

(ஸ்ரீமான் மகேசகுமார சர்மா.)

(421-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஒன்பதாம் அத்தியாயம்.

சகவாச தோஷம்.

இராஜகுமாரன்வீட்டிற்குவந்த இந்தத்தோழனுடைய பெயர் புவனமோஹனன். புவனமோஹனனுடைய தகப்பனுருக்குப் பெரும் பூஸ்திதி இருந்தது. அதிலிருந்து ஏராளமான வரும்படியும கிடைத்து வந்தது. ஆனால் தகப்பனுர் மரித்துப்போன பிறகு அவன் சொற்ப காலத்துக்குள்ளாகவே எல்லாவற்றையும் சுத்தமாய்த் துடைத்துவிட வெண்ணி, சுகபோகப் பிரவாகத்தில் முழுகி செல்வச்சேறு முழுவதையும் கழுவி யெறிந்து விட்டு நிர்மலமாய் விளங்குகிறுன்! இப்பொழுது இராஜகுமாரனை முகஸ்துதி செய்வதே அவனது முக்கிய காரியமாய் விட்டது. திவான்ஜியினிடத்தும் அவனுக்கு மிகநெருங்கிய நட்பு ஏற்பட்டிருக்கிறது. இராஜகுமாரனை அதோகதியில் இழுத்துக் கொண்டு போய்த் தள்ளுவதற்கு அவன் இடைவிடாமல் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறுன். அவன் செய்து வரும இத்திருப்பணியில் கொஞ்சம் இஷ்ட சித்தியும் உண்டாகத் தொடங்கியிருக்கிறது.

நரேச சந்திரன் புறப்பட்டுப்போன பிறகு புவனமோஹனன் சிரித்துக்கொண்டே கேட்டான் "இப்போது நரேசன் அடிக்கடி உன்னிடம் வந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஏதாவது உத்தியோகததுக்கு அடிபோடுகிறுனுக்கும்."

இராஜகுமாரன் கூறினுன் "இல்லை, அவன் உத்தியோகத்துக்காக ஏன் பிரயத்தனப்பட வேண்டும்? அவன் இன்னும் படித்துக்கொண்டேயிருக்கிறுன். காலேஜில் அவனும நானும் ஒன்ருய்ப் படித்தோம். மெத்த நல்ல மனுஷ்யன். எப்படி புத்தியாளுே அப்படியே நல்லொழுக்கமும் உடையவன். இந்த வருஷம் பி.எல். பரீக்ஷையில் தேறினதும் ஹைகோர்ட்டில் வக்கீல் தொழில் செய்யபபோகிறுன். வெகு நாளாக அவனை நான் பார்த்ததில்லை. இந்தத் தடவை அவன் விடுமுறைக்காக வீட்டுக்கு வந்திருக்கிறுனென்று கேள்விப்பட்டு ஒரு நாள் ஆளனுப்பி அழைத்து வரச் சொனனேன். அது முதல் அவன அப்போதைக்கப்போது வந்து போய்க்கொண்டிருக்கிறுன்."

"அதோடு உன்னை 'சத்புருஷ'னுக்குவதற்கு வேண்டிய உபதேசமும் செய்து வருகிறுனுக்கும்!"

"எவ்விதமான உபதேசம்?"

புவனமோஹனன்: "என்னிடம் புரளி பண்ணுதே. எனக்கு ஒன்றும் தெரியாதென்று நீ நினைத்துக் கொண்டிருக்கலாம். ஆனுல் உனக்கும அவனுக்கும் நடக்கும் ஒவ்வொரு வார்த்தையும் என் காதில் விழுந்திருக்கிறது. ஐயோ! அவன் எப்பேர்ப்பட்டவனென்று இன்னமும் உனக்குத் தெரியவில்லையே!"

"ஏன் தெரியாது? எனக்கு நரேசனை மிகவும் நன்ருய்த் தெரியுமே. அவனுக்கொப்பான புத்தி

சாலிகளும் சுகுண சீலர்களும் கிடைப்பது வெகு அபூர்வம்."

"அவன் புத்திமான் என்பதில் ஒரு சந்தேகமும் இல்லை. அப்படி இராவிட்டால் ஒரு கல்லால் இரண்டு பட்சிகளை எப்படி அடிக்க வல்லவனுவான்?"

"அப்படி யென்றுல் என்ன அர்த்தம்?"

"அர்த்தம் பின்னுல் தெரியவரும். இந்த சமயம் எதைச் சொல்லவும் எனக்கு இஷ்டமில்லை. பாட்டியம்மை உனக்காக அழைப்பித்து வைத்திருக்கும் தெய்வ கன்னிகையைப் பார்க்க உனக்கு எண்ணமுண்டா இல்லையா என்பதை அறிந்துகொள்ள வேண்டியே இப்போது வந்திருக்கிறேன்."

"இந்த சங்கதி உனக்கு எப்படித் தெரியும்?"

"எனக்குத் தெரியாவிட்டால், பின்னே யாருக்குத் தெரியப்போகிறது?

"இங்கே வருவதற்கு முந்தியே அவளை நான் சில தடவை பார்த்திருக்கிறேன். ஆனுல் அப்பொழுது அவள் முதிராதஅரும்பாயிருந்தாள். இப்பொழுதோ மலரும் பருவத்தில் இருக்கிறுள். இனி அவள் மலர்ச்சியடைவதில் தடையில்லை. வாஸ்தவமாய்ச் சொல்லுகிறேன்; அவளைப் பார்த்ததும் நான் பிரமித்துப்போய் விட்டேன். உன்னுடைய பிரதிபையையும் நான் பார்த்திருக்கிறேன்; ஆனுல் அவளுக்கும் இவளுக்கும் அஜகஜாந்தரம். சந்திர புஷ்கரணியில் மலர்ந்து விளங்கும் செந்தாமரை எங்கே, குப்பை மேட்டில் முளைத்துக் கிடக்கும் ஊமத்தம் பூ எங்கே? அவ்வளவேன், அவளைப் பார்த்த மாத்திரத்தில், தன்னை மறந்து ஸ்தம்பித்துப் போய் விடுவாய்! தெரிந்ததா?"

இராஜ குமாரன் ஆவலுடன் கேட்டான்— "நீ என்னசொல்லுகிருய்?" "வேறென்ன இருக்கிறது சொல்ல? நான் சொல்லுகிறது நிஜமா அல்லவா என்பதை நீயே ஒரு தடவை போய்ப் பார்க்கிறதுதானே. நேரில் பார்த்தாலொழிய காதுக்கும் கண்ணுக்குமுள்ள விவாதம் எப்படித் தீரும்?" இராஜகுமாரன் சற்று நேரம் சும்மா இருந்து விட்டுப் பேசலுற்றுன் "நான் சொல்வதைக்கேள், புவனமோஹனு, இந்தப் பெண்ணைப் பார்க்கிறதில்லை யென்று நான் தீர்மானித்து விட்டேன். நீ இப்பொழுது சொன்னதெல்லாம் வாஸ்தவமாயிருக்கலாம். பிரதிபையைக் காட்டிலும் பேரழகு வாய்ந்தவள் இருக்கவே முடியாதென்ற நம்பிக்கை எனக்கில்லை. இந்த உலகத்தில் எந்தப் பதார்த்தத்துக்கும் குறைவில்லை. ஒன்றைவிட ஒன்று மிஞ்சின வஸ்துக்கள் கிடைக்கக்கூடும். ஆனுல் நான் பிரதிபையையே கலியாணம் பண்ணிக்கொள்ளுகிறதென்று பலவருஷங்களுக்கு முன்னேயே நிச்சயமாய் விட்டது. உலக திருஷ்டியில் சாஸ்திர விதிப்படி விவாகமுகூர்த்தம் நடக்கவில்லையே தவிர, பிரதிபை என்னையே தன் புருஷனென்று எண்ணியிருக்கிறுள். நானும் அவளையே என் பத்தினியென்று பாவித்திருக்கிறேன். ஆகவே நான் பிரதிபையையே கலியாணம் பண்ணிக்கொள்ள நிச்சயித்து விட்டிருக்கிறேன் என் எண்ணம் இப்படி இருக்கும்போது இன்னெரு கன்னிகையைப் பார்க்க வேண்டிய அவசியம்தான் என்ன?"

புவனமோஹனன் சிரித்துக்கொண்டே சொன்னுன்—"அவசியகம் இருக்கிறதா இல்லையா என்பதைப் பின்னுல் பார்த்துக்கொள்ளலாம். இந்த சமயம் அவளை ஒரு தடவை உன் கண்ணுல் பார்த்துவருவதில் என்ன கெடுதல்?"

"கெடுதலா? கெடுதல் மட்டுமன்று, மகா பாபமும் கூட."

இராஜகுமாரன் இப்படிச் சொன்னதைக் கேட்ட வளவில் புவனமோஹனனுக்கு வந்த சிரிப்பை அடக்கமுடியவில்லை. அவன் வெகு

நேரம் வரையில் சிரித்துக்கொண்டே யிருந்தான், பிறகு ஒருவாறு சிரிப்பை அடக்கிக்கொண்டு, "ராஜாபஹதூர், இந்த ஞானம் தேவரீருக்கு எப்போது உதயமாயிற்று? சீர்திருத்தக்காரர்களின் உபதேசம் தலைக்கேறி விட்டாற்போலிருக்கிறதே! இதைவிட பிராம்ம சமாஜத்திலோ கிறிஸ்து மதத்திலோ பகிரங்கமாய்ச் சேர்ந்துவிடுகிறது தானே! ஹஹ்ஹ ஹா ஹஹஹா! இன்று உன் வாயிலிருந்து பிறந்த வார்த்தை மிக வேடிக்கையாயிருக்கிறது! இன்னொரு பெண்ணைப் பார்த்தால் பாபமாம்! ஹா! ஹா! ஹா! மகா வேடிக்கையான பேச்சு! இந்த வேடிக்கைப் பேச்சை இப்போது யாரோடு சொல்லிச் சந்தோஷிக்கலாம்! ஹா! ஹா! ஹா! அடே அப்பா! சிரித்துச் சிரித்து வயிறு வெடித்துப்போகிறதே!"

புவனமோஹனன் இப்படி திடீரென்று அட்டஹாஸம் செய்வதைக் கண்டு இராஜகுமாரன் முதலில் திகைத்தானாயினும், பிறகு தானும் அவனோடு சேர்ந்து சிரியாமலிருக்க முடியவில்லை. சற்றுநேரம் கழித்து அவன் சிரிப்பை நிறுத்திக் கூறலானான்—"புவனா, கொஞ்சம் பொறு; சிரித்துச் சிரித்து என் வயிறு புண்ணாய்விட்டது. யாராவது பார்த்தால் என்ன நினைக்கமாட்டார்கள்? இப்பொழுது சிரிப்பைக் கொஞ்சம் நிறுத்திவிட்டு நான் கேட்கிறதற்குப் பதில் சொல்லு. நீ கொண்டாடுகிற இந்தப் பெண் யாருடைய மகள்? வயது என்ன? பெயர் என்ன?"

புவனமோஹனன் சிரிப்பை நிறுத்திக்கொண்டு கூறலானான்—

"ஹா, அப்படிவா வழிக்கு. இதுதான் புத்திசாலிக்கு அழகு. இதைவிட்டு வறட்டு வேதாந்தத்தில் என்ன வைத்திருக்கிறது! கொஞ்சம் உலகத்தின் ருசியையும் பார்க்கவேண்டாமா? ஜீவித்திருக்கிற வரையில் சுகமாய் ஜீவிக்கவேண்டும். சுகாபாகம் தானே சம்சாரவாழ்க்கையில் சாரமாயிருப்பது. ஏதோ 'பாபம், பாபம்' என்கிறாயே, இதில் என்ன பாபம் வந்துவிட்டது? பாபம் புண்ணியம் என்பதெல்லாம் பண்டிதர்களின் புளுகு சுருட்டேயாகும். மனுஷ்யன் செத்த பிற்பாடு என்ன ஆகிறான் என்பதை எவன் கண்டான்? பிரதிபையை நீ வெகு காலமாகப் பார்த்துக்கொண்டே யிருக்கிறாய். அவளிடத்தில் உனக்கு எப்பொழுதும் ஆதாரமும் அபிமானமும் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அவள் பெரிய மனுஷ்யன் வீட்டுப் பெண் என்பதையும் நீ ஞாபகத்தில் வைக்கவேண்டும். எழுதப்படிக்கத் தெரிந்தவள்; அகம்பாவத்துக்கும் சற்றும் குறைச்சலில்லை. இப்படிப்பட்ட பெண்ணை வீட்டுக்குக்கொண்டு வந்து திருப்தி பண்ணுவது சுலபமல்லவே. காட்டில் எதேச்சையாய் வளர்ந்த மைனா வீட்டில் பழகின பறவை போலாகுமா? ஒரு சின்ன புல் புல் பட்சியைப் பழக்கினால், அது வார்த்தைகளை மனப்பாடமாய் ஒப்பிக்கும், பாட்டுப் பாடும், சட்டென்று பறந்துபோகும், கூப்பிட்டவுடனே கைமேல் வந்து உட்காரவும் செய்யும். இவள் ஏழை வீட்டுப் பெண்; தாய் தகப்பன் இல்லை. நீ கொஞ்சம் ஆசையாய் இருந்தால் உனக்கு அடிமையாய் நடப்பாள். அதோடு கூடும் எடுப்புமற்ற பேரழகி, பெயரும் அழகாகவே அமைந்திருக்கிறது—உமாசுந்தரி. சுவர்க்கலோக சுந்தரி யென்றால் அவளுக்கே தகும். உன்னுடைய பாக்கியமாக்கும் அவள் இம்மண்ணுலகத்துக்கு வந்திருக்கிறாள்!"

புவனமோஹனனுடைய வார்த்தைகளைக் கேட்கக் கேட்க இராஜ குமாரனுடைய எண்ணங்கள் குழம்பித் தடுமாறி நிலை தளர்ந்து போயின. நரேசன் அறிவுறுத்தி அரும்பச் செய்த நல்லுணர்ச்சியெல்லாம் தீய்ந்துபோகும் அறிகுறிகள் தோன்றத்தலைப்பட்டன. அவனுடைய உள்ளத்தில் உமா சுந்தரியைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தாற்போலிருந்து பலமாய் எழவும், தற்சமயத்துக்காயினும் அவன் பிரதிபையை மறந்தான். ஐயோ பிரதிபா!

(தொடரும்.)

விராட் சொரூபம்.

(ஸ்ரீமதி P. மங்களாபாயி.)

ஸ்ரீ கிருஷ்ணனுடைய அன்பான சகவாசத்திலிருந்தும் அர்ஜுனனுக்குக் கடவுளுடைய
போதம் ஆகவில்லை. குருக்ஷேத்திரத்தில்
கீதையை போதித்தும் அர்ஜுனனுக்கு ஞான
முண்டாகவில்லை. கடவுளுடைய விராட்
சொரூபத்தின் வர்ணனையை அவன் கேட்டது
உண்மைதான். ஆனால் கேட்டுப் பிரயோஜன
மென்ன? அந்த ரூபம் அவன் மனதிற் பதிய
வில்லை. ஸ்ரீ கிருஷ்ணபகவான் யசோதாமாதா
வுக்குச் சிறு பருவத்தில் ஒரு தடவை தமது
விராட் ரூபத்தைக் காண்பித்திருந்தாரேயன்றி
மாதாவின் நேசம் போனதும் அவளுக்கு
அவர் குழந்தையாகவே தோன்றலானார். அந்த
கிருஷ்ணனுக்கு திருஷ்டிசுற்றிப் போடவேண்டு
மென்றுதான் அவள் மனதிற்குத்தோன்றியது.
அர்ஜுனனுடைய அவஸ்தையும் பிரத்யக்ஷ
மாய் அப்படியேதான் ஆயிற்று. அவன்
கீதையைச் சொல்லக் கேட்டான். அப்பொழுது
சற்றுநேரம் அவன் மனதிற்குச் சகலமும் நடத்
தப்பட்டவன் ஸ்ரீ கிருஷ்ணன்தான், பலத்
திற்கு ஸ்வாமி அவன்தான், சிருஷ்டியை
உண்டு பண்ணினவனும் அழிக்கப் பட்டவ
னும் அவன்தான்; மேலும் ஒவ்வொரு நிமி
ஷத்திற்கும் மாறுதலடையும் இந்த விசுவம்,
ஒவ்வொரு அணுவிலும் மாறுபாடு அடைந்
துகொண்டு உயிர்த்திருக்கும் இந்த ஜகத்
தானது அவன் உட்கொண்டு வெளிவிடும் சுவா
சத்தின் பேரில் அமைக்கப்பட்டிருக்கிறது
என்று தோன்றியது.

ஆனால் அந்தப் பிரமை அப்பொழுதே ஒழிந்து விட்டது. அந்த உன்மத்த அவஸ்தை, அந்த மனநிலைமை, ஜகத்தைப்பற்றி வெறுப்புண்டாக்கும் சமாதி தெளிந்ததும் அவனுக்கு ஸ்ரீ கிருஷ்ணன் தனது நண்பனாகவும், துரௌபதியின் சகோதரனாகவும் தோன்றுவதல்லாமல், பிரேமையின் சேவகனாகத் தோன்றலாயிற்று. ஸ்ரீ கிருஷ்ணனவன் தனது மந்திரி, அவன் தனது சாரதி, பாண்டவர்களுடைய விஜய சாம்பிராஜ்யத்திற்கு ஆதாரபூதமான (மூலாதாரமான) ஒரு ஸ்தம்பம் என்கிற கற்பனைதான் அவன் மனதில் உதிக்கும். ஸ்ரீ கிருஷ்ணன் இல்லாவிடில் சாம்பிராஜ்யத்தை அடக்கி ஆளுவது சாத்தியமே அல்லவென்று தோன்றும்.

ஆனால் இந்தப் பிரமையும் அப்பொழுதே ஒழியும். குருக்ஷேத்திரத்தில் சேர்ந்திருந்த சேனை ஒன்றும் சாமான்யமன்று; குருக்ஷேத்திரத்தில் பார்த்த தோற்றம் கனவு என்று நினைத்து விட்டுவிடுவதும் சாத்தியமாயிருக்கவில்லை. அது சத்தியமாயிருந்ததனால்தான் பாண்டவர்களுக்கு அஸ்தினாபுரத்தின் ராஜ்யத்தை நிர்பயமாய் அனுபவிக்கக் கிடைத்தது. மகாயுத்தம் சத்தியம் — அது ஒரு அவஸ்தை; அந்த உபதேசம்—அந்த பயங்கரமான விராட தரிசனம் — இவைகள் மாத்திரம் எப்படி அசத்தியமாகும்?

இச்சமுசயம் அர்ஜுனனை விட்டு அகலவில்லை. குருக்ஷேத்திரத்தின் ஞாபகம் வந்த போதெல்லாம் இத்தகைய சந்தர்ப்பங்கள் பல தடவைகளில் நேரும். தன்னுடைய பௌருஷத்தின் மறதி யாருக்குத்தானுண்டாகும்? அர்ஜுனனுடைய மனதிற்கு வியாகுலமுண்டாயிற்று. ஸ்ரீ கிருஷ்ணன் யார்? தேவனோ? மானிடனோ? இந்தக் கேள்வியானது அவனுடைய துர்பல மனதைப் பைத்தியமாக்கிக் கொண்டிருந்ததல்லாமல் ஸ்ரீ கிருஷ்ணன் மானிடனாயிருப்பானானால் தேவன்தான் எப்படி யாவான் என்ற பிரமையிருந்தது.

மனதின் உன்மத்தமான அவஸ்தையிலேயே அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணனை அக்கேள்வி கேட்டான். ஸ்ரீ கிருஷ்ணன் சிரித்துக்கொண்டு மறுமொழியளித்தார். “இது என்ன பயித்தியக்காரத்தனம்? தவளைக்குத் தான் வசிக்கும் கிணறுதான் உலகம் என்று தோன்றுவது போலிருக்கிறது. என்னைப் பார்த்துக் கடவுளுடைய கற்பனை எப்படிச் செய்யமுடியும்? இலையின் மீது உட்கார்ந்து ஆற்றில் மிதந்து கொண்டுபோகும் எறும்பிற்கு இலையுடன் அதை எடுத்துக்கொண்டு போகும் புறுதான் உலகத்தில் எல்லாவற்றையும் விடப் பெரிய ஜந்து என்று தோன்றும். அது தன் இனங்களிடம் யானை என்று சொல்லும். வெகு பெரிதான ஜந்துவைத் தான் கண்டதாக வெகு பெருமையுடன் சொல்லிக்கொள்ளும். அந்தப் புறுவின் பேரிலிருந்து யானையின் கற்பனை எப்படி செய்யமுடியும்?”

அர்ஜுனன் இருகரங்களையும் கூப்பி ஸ்ரீ கிருஷ்ணனுக்கு வந்தனம் செய்து சொல்லலானான்:-“தேவனே! நான் உம்மைத்தேவனென்றுதான் சொல்லுவேன்! நீங்கள் எனக்குக் கடவுளைக் காண்பிக்கும் வரையிலாவது நானும்மை அப்பெயருடன்தான் அழைப்பேன். எனது குரு நீரே, எனக்கு வழி காட்டி நீரே, எனது ரக்ஷகரும் நீரே! குருக்ஷேத்திரத்தில் தாங்கள் திருவாய் மலர்ந்தருளிய கீதையைக் கேட்டது முதல் எனது மனம் கலக்கமுற்றிருக்கிறது. நான் சிந்திக்கச் சிந்திக்கக் கலக்கம் அதிகரிக்கிறது. தாங்கள் கடவுளல்லாமற் போனால் கடவுளுடைய தரிசனமாவது எனக்குச்செய்து வையுங்கள். அதன்றி என் மனதிற்குச் சாந்தி உண்டாகப்போவதில்லை; அதன்றி எனக்கு

மோக்ஷம் கிடைக்கப்போவதில்லை. ஸ்ரீ கிருஷ்ணா! மனதின் இத்தகைய சமுசயாவஸ்தையில் உன் நண்பன் இப்படி அல்லற் பட்டுக்கொண்டிருப்பது உனக்கு இஷ்டமா? என்னைக் கார், அல்லது கொல்!”

அர்ஜுனன் கண்களில் நீர் பெருகலாயிற்று. அவன் அதே நிலையிலிருந்தான். அவன் கண்களும் திறக்கவில்லை. மூச்சும் விடவில்லை.

ஸ்ரீ கிருஷ்ணன் அவன் சிரத்தின்மீது தனது வலது ஹஸ்தத்தை வைத்தனர். ஆனால் அதை உணர்ந்துகொள்ளுமளவு அர்ஜுனனுக்கு உணர்ச்சி இருக்கவில்லை. அவன் வெளியுலகத்தின் திருஷ்டியினால் அசைவற்றிருந்தான்! அர்ஜுனன் என்ன பார்த்துக் கொண்டிருந்தான்?

அந்த விராட் சொரூபத்தின் வர்ணனை இச்சிறிய எழுதுகோலால் எம்மட்டும் செய்ய முடியும்? பகவான் விஷ்ணு சேஷசாயின்மீது பள்ளிகொண்டிருந்தார். சகல விசுவத்திலுள்ள சக்தி அவருடைய பாதசேவை செய்வதில் தன்னை பாக்கியசாலி என்று நினைத்துக் கொண்டிருந்தாள்!

அந்த மூர்த்தியின் ரூபம் — ஹா, ஹா! அதைப்பார்ப்பதில் அர்ஜுனன் மெய் மறந்து போயிருந்தான். அந்த மூர்த்தியின் திவ்வியமான நேத்திரங்களில் ஆகாசம் முழுவதும் அடங்கியிருந்தது. பிருதிவியைப் போன்ற கணக்கற்ற ஜகத்துகள் அந்த ரமணீயமான கூந்தலில் ஒளி வீசிக்கொண்டிருந்தன. நேத்திரங்களிலிருக்கும் நீரில் சகல சமுத்திரங்களும் அடங்கி இருந்தன. உலகத்திலுள்ள சகல சௌந்தரியமும்அம்மூர்த்தியின்கண்ஒருமிக்கக் குடி கொண்டிருந்தன. ரத்னங்களின் தேஜஸ், புஷ்பங்களின் கோமளத்துவம் இவ்விரண்டும் அவ்விடத்தில் அற்புதமாகக் கலந்து கொண்டிருந்தன! அர்ஜுனன் அந்தத் திவ்விய ஆனந்தத்தை அனுபவித்துக் கொண்டிருந்தான். அந்த மூர்த்தியை எவ்வளவு பார்ப்பது, தன்னுடைய சிறிய இதயத்தில் அம்மூர்த்தியை எப்படி அடக்கி வைப்பதுஎன்று அர்ஜுனனுக்குத் தோன்றலாற்று. சகல ஜகத்துக்கும் ஆதாரத்தைக் கொடுக்கும் ஆதிசேஷன் அந்த மூர்த்தியின் கீழ் சிறியவனாகக் காணப்பட்டான். மேலும் அனந்தமாயிருக்கும் (எல்லையற்றதாயிருக்கும்) காலத்தின் அழகிய (காலமென்னும் அழகிய) மாலை அம்மூர்த்தியின் கண்டத்தில் ஒளி வீசிக்கொண்டிருந்தன. ஸ்தலத்தையும் காலத்தையும் ஒரு பொருட்டாக எண்ணாத ஜாலவித்தைக்காரன் அர்ஜுனனைப் பயித்தியமாக்கினால் அதில் ஆச்சரியமென்ன விருக்கிறது! அர்ஜுனன் பசிநிறைந்த கண்களால் அந்தத் திவ்விய ரூபத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதுஅவன் கால்இடறிய மனிதனைப்போல் திடீரென்று நின்றான். அந்த சௌந்தரியமான பதுமைக்கு ஒரு குறைவு காணப்பட்டது. அத்திவ்வியமான மூர்த்தியின் இடது கால் கட்டை விரலில் நகம் இல்லாமலிருந்தது. இவ்வளவு திவ்வியத்தன்மையுள்ள மூர்த்திக்கு அக்குறைவு எவ்வாறுண்டாயிற்று? அதனால் அந்த மூர்த்தியின் அழகு குன்றவில்லை. ஆனால் இந்தக் குறைதான் ஏன் இருக்கவேண்டும்? நாமதாரியாயிருந்த போதிலும் இந்தக் குறைவு குறைவுதான்! அர்ஜுனன் விசாரமுடனானன். வழக்கப்படி வந்த சங்கையை விலக்கும் பொருட்டு அவன் கிருஷ்ணனைப் பார்த்தான்.

ஸ்ரீ கிருஷ்ணனும்கூட அத்திவ்விய மூர்த்தியைப்பார்ப்பதில் மெய்மறந்திருந்தார். அர்ஜுனனுடைய கேள்வியால் அவர் நிலைக்கு வந்து சொன்னார்—“என்ன சொல்லுகிறாய்? அந்த மூர்த்தியின் இடது கால் விரலுக்கு ஒரு நகம் ஏன் குறைவாயிருக்கிறதென்றா? அர்ஜுனா, நான்தான் அந்த நகம்! நான்தான்

கடவுளுடைய அவதாரம்! உங்களுடைய கண்களுக்கு நான் வெகுப் பெரியவன்! ஆனால் இந்தப்பெருந்தன்மையை நான் வெறுக்கிறேன். இந்தப் பெருந்தன்மை என்றால் அந்த விராட் ஸ்வரூபத்தின் விரஹம் (பிரிவு). நான் எப்பொழுது ஸ்வஸ்தானத்திற்குச் (இருப்பிடத்திற்கு) செல்வேன் என்றாயிருக்கிறது. அடடா! கடவுளுடைய காலடியின் தூசு ஆவதில் எவ்வளவு சுகமிருக்கிறதோ அது இத்தகைய வைபவத்தில் எப்படி வரும்? பூமியின்கண்ணுள்ள வைபவம், ஆயுள், ராஜ்யம், சௌக்கியம், புகழ் இவைகளெல்லாம் எல்லைக் குட்பட்டதாயிருக்கின்றன. கடவுளுடைய அவதாரத்தின் ஜீவியமும் எல்லையில் அடங்கியதுதான்! ஆனால் அந்த சுகம்! அந்தமில்லாததும் (முடிவில்லாததும்), எல்லையில்லாததும், கற்பனையில் அடங்காததுமாக விருக்கிறது! எனக்கிந்த சாரமற்ற ஜீவியத்தில் வெறுப்பாயிருக்கிறது."

ஸ்ரீ கிருஷ்ணனுடைய கண்களிலிருந்து நீர் ஆறாகப் பெருகி அந்நீர் வைஜயந்தி ஹாரமாக மாறியது! அதன் ஸ்பரிசத்தினால் அர்ஜுனன் விழிப்படைந்து தலையை நிமிர்ந்துப் பார்க்க ஸாக்ஷாத் பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் கையில் வைஜயந்தி ஹாரத்தைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தார்.

அவர் சொன்னார்—"அர்ஜுனா, இந்த ஹாரத்தை என்னுடைய ஞாபகக்குறி என்று தேவி துரௌபதியின் வசப்படுத்து (சுவாதீனப்படுத்து). கடவுளைத் தரிசிக்கும் சாதனம் இதிலிருக்கிறது"

சுபம்.

(மனோரஞ்சன் சஞ்சிகையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது)

சிந்தாமணியைப்பற்றி நேற்று நடந்த சம்பாஷணை.

(ஸ்ரீமதி அகிலாண்டம்மாள்.)

லீலா:—என்னடி கோகிலம்! அடுத்த வீட்டு உபாத்தியாயர் ஆம்படையாள் அகிலாண்டம் சதா சர்வகாலம் பத்திரிகையே படித்துக் கொண்டிருக்கிறாள்?

கோகிலம்:—ஏதோ படிப்பில் ஆவலாயிருக்கிறது, படிக்கிறாள்.

லீலா:—நல்ல ஆஸ்தை! சமைக்கிறபோது கூடவா படிப்பு? இதென்ன விந்தை!

கோகிலம்:—இல்லை. அவாத்துக்காரருக்கு ஏதோ 'சிந்தாமணி' என்ற பத்திரிகை வருகிறது. அதைப் படிக்கச் சொல்லியிருப்பார்.

லீலா:—ஆமாடி. அவள் வீட்டில் யாரோ பேசிக் கொண்டிருந்தபோதுகூட சிந்தாமணி சிந்தாமணி, என்று அடிக்கடி வந்தது. அது ஒரு பத்திரிகையின் பெயரா?

கோகிலம்:—இது உனக்குத் தெரியாதா? ஊரிலுள்ள சமாசாரங்களெல்லாம் உன் காதிற்கு எட்டி விடுகின்றன. இது மாத்திரம் தெரியாமல் போச்சுதா! என்ன ஆச்சரியம்!! என்ன புதுமை!!!

லீலா:—என்னடி! குடித்தன ஸ்திரீகள் படிக்க முடியுமா? மேலும் எனக்கு சாவகாசமேது? தவிர எங்காத்துக்காரர் நாவல் படிக்கக் கூடாது என்று கண்டித்ததும் நாவலை ஒழித்தேன். அவ்விதமிருக்கப் புருஷன் பேப்பர் படிப்பதுபோல் பத்திரிகை படிப்பதைக் கண்டால் இனி என்னை இவ்வீட்டிலிருக்க வொட்டார்.

(அகிலம் பிரவேசித்து லீலாவைப் பார்த்துக் கூறல்)

என்னடி லீலா! நீ சொல்வது பூலோக அதிசயமாயிருக்கிறது. படிப்பதற்கு ஹானி சொல்லும் பர்த்தா இக்காலத்திலில்லை வீண் நேரம் கழிப்பதற்குப் படித்தாலென்ன? சதா சர்வகாலம் புதிதாய்க் கட்டின மாடிமேலேறிக்கொண்டு அடுத்த வீட்டிலுள்ள அத்தையுடன் நாலு நாழிகை பேசுகிறாயே. இதில் அரை நாழிகை படித்தாலென்ன? ஆயிரங் காரியமிருந்தாலும் அரை நாழிகை படிக்கணும் என்றால் படிக்க முடியாதா!

லீலா:—நீ சொல்லுவது சரி. ஆத்தில் வையரானே! என்னமாப் படிப்பேன். உனக்கிருக்கிற சுதந்திரம் எனக்கேது. நீ பாக்கியசாலி. நானென்ன செய்யட்டும்.

அகிலம்:—வம்படித்துக் கொண்டு வீண் பொழுது போக்குவதற்கு மாத்திரம் உனக்கு சுதந்திர மிருக்கிறது. இதற்கு உன்னை ஒருவரும் கோபிப்பதில்லை போலும். படிப்பதில் தான் வந்து விட்டதோ கோபம்! தன்னிடம் பல ஊழல்களை வைத்துக் கொண்டு தானும் வாசியாமற் பிறர் வாசிப்பதைக் கண்டு அயல் வீட்டுக் கோகிலத்துடன் வம்படிப்பது தேவலையா. இதெல்லாம் விட்டு இந்தச் 'சிந்தாமணி'யை வாசித்தால் நீ பண்ணுகிற காரியம் யுக்தம், அயுக்தம் என்று தெரிந்து கொள்வாய்.

லீலா:—நல்ல 'சிந்தாமணி'. அதென்ன உபாத்தியாயா? நம்மை அது சீர்படுத்த முடியுமா? அப்படிச் செய்வதாயிருந்தால் இந்த நாளில் நாவலில் நாக்கலம், பத்திரிகையில் பதிங்கலம் வெளி வந்திருக்கின்றனவே. அவற்றால் நமக்கேற்பட்ட நன்மை ஒன்று விரல் மடக்கு!

அகிலம்:—அதற்கென்ன! பெற்றதெல்லாம் பிள்ளையா? வைத்ததெல்லாம் பாமா! நூற்றுக்கொன்று நல்ல புஸ்தகமில்லாமலா விருக்கு. நல்ல புஸ்தகத்தைப் படித்தால் தானே கெட்டது இன்னதென்று தெரிய வரும்.

லீலா:—நல்ல புஸ்தகம் என்று ஒன்று அச்சிடப்பட்டிருக்கிறதா? நீ பேசுவது அதிசயமாகத் தானிருக்கிறது.

அகிலம்:—அச்சிடப்படுவதெல்லாம் நல்லதென்று யார் சொன்னாள். கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்றிருந்தால் எது நல்லதென்று தெரியும்? பகுத்தறிவுடன் ஆராய்ந்தறிந்தால்தானே எதிலும் குணதோஷங்கள் தெரியும்?

கோகிலம்:—ஆமா. நீ படிக்கிறாயே அடிக்கடி. அந்தப் பத்திரிகை எந்த விதத்தில் நல்ல பத்திரிகை யாகும்?

அகிலம்:—என்னமோ அம்மா! நானும் உங்களைப்போல்தான் பிதற்றிக் கொண்டிருந்தேன். வீட்டுத் தொந்தரையினால் கண்ட புஸ்தகத்தை வாசித்து வந்தேன். தெய்வாதீனமாய் இச்'சிந்தாமணி' வந்தது பார்க்கப்பார்க்கச் சிந்தை மகிழ்ந்தே இருக்கிறேன்.

லீலா:—என்னவேண்டும்! நாம் சம்பந்தப்பட்டமட்டில் அதிலில்லாத தொன்று மில்லை. பதிவிரதா தர்மம், குடித்தன ஏற்பாடு, குழந்தை பரிபாலனம், குடும்ப அபிவிருத்தி, ஸ்திரீகளுக்கின்றியமையாத நன்னடக்கை, நவீன முறைகள், நாகரிக ஏற்பாடுகள், இன்னும் இவை போன்ற அரிய பெரிய

விஷயங்கள் இதில் வெளிவருகின்றன. அவை படிப்போர் மனதிற் பதியும் படியான போதனா சக்தியைக் கொண்டுள்ளன. தமிழும் இனிய நடையில் அழகு வாய்ந்து எழுதப்பட்டிருக்கிறது. வேறு என்ன வேண்டும்?

கோகிலம்:—இப்பேர்ப்பட்ட பத்திரிகையின் பத்திராதிபர் யார்?

அகிலம்:—பண்டிதை யெனப் பிரசித்தி பெற்ற நம் சகோதரி பாலம்மாளே யாவார்.

லீலா:—இருக்கட்டும். ஒரு ஸ்திரீ எழுதுவது அவ்வளவு நன்றாயிராதே?

அகிலம்.—ஸ்திரீ என்றால் என்ன தள்ளுபடியா! அவளுக்கும் யுக்தி, புத்தி, சாதுரியம் உண்டல்லவா! மேலும் ஸ்திரீகளின் முன்னேற்றத்தைப்பற்றி நம்போன்ற ஸ்திரீ எடுத்துச் சொன்னால் தானே நமக்கு நன்கு புலப்படும். மேலும் இச்சிந்தாமணியின் பத்திராதிபரின் பகுத்தறிவும், புத்தி விசாலமும் விஷய ஞானமும் அனுபவமும் யாருக்குண்டு.

கோகிலம்.—யார் எழுதினாலென்ன? நல்ல விஷயங்களை நல்ல நடையில் நலமாக எடுத்துரைத்தால் அதைப் படித்து அனுபவிக்க யாருக்குத் தான் கசக்கும்.

லீலா.—அடி கோகிலம்! அகிலம் சொல்வதைப் பார்த்தால் அது நல்ல பத்திரிகையாகத் தானிருக்கும். நான் இன்று சாயங்காலம் எங்காத்துக்காரர் வந்ததும் 'சிந்தாமணி ஆபீசுக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டு மறுகாரியம் பார்க்கச் சொல்லுகிறேன்.

கோகிலம்.—வருஷசந்தாவும் ரூபாய் 5 என்று தான் போட்டிருந்தது, பார்த்தேன்.

அகிலம்.—இன்னொரு விஷயம். எனக்கு இந்தப் பத்திரிகை ஆரம்பித்த சென்ற பதினெட்டு மாதங்களாக வருகிறது. ஒன்று விடாமல் நானும் வாசித்தேன். இனி அடுத்த பத்திரிகை எப்பொழுது வருமென்று ஆவலாயிருக்கிறேன். நான் இதுவரையில் எத்தனையோ புஸ்தகங்கள் வாசித்துள்ளேன். சீத்தலைச்சாத்தனாருக்குத் திருக்குறள் எப்படி குணத்தைக் கொடுத்ததோ அதேபோலப் பெண்ணுலகிற்கு இப்பத்திரிகையே ஒரு அமிர்த சஞ்சீவி போலிருக்கிறது நான் இதைத் தவிற வேறு பத்திரிகை வாசியேன்.

கோகிலம்.—அப்படியானால் நானும் என் கணவரிடம் சொல்லி அதை வரவழைக்கிறேன்.

லீலா.—அப்படியே செய்.

அகிலம்.—தோழிகளே! நமக்குள் இப்போது நடந்த சம்பாஷணையை சம்பாஷணை ரூபமாகவே நாளைவரும் பத்திரிகையில் வெளியிடும்படிப் பத்திராதிபருக்குஎழுதுகிறேன். ஏனெனில் உங்களைப்போல் இப்பத்திரிகையின் மகிமை தெரியாதவர்களுக்குப் புலப்படும்படி எழுதினால் அவர்களும் அதன் தத்துவத்தை அறிந்து மேற்படி பத்திரிகையை வாங்கி வாசித்து இன்பமுற்று இருதார்த்தர்களாகட்டுமே.

லீலா.—அதுவே நல்ல யோசனை.

சுபம்! சுபம்!! சுபம்!!!

பத்தினிப் பெண்டிர்.

(ஸ்ரீமதி உருக்குமணி யம்மாள்.)

"காதலன் வீயக் கடுந்துய ரெய்திப்
போதல் செய்யா வுயிரொடு புலந்து
நளியிரும் பொய்கை யாடுநற் போல
முனியெரிப் புகூஉ முதுக்குடிப் பிறந்த
பத்தினிப் பெண்டிர்" (மணிமேகலை)

பத்தினிப் பெண்டிர் அல்லது கற்புடை மாதர்தம் தூயவரலாறுகள் நமது இந்து சகோதரிகட்கும் அவர் வழிவந்த சிறுமியர் கட்கும் நல்லொழுக்கமும் மேன்மைக் குணமும் உண்டாவதற்கும், கற்பு நெறி அறிவதற்கும் உறுதுணையாகவும், எடுத்துக் காட்டாகவும் இருக்கவல்ல தென்பது எனது கருத்து. பத்தினித் தன்மை, அல்லது கற்பொழுக்கமென்பது 'கொண்ட கணவரிற் சிறந்த தெய்வமில்லை' யென்றும், அவனை இவ்வண்ணம் போற்றித் தொழுது வழிபடுக என்று ஈன்றெடுத்த இரு முது குரவரும் கற்பித்தலாலும், வேதியர், அறிவொழுக்கம் நிரம்பிய சான்றோர், முக்குறும் பெரிந்த முனிவர், எல்லாம் வல்ல கடவுள் இவர்களிடத்து வழிபடும் ஒழுக்க நலத்தைக் கணவன் கற்பித்தலாலும், வேத விதியிலும், செய்முறையிலும் நியமித்த சிறப்பிலக்கணங்களைத் தெரிந்து கொண்டு துறவறத்திற் குறுதுணையும், இல்லறம் நல்லறமாய் நிகழ்வதற்கான செயலாலும், மற்றும் கொழுநனை இன்ன தன்மையாகப் பாதுகாக்க வென்றும், இவ்வாறாக அவரை வழி பட்டுத் தொண்டுசெய்து தொழுதெழுக என்றும் தீக்கடவுள் சான்றாக மந்திர வகையாற் கற்பிக்கப் படுவதாலும் 'கற்பு' என இது பெயர் பெற்றதென்பர் பெரியோர்.

இங்ஙனமான பொற்புறு கற்பு நெறியையும், கனலி சான்றாகக் கொண்ட தன் கணவனையும், அக்கணவனாலும், மற்றோராலும் கற்பிக்கப் பட்ட நன் மொழிகளையும் நன்றாகவும், அன்பாகவும் பேணுதலால் மாதரார்க்குப் 'பெண்' என்ற பெயர் தமிழில் வழங்கப்பட்ட தென்ப. காணுதலைச் செய்வது கண் என்றாற் போல, பேணுதலைச் செய்பவள் பெண்ணாயிற்றென்பது இதன் இலக்கணம்.

இவ்வாறு கணவனிடத்து அன்பு பெருகப் பாதுகாத்து வருதலே மடவார்க்கு நல்லறமென்பதை:—

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்ற அழகிய குறளடிகளால் நமது திருவள்ளுவதேவர் திருவாய் மலர்ந்தருளியது கவனிக்கத்தக்கது.

விரிந்து பறந்து விளங்கும் இவ்விந்திய நாட்டிற்கே கற்பின் உயர்ந்த தன்மையாகிய ஒப்பிலாச் செல்வம் உரித்தானதே யன்றிப் பிற நாட்டாரிடத்து இவ்வருஞ் செயல் நிகழ்ந்ததாகக் கேட்கப் படாமையால், இவ்வரும் பெருங்குணத்திற்கு நமது நாட்டு மகளிர்களே காரணர்களாகித் தங்கள் நாயகரின் நற்புகழை நானிலத்தில் நனி சிறக்க வெளிப்படுத்திக் கற்பின் மேன்மையைத் மறவாக் கடனாகக் கொண்டனராவர்.

இத்தகைய பெருமையைக் கொண்டவர்கள் நமது இந்தியா நாட்டின் குலமகளிர்களென்னில் அவர்க்கு இதனினும் சிறந்த மேன்மை யாதுளது?

இத்தகைய சிறப்பிற்கு நாயகமாய் விளங்கிய கற்பின் மடவார் சீதை, தமயந்தி, நளாயினி, சாவித்திரி, கண்ணகி, சந்திரமதி முத

லிய மற்றும் பலராவர். நமது தமிழகத்தார் இப்பெண்மணிகளையே பத்தினிப் பெண்டிர்களென்று கூறி அவர்களைத் தெய்வமாகவும் கருதி வழிபட்டு வந்தனர். அம்மட்டோ? அறநலமுணர்ந்த ஆன்றோர்களும், நிறைமொழிச் செல்வரும், பத்தினிப் பெண்டிரும், மிகுதியாயுள்ள பதிகளை நீர்வளமும் நிலவளமும் பயிர்வளமுஞ் சிறந்து பொலியுற்று விளங்குமென்றுங் கூறுவர் அறிவிற் பெரியார். இதற்குச் சான்றாக நமது பொய்யா மொழியார் தமது தெய்வநூலில்

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என வியந்தோதியதும் கருதத்தக்கது.

உயர்ந்த மடவார் கொண்டுள்ள உயர்கற்பைப் பிழைபடக் கருதுவாரின் நெஞ்சைச் சுட்டு வருத்தவல்ல வன்மையுடைய தென்பது "நிறையுடை மகளிர் தம்மே போலப் பிறர் சுடும் பெற்றி" என்பதனால் அறியலாம்; அல்லாமல், நமது கவிச் சக்கரவர்த்தி கம்பநாடரும் பார்த்த மாத்திரத்தில் பஸ்மீகரமாக்கவல்ல திருஷ்டி விடமென்ற கொடுநாகத்தைச் சீதாதேவியின் கற்புக்கு உவமைப்படுத்துவதை "திட்டியின் விடமென்ன கற்பின் செய்கையாள்" என்ற செய்யுளாலும் தெரியலாம்.

இத்தகைய மாதரார் மாண்புறுங் கற்பைக் கேடுறுவகை நன்றாகக் காத்து வருங்கடமை நமது பண்டைய அரசர்களுக்கு முக்கிய தர்மமாயிருந்தது. "மாதவர் நோன்பும், மடவார் கற்பும், காவலன் காவல் இன்றெனில் இன்றால்" என்ற உதாரணத்தாலும் இதன் உண்மை உணரலாகும்.

இனிப் பத்தினிப் பெண்டிரது வரலாறுகள் நமது சங்க இலக்கியங்களிலும், இதிகாசங்களிலும் பல காணப்படுகின்றன. அவைகளில் சில தேயன்றிப் பல இன்னும் விளக்கமாக வெளிவந்ததில்லை. வெளிவாராதாயுள்ள "விசாகை" "மருதி" என்ற இருவரது கற்பின் மேன்மைகளை மணிமேகலையினின்றும் இம்முறை விவரித்து மற்றவர்களை மறுமுறை கூறுவேன். அவை வருமாறு:—

முதலாவது விசாகையின் வரலாறு.—

பண்டொரு காலத்தில் "காகந்தி" என்னும் காவிரிப் பட்டினத்தைத் தனது தந்தையின் ஆணைப்படி "சுகந்தன்" என்னும் ஒரு வீரன் நீதி வழுவாது ஆட்சி புரிந்து வந்தான். அன்பினும், அறவொழுக்கத்தினும், கற்பினும் சட்டமுகிலும் மேம்பட்ட 'விசாகை' என்பவள் ஒரு நாள் அப்புகாரிலுள்ள பாவை மன்றத்தையடுத்து "முக்காலமு முணரும் முதறிபாவாய்! எனது மாமன் மகன் 'தருமதத்தன்' என்பான் என்பால் களங்கமற்ற அன்பு கொண்டு என்னை நேசித்து வருகிறான்! உண்மை யுணராத ஊரார் அதனைத் தவறாக நினைத்து எங்களை 'காந்தருவ மணத்தாற் கணவனும் மனைவியுமாயினர்' என்று பழியுரைத்து அலர் தூற்றுகின்றனர். பொறாத எனது மனம் மிகவும் நாணி வருந்துகின்றது. உண்மையை உற்றவாறறிந்து உலகினர்க் குணர்த்த நீயே உயர்வுடையை ஆதலால், வந்து முறையிடுகின்றேன். நீ யாவருங்காண வெளித்தோன்றி எனது பொய்ப்பழியை நீக்கிக்குறை தீர்ப்பாய்" என்று வேண்டி நின்றனள். அவள் வேண்டியவாறே அப்பாவையும் தோன்றி யாவருங் கேட்ப 'இவ்விசாகை நீங்கள் கூறும் அபவாதத்திற்கு இலக்கானவள் அல்ல. யாதொரு தீங்கையும் அறியாதவள்' என்று கூறி மறைந்தது. "பழியற்றவள்" என்று தெளிவிக்கப்பட்ட இவள் நகரத்தாரால் சூழப்பட்டு நடுவில் தெருவில் வந்து கொண்டிருக்கையில் அவள் பொழுது கண்ட மேற்படி சுகந்தனின் மூத்த காளை ஒழுக்கந்தவறிய காமவேட்கை கொண்டு

தன் சிரத்திற் சூட்டியிருந்த முடியின் மலர் மாலையை "முன்னோர் கூறிய திருமணச் சடங்கு முறை இதுவே" எனக்கூறி அவள் கழுத்தில் போடுதற்குத் துணிந்து தன் கைகளைக் குடுமியிற் செலுத்தி மாலையை எடுக்க முயன்றான். அந்தோ! தூக்கிய கைகள் நினைத்ததைச் செய்ய முடியாதபடி அம்முடியினிடத்தே ஸ்தம்பித்து நின்றுவிட்டன. அது கண்ட அருகிருந்தார் பலரும் "ஆ! பத்தினிப் பெண்டிர் பெருமையே பெருமை" எனக்கூறி வியந்தனர். இச்செய்தி அவன் தந்தை சுகந்தனுக்கும் தெரிய வந்தது. தனயனது தகாச் செய்கை கேட்டுச் சகியாத அவ்வீரன் கடுஞ் சினங்கொண்டு அப்பொல்லானை மகனெனப் பாராது தனது உடைவாளால் சிரம் வேறுபட வெட்டி வீழ்த்தினன். என்னே அரசனது பழுதற்ற நீதிச் செயல்! (இது மணிமேகலை 22 சிறைசெய் காதை 145-158 ஆவது வரிகளிற் காணப்படுகிறது.)

இரண்டாவது —மருதி வரலாறு.—

'மருதி' என்பவள் ஒரு பார்ப்பனப்பத்தினி. ஒருநாள் அவள் காவிரி யாற்றுக்குச் சென்று நீராடித் தன்னந்தனியளாய்த் திரும்பி வருவதைக் கண்டான் சுகந்தனது இளைய குமாரன். கண்டதும், மிகவும் விருப்பமுற்றவனாய் "இவள் தனியாய் வருகின்றனள். இதுவே சமயம்" என்றெண்ணி அவளை அருகடுத்து "நீ வா" என அழைத்தனன். அழைத்தலும் அவள் நெஞ்சு கலங்கி "அந்தோ! பெய்யென ஏவி மழையைப் பெய்விக்கும் உண்மைப்பத்தினிகள் பிறர் நெஞ்சத்துப் புகார். நானே இவனது உளத்திற் புக்கேன். ஆகலிற் பழுதுபட்டேன். புரிநூல்மார்பர் முத்தீவளர்க்கும் என் அருமைக் கணவருக்குஉண்மைப்பத்தினியல்லேன் போலும்" எனத்தன் மனத்தோடு புலம்பி மனையகம்புகாதுகுற்றஞ்செய்தோரைப் பாசத்தாற்கட்டிப் புடைத்துண்ணும் பூதம் வீற்றிருக்கும் சந்நிதியையடைந்து "தெய்வமே! யான் கொண்ட கணவனுக்கு யாதொரு குற்றமும் செய்தறியேன். எங்ஙனமோ என் கற்புப்பழுதுபட்டது. தெய்வமே! நீ பொய்த்துப் போயினையே! என்னை ஏன் உன் பாசத்திற் கட்டி ஒறுத்திலை?" என அரற்றினள். அரற்ற மாபெரும்பூதந்தோன்றி "மடக்கொடி! கேட்பாயாக! நீ பொய்யில் புலவனும் திருவள்ளுவ தேவரது—

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்னும் திருவாக்கின் பொருளுரையை உய்த்துணரவில்லைபோலும். வேடிக்கை மகளிரொடு கூடி நீ திருவிழாக்காணும் விருப்பு மிக்குள்ளவளாய் அவ்வத்தெய்வங்களை வழிபடு நியமம் மேற்கொண்டுள்ளாய்! இதுவே உன்னிடம் ஏற்பட்ட குற்றம். ஆதலால் உன் ஏவலால் வானமும் மழைபெய்யாது; உத்தமப் பத்தினிகள் போலப்பிறர் நெஞ்சைச் சுடும் கற்புத்தீயும் உன்னிடம் இல்லாது போயிற்று; உன் கணவனை தெய்வமெனக்கொண்டு பிற தெய்வங் கருதுதலை விடுவாயேல் உன் ஏவற்படி வானமும் மழை பொழியும்; பிறர் நெஞ்சகத்தும் புகாது நிற்பாய். மனம்போன போக்காய் ஒழுகும் பெண்டிரையே என் பாசம் கட்டும். நீ அத்தகைய குற்றம் செய்திலை. ஆனதால் என் பாசம் உன்னைக்கட்டாது. உன்னிடத்தில் தீயசொல் கூறின கந்தன் சிறுவனுக்கு வரும் தண்டனை யாதெனிற் கூறுவேன். ஒருவர் குற்றம் செய்த ஏழு நாள் வரையும் யான் தண்டிப்பதில்லை. ஏனெனில், அதற்குள் அரசனே தண்டித்து விடுவான். ஏழுநாளைக்குள் அங்ஙனம் அரசன் தண்டனை செய்யாது விட்டால் பின்னர் தண்டித்தல் என்னுடைய கடமையாகும்; இவ்வேழு நாட்களுக்குள் இச்செய்தி

கந்தனுக்குத் தெரியவந்து தன் மகனை அவன் வெட்டி விடுவான்" என்று கூறி மறைந்தது. அவ்வாறே அவ்வேழு நாளைக்குள் இச்செய்தி கந்தனுக்குத் தெரியவந்தது. கந்தனும் மகனை வாளால் வெட்டி வீழ்த்தினன். என்னே! நமது பழந்தமிழ் அரசர்களின் கோல்கோணு நீதித்திறம்! சத்தியநெறி! இச்செய்தியும் மணிமேகலை சிறை செய் காதை 40-79 ஆவது வரிகளிற் காணப்படுகின்றது. இவ்விருவரலாறுகளால் கற்புடைப்பெண்டிர்கள்தம் அற்புதப் பெருமையும் தெய்விக சக்தியும் எத்தகைய மேம்பாடுடையதாய்க் காண்கின்றது. இதனைக் கண்ணுறும் நமது சகோதரிகளாகியவொவ்வொரு இளஞ்சிறுமிகளும் பத்தினித் தேவிகளாகிய விசாகை, மருதிகளின் அடிச்சுவடுகளைப்பின்பற்றி அவர்கள் கொண்டிருந்த மேலான நல்லொழுக்கங்களையும், கற்புடைமையையும் கைக்கொண்டு இல்லற மார்க்கத்தை நல்லறமாக்கி இனிது வாழ்வார்களாக.

சுபம்.

புகையிலைப் பிரபுவின் சரித்திரம்.

(School Folk.)

புகையிலைப் பிரபுவின் ஜனனபூமி அமெரிகாவாகும். இவர் தயவும் ஜனநன்மையில் ஆசையும் தேசாபிமானமும் கொண்டுள்ளவர். தக்க வயது வந்ததும் தேச சேவை செய்யவேண்டுமென்ற ஆவல் இவருக்குண்டாயிற்று. இம்மகான் முதன் முதலில் ஒரு தேசத்தைச் சீர்திருத்தவாரம்பித்து முடிவில் அமெரிகா கண்டம் முழுவதையும் சீர்திருத்தினார்.

தனது ஜனனபூமிக்குமட்டும் ஊழியம் புரிவதில் இம்மகானுக்குத் திருப்தியுண்டாகவில்லை. ஏனெனில் உதார சிந்தையுள்ளவர்களுக்கு உலகம் முழுதும் சொந்தமானமையால் உலகம் முழுதும் தம் குடும்பமென பாவித்து அவர் கப்பலேறிக் கடல் கடந்து சர் வால்டர் ராலேயுடன் (இவர் இங்கிலாந்தில் ராணி எலிசபெத் சபையிலிருந்த பிரமுகரில் ஒருவர்) இங்கிலாந்துக்கு விஜயம் செய்தார். அமெரிகாவில் உதவிபுரிந்து வந்ததுபோலவே இங்கிலாந்திலுங்கூட எல்லோருக்கும் சகாயஞ்செய்து சுகத்தையும் சாந்தத்தையும் நிலைப்படுத்தினார்.

கடவுளின் அருளால் புகையிலைப் பிரபுவுக்கு 'சுருட்டு' 'சிகரெட்' என்ற இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தார்கள். மூத்தவரான சுருட்டுப் பிரபு உயர்ந்த உருவமும் திடகாத்திரமும் கொண்டவர். இவர் சாயல் தந்தையுடையது போலவே இருந்தது. சிகரெட் பிரபு அதிக அழகும் சபலத்தன்மையும் கொண்டிருக்கிறார். இவ்வாலிபர் இருவரும் தகப்பனைப் போல் தேசத்திற்கு மகோபகாரம் செய்யும் கைங்கரியத்தைக் கைகொண்டனர். உலகிலுள்ள ராஜ்யங்களைக் காட்டிலும் இந்துஸ்தானம் விசனிக்கத்தக்க நிலைமையிலிருப்பதைக் கண்டு இம்மகான் வருந்தி மக்களை இங்கிலாந்திலேயே விடுத்துத் தாம் இந்துஸ்தானத்திற்கெழுந்தருளினார். இவ்விடம் வந்ததும் ஆரம்பத்தில் பாரதமக்கள் இவரிடம் நம்பிக்கை வைக்கவில்லை. ஆனதால் இவருடைய பெருங்காரியத்திற்கு இடைஞ்சல்கள் உண்டாயின. நாளடைவில் புகையிலைப் பிரபு பாரத மக்களுக்கு உபதேசம் செய்து அவர்களின் மனதைத் தமது பக்கமாக வசப்படுத்திக் கொண்டார்.

இந்துஸ்தானம் வந்தபின் புகையிலைப் பிரபுவுக்கு 'பீடி' 'பொடி' என்ற இருகுமாரர் உதித்தனர். பீடிப் பிரபுவின் தலை பெரியது. கால்கள் மட்டும் சிறியன. கட்டைக்குட்டியான பொடிப் பிரபு சபலமும் முன்கோபமும் வாய்ந்துள்ளவர். இவர் நிறம் இளஞ் சிகப்பு. இச்சிறுவர் இருவருங்கூட இந்துஸ்தானத்தின் மூலை முடுக்குகளிலும் சென்று மீந்துள்ள ஜனங்களுக்கு உபதேசம் செய்து அவர்களை சீர்திருத்தலாயினர். சின்னாட்களில் புகையிலைப் பிரபு தமது மூத்த குமாரர் இருவரையும் ஹிந்துஸ்தானத்திற்கு வரவழைத்துக் கொண்டார். இவ்வாலிபர்கள் புதிதாக இவ்விடம் வரவே பாரதமக்கள் இவர்களிடம் மிகவும் நட்புபாராட்டத் தலைப்பட்டார்கள். விசேஷமாக இந்தியாவின் எதிர்கால வாழ்க்கைக்கு முக்கிய சீர்திருத்தக்காரர்களான ஆங்கிலம் பழகும் மாணாக்கர்கள் சிகரெட் பிரபுவுக்கு மெத்த நன்றி பாராட்டி அவரைப் போற்றி வந்தார்கள். புகையிலைப் பிரபுவுக்கு பாரத மக்களால் கிடைத்ததளவு மரியாதை வேறு எந்த தேசத்திலும் கிடைக்கவே இல்லை. எவ்வாறெனில் புகையிலைப் பிரபுவின் பிள்ளைகளில் ஒருவரான பொடிப் பிரபுவை இவர்கள் சிரத்தில் வைத்து, மற்ற மூவர்களையும் கைகளாலெடுத்து வாயால் முத்த மிட்டதுடன் புகையிலைப் பிரவுவைத் தங்கள் இருதயத்திலேயே நிலைநிறுத்திவிட்டார்கள். மகா ஜனங்களே! மகானின் மகிமையைப் பார்த்தீர்களா! இம்மகானின் சகாயமில்லாமல் விவாகம் முதலிய நடப்பதே கிடையாது. ஆஹா! இவ்வுத்தமர்களின் பெருமையைப் புகழ யாரால் இயலும்! சர்வ சாட்சியாயுள்ள கடவுள் உலக ஊழியத்தில் தலை சிறந்து நிற்கும் புகையிலைப் பிரபுவுக்கும் அவரின் நான்கு புதல்வர்களான சுருட்டுப் பிரபு, சிகரெட்பிரபு, பீடிப்பிரபு, பொடிப்பிரபு ஆகிய தேச ஊழியர்களுக்கும் நீண்ட ஆயுளையளிக்க வேண்டுமாய்ப் பிரார்த்தித்து இவ்வியாசத்தை முடிக்கின்றேன்.

மறதியோ அல்லது பழக்கமோ?

(ஒரு சிறு கதை)

சகோதரி வி. பலாம்பாள்.

(காபிரைட்)

1-வது அதிகாரம்.

கோபாலன் முகத்தில் உற்சாகமென்பது ஒரு சிறிதும் காணப்படவில்லை. அவன் விசனத்திற்கே இருப்பிடமாக விளங்கினான். நம்பிக்கையற்ற மனதும் ஒளியற்ற விழிகளும் கொண்டு பார்ப்பவர்களையும் அதைரியப் படுத்துவான்போல் தோன்றினான். என்ன அநியாயமிது! இவன் வயதென்ன? இவனிருக்க வேண்டிய நிலைதானென்ன? முப்பத்தைந்து வயதுள்ள இவன் முகஞ்சோர்ந்து கைகால்களொடுங்கி முகத்திற் பிரகாசமற்று இவ்வாறிருக்குங்காரணம் யாதாயிருக்கும்? ஆம், அதற்கென்ன செய்யலாம். மனிதன் தன் வாழ்க்கையைச் சரிவர நடத்த மாட்டாது தவறுன வழிகளிலும செல்லத் துணிவானாயின் அவனுக்குத் தேகதிடனும் உற்சாகமும் உண்டாகுமா? மனிதன் சாந்தமான சித்தத்துடன் நன்னடக்கை கொண்டொழுகுவானாயின அதனால் இம்மையிலும் நலவாழ்வு வாழ்ந்து மறுமையிலும நற்கதி யடைகின்றான் என்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றனவே. அவற்றை ஒரு சிறிதும் மதியாமலும், முன்னோர்களின் நற்பெயரைக் கருதாமலும், ஜனசமூகத்திடையே ஏற்படக் கூடும் இகழ்ச்சியைப் பொருட் படுத்தாமலும் கண்டதே காட்சி,

கொண்டதே கோலம் என்று மனம்போன போக்கெல்லாம் போகிறவர்களுக்கு முடிவில் கிடைக்கும் பரிசு வாழ் நாளில் வெறுப்பும் அவநம்பிக்கையுமே ஆகின்றன. மனிதனுக்கேற்படும் பழக்கவழக்கங்கள் பெரும்பாலும் அவனது சகவாசத்தைப் பொறுத்தே இருக்கின்றன. இதையனுசரித்தே "நல்லாரைக் காண்பதுவும் நன்றே" என்பதாகப் பெரியோர் மொழிந்திருக்கின்றனர். ஆனால் தற்காலம் இந்நீதி போதனைகளைக் கொண்ட நூல்கள் ஓடி ஒளிந்தனவா என்ன? ஒரு நாளுமில்லை. ஒப்புயர்வற்ற உபதேச மொழிகளை உலகினருக்குதவிய ஆன்றோர்கள் நாம் காணக் கூடிய நிலையில் இல்லையாயினும் பொன்னேபோல் போற்றக்கூடிய அன்னாரின் அமுத மொழிகள் நம்மிடத்திருந்து கொண்டுதானிருக்கின்றன. தற்காலத்திய நவநாகரிக வாழ்க்கைகளையே சதமென நம்பிக் காலங்கழிக்கும் சிலரால் பெருமூடர்களெனத் தீர்மானிக்கப்படும் முன்னோர்களின் காலவாழ்க்கையில் தெருவில் விளையாடித்திரியும் இளம்பாலகன் வாயிலும் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்,' 'நன்மை கடைப்பிடி,' 'தேசத்தோடொத்து வாழ்', 'நீதி நெறி நில்' இத்தகைய அரியபெரிய மொழிகள் வெளிவந்து கொண்டிருந்தன. ஆனால் தற்காலம் நம்குழந்தைகளுக்கு இவைகளில் ஒன்றிரண்டு பதங்களேனும் தெரியுமா? இத்தகைய நாகரிகக் கோலாகலத்தில் கோபாலன் வளர்ந்து வந்தவன். கலாசாலையில் உயர்தரப் பரீக்ஷைகளில் தேருமற் போயினும் உலக வாழ்க்கையில் மனிதனைக் கெடுக்கக் கூடிய ஒவ்வொரு கெட்ட நடவடிக்கைகளிலும் பதினெட்டு வயதிலேயே ஈடுபட்டுத் தேர்ச்சியும் பெற்று விட்டான்.

இளம் வயதிலேயே துர்ச்செயல்களில் ஈடுபட்ட கோபாலன் இன்றளவும் கவலை யென்பதை யறிந்தவனல்ல. இவன் தமையன் திவான்பகதூர் பலராமன் சென்னைப் பிரபல கனவான்களில் ஒருவரென மதிக்கப் பெற்றவர். நற்செய்கைகளாலும் பரோபகார சிந்தையாலும் ஜனங்களிடையே அழியாப் புகழ் பெற்றிருப்பதின் காரணமாகவும் கிடைக்கக் கூடிய பட்டத்தை பலராமன் தம் சுறுசுறுப்பாலும் ஒப்பற்ற உழைப்பினாலும் ஓய்வற்ற பெரும் முயற்சியாலும் மெத்த சுலபத்தில் பெற்றுக் கொண்டாரென்பது பகிரங்கமாக ஜனங்கள் பேசிக்கொள்ளும் ஒருஇரகசிய சமாச்சாரமாகும். தமையன் செல்வாக்கினாலேயே கோபாலன் சுதேச பாங்கு ஒன்றில் 'காஷ்கீப்பர்' வேலையைப் பெற்று மாதம் இருநூறு ரூபாய் சம்பளம் பெற்று வந்தான். கோபாலனுடைய சந்தோஷச் செலவுகளை யுத்தேசிக்குப்போது இவ்விருநூறு ரூபாய்களும் எம்மாத்திரம்? கொடுத்த முதல் திரும்பி வந்தாலும் சரி, வாராவிடினும் சரி, எழுத்து மூலத்தில் முதலுக்கு முதலாகக் கூடிய வட்டியை மட்டும் பத்திரத்தில் குறித்துக் கொண்டாற் போதுமென்ற அவா கொண்ட லேவாதேவிக்காரர்களிடம் மூன்று பணச் சொச்சம் நான்கு பணச் சொச்சம் என்று தாராளமாக வட்டி போட்டு ஏராளமாகக் கோபாலன் கடன் வாங்கியிருந்தான். தமையன் பெரும் பிரபுவாகையால் தன்னைக் கைவிடவே மாட்டாரென்பது இவன் நம்பிக்கை. ஆனால் இவ்வெண்ணம் பகற்கனவாய் விட்டது. ஆங்கிலேயரின் போஜன விடுதியில் உற்ற நண்பர்களுடன் கூடிப் புசித்து வீடு திரும்புங்கால் சவாரி செய்யும் மோட்டார் வண்டி மரமொன்றில் மோதி அதனால் பலராமன் எதிர் பாராவண்ணம் அகால மரணத்திற்குள்ளானர்.

குடி மயக்கத்தால் வண்டியை மரத்தில் மோதி மரணமடைந்தார் என்று சில பத்திரி

கைகள் கூசாது வெளியிட்டு விட்டன. பலராமன் இறந்து விட்டமையாலும் அவர் இதைப்பற்றி நடவடிக்கைகளொன்றும் எடுத்துக்கொள்ள முடியாதென்ற நம்பிக்கையாலுமன்றோ வெளியிட்டன! பலராமனின் உருவப் படத்தை ஒரு முறை பிரசுரிப்பதற்கென ஆயிரக்கணக்கான பணத்தைப் பிரயோஜனமாக அடைந்த இப்பத்திரிகைகள் அதே மனிதன் இறந்தபின் வெளியிட்ட விஷயத்தை முன்னதாகவே சற்று மறியாதவை என்பதல்ல. பலராமன் உயிருடனிருந்தவரை, அவர் கையெழுத்தானது ஆயிரம் ஐநூறு என்று எழுதக் கூடியவரை அவர் பிரபல கனவானாகவும் தர்ம சிந்தனையுள்ளவராகவும் பரோபகாரியாகவும் புகழப்பெற்றார். அவர் இறந்தபின் அவரைப்பற்றிய புகழ்ச்சியுரைச் சிறிது மில்லாது போனதுடன் அவரின் மரண காரணத்தை இகழ்ச்சியாக வெளியிட வேண்டியது மட்டும் அவசிய மாயிற்று போலும்!

பெரும் பணக்காரரென மதிக்கப்பட்டுவந்த பலராமன் இறந்தமறுக்ஷணத்திலேயே அவரின் உண்மை நிலையும் வெளியாய்விட்டது. பல விருந்தளிப்புகளுக்கு உண்டி தயாரித்துதவிய பென்னி ஹோட்டல்காரர் தமக்கு இருபத்தி ஐயாயிரம் கொடுபட வேண்டுமென பலராமன் மனைவிக்கு நோட்டீஸ் விடுத்தார். பானவகைகளுக்காக ஸ்பென்சர் கம்பெனியார் பதினையாயிரம் ரூபாய்க்கு வழக்குத்தொடுத்தனர். உயர்தர அந்தஸ்தினர் சிலருக்கு பலராமனால் வெகு அந்தரங்கத்தில் பக்தியுடன் பரிசுகளாக அளிக்கப்பெற்ற வைர மோதிரங்களின் கணக்கு மட்டும் இன்று வரை தீர்க்கப்படாமையால் வைர வியாபாரிகளான மேட்டா அண்ட் சன்ஸ் தங்களுக்கு இரண்டு லக்ஷம் ரூபாய்கள் சேர வேண்டுமென்று பகிரங்கப்படுத்தினர். இதனால் பலராமன் பெயரும் புகழும் அவருடன் வெந்து நீராகி, அவர் பெண்டு பிள்ளைகள் சோற்றுக்கும் தடுமாறலாயினரென்பதில் ஆச்சரிய மென்ன விருக்கிறது?

இனி கோபாலன் தன் கடனைத்தானே தீர்க்க வேண்டியவனாய் விட்டிருக்கிறான். கடன்காரர் கோர்ட்டில் வழக்கிட்டால் அவன் உத்தியோகம் தொலைந்து விடுவது நிச்சயம். ஒரு வாரத்தில் தனக்குக் கொடுக்கவேண்டிய ஐநூறு ரூபாயும் கொடுபடாவிடில் வழக்குத் தொடரப் போவதாக மணிலெண்டர் குமாரசாமி என்பார் லாயர் நோட்டீஸ் அனுப்பியிருக்கின்றாரே. இக்கடிதத்தைக் கையில் வைத்துப் படித்துக் கொண்டிருக்கும் கோபாலன் முகத்தில் களைகுன்றி உற்சாகமற்று இருப்பது நியாயந்தானே. இதிலென்ன விசேஷமிருக்கிறது. கண்ணிற் பட்டால் கரிக்குமல்லாது புருவத்திற் பட்டால் கரிக்குமா? அதுபோல் கோபாலன் நிலைமை நமக்கு வேடிக்கையாயிருந்தாலும் அவன் மட்டும் அளவற்ற கவலையிலாழ்ந்து கிடந்தானென்பது உண்மை. இதனாலன்றோ 'கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று கவியரசர் பாடியுள்ளார்.

2-வது அதிகாரம்.

நெடு நேரம் கோபாலன் சிந்தித்தான். "ஐந்தா! பத்தா!! ஐநூறு ரூபாய்கள் இரண்டொரு நாட்களில் தயாரிப்பதெங்ஙனம்? முன்போல் கடன் வாங்குவதென்றால் சுலபத்தில் முடியவில்லையே நமது நிலைமையைப்பற்றி ஆங்காங்கு சற்று பிரஸ்தாபமு மேற்பட்டிருக்கிறதே. ஒருவன் லாயர் மூலமாக நோட்டீஸ் விடுவானாயின் மற்றவர்களிடையில் இவ்விஷயம் பரவிவிடுதல் சுலபமாயிற்றே. அதிலும் வக்கீல் முகுந்தனின் குமாஸ்தா பெருத்த வம்புக்காரனல்லவோ. இவ்வாறெல்லாமிருக்க நாம் இப்பொழுது குறைந்தது பத்தாயிரம் ரூபாயாவது கையில் வைத்துக்கொள்ளாவிடில்

அவசரக்கடன்கள் அடையமாட்டா. வைர அட்டிகை வாங்கித்தரவில்லை என்ற கோபத்தால் செங்கமலம்(தாசி) முகங்கொடுத்துப் பேசவும் மாட்டேனென்கிருள். ஜவுளிக்கடைக்காரர் பாக்கி அதிகமிருக்கிறதென்று வழிமறிக்கிருர். நான் கடனாளி என்று ஜனங்களிடையே பிரஸ்தாபம் உண்டாயிருப்பதால் சிலகாலத்தில் நமது வேலைக்கும் ஹானி நேரிட்டு விடவும் கூடும். இதற்கென்ன வழி செய்யலாம். ஐயோ! வயது முப்பத்தைந்து ஆய் விட்டதே. இனியேனும் நான் ஒரு கலியாணம் செய்துகொண்டு சில காலம் சண்ணியமாய் வாழவேண்டு மென்றல்லவோ நினைத்திருந்தேன்! அண்ணன் உயிரோடு இருப்பின் இந்தக் கடன்களை எல்லாம் ஒரு நிமிஷத்தில் தீர்த்து விட்டிருப்பாரே. தெய்வமே! எனது பொல்லாத காலம் நாளுக்கு நாள் வலுக்கிறதே. பாங்கு தலைமையதிகாரிக்கும் நம்மிடம் முன்போல் அவ்வளவு அபிமானமில்லாமலிருக்கிறதே. அண்ணனின் முகதாக்ஷிணியத்திற்காக எனக்கிந்த வேலை கிடைத்ததன்றி என்னிலும் அனுபவமுள்ளவர்களெல்லாம் ஆபீசில் நிறைந்து கிடக்கின்றூர்கள். ஓகோ! மறந்து விட்டேனே. நேற்று மோஹன்தாஸ் ஐம்பதினுயிரம் கொண்டு வந்து பாங்கில் கட்டப் போவதாய்ச் சொல்லிப் போனுனே. அடடா! ஈதென்ன கெடு புத்தி. எனக்கின்றுவரைப் பிறரை மோசஞ் செய்ய வேண்டு மென்ற எண்ண முதித்ததில்லையே. பாங்கியில் பணத்தைக் கையாடுவதென்றால் சாமானியமா? மோசம் நாசம் விளைவிக்குமென்பது பொய்யோ. நான்என்ன கஷ்டப்படினும் சரியே. இத்தகைய செயலைச் செய்யவே மாட்டேன். ஆயின் எனக்கேற்பட்டிருக்கும் கஷ்டம் நீங்குவதெப்படி? கடன்காரர்களுக்கு என்ன வழி சொல்வேன்? தீயவழியால் ஏற்பட்ட கஷ்டத்தை அவ்வழியிலேதான் தீர்த்துக்கொள்ள முடியுமன்றி, நியாயம், உண்மை என்றால் வழி பிறக்குமா? லக்ஷக்கணக்காகப் பணத்தைக் கொள்ளையடித்தவர்கள் எல்லாம் தங்கள் பெயருக்குக் குறைவின்றி ஜனங்களுக்கிடையே யோக்கியர்கள்போல் வாழ்ந்து வரவில்லையா? வேறிடமுள்ள பொருளைக் கவர்வதற்கு எண்ண முண்டாவதனுல் அது பூர்வ ஜன்மத்தில் நம்முடையதாகவே இருந்திருக்க வேண்டுமென்பதில் தடை என்ன! இக்காலத்தில் நியாயமான வழிக்கே பொருளுதவி செய்வாரில்லை. அவ்விதமிருக்க என் போன்றவனுக்கேற்படும் சந்தர்ப்பத்தில் பிறர் உதவி கிடைத்தல் எப்படி?

திருட்டுத் தொழிலென்பது சாமானியமானதா? அதுவும் ஒரு சாஸ்திரமன்றோ. எதைச் செய்யினும் புத்தியைச் செலுத்தி நீண்ட ஆலோசனையின்பேரில் செய்தால் அதற்கிடைஞ்சலென்பதும் உண்டாமோ? முன்யோசனையின்றி முட்டாள்த்தனமாக ஒன்றைச் செய்யின் கஷ்ட மனுபவிக்க வேண்டியதே. மதியிலும் விதி பெரிதாயிருக்குமானல்? இல்லை, இல்லை; ஒருகாலுமில்லை. விதியை மதியால் வெல்லுதல்தான் தீவிர முன்னேற்றத்திற் கறிகுறியாகும். நல்லது, ஐம்பதினுயிரம் ரூபாயிருந்தால் நம் வாழ் நாளைச் சுகத்துடன்கழிக்கமுடியுமாவென்பதே இப்பொழுது நான் சிந்திக்கவேண்டிய ஆலோசனையாயிருக்கிறது. என் செலவிற்கு ஐம்பதினுயிரம் போதாதுதான். நான் இவ்வுத்தியோகத்திலேயே ஆயுள் முடியக் கழித்தாலும் இவ்வளவு ரொக்கம் சேர்க்க என்னல் முடியுமா? ஒரு நாளைப்போல் பகல் பத்து மணியிலிருந்து மாலை ஐந்து மணிவரை இடுப்பொடிய வேலை செய்தால் முப்பது நாட்களுக்கொரு முறை இருநூறு ரூபாய் கிடைக்கிறது. இதில் சாப்பாட்டுச் செலவுபோக மற்றச் செலவின்றி மீதப் பணத்தைசேர்ப்பதென்றாலும் வருஷம் ஒன்று

க்கு ஆயிரம் ரூபாய் சேர்க்கலாமென்றாலும், ஐம்பதினுயிரம் சேர ஐம்பது வருஷங்களன்றோ ஆகும். எனக்கிப்பொழுதே முப்பத்தைந்து வயதாய் விட்டது. இன்னம் இருபது வருஷகாலம் உத்தியோகம் செய்யலாம். அதில் இருபதினுயிரம் சேரக்கூடு மென்றாலும் இருபதினுயிரம் கொண்டு பிறகு செல்வச் சீமானைப்போல வாழ்நாளைக் கழிக்கமுடியுமா? அட! நானெவ்வளவு முட்டாளாகவிருக்கிறேன். ஏதேதோ கணக்கிடுகின்றேனே. தோட்டம் நிலத்தாலன்றோ தென்னை நடவேண்டும்? கடன்காரர் வாரண்டில் நான் பிடிபடுவேனுயின் பிறகு நான் செய்யவேண்டிய உத்தியோகம் சிறைச்சாலையிலன்றோ ஏற்படும். தவிர, ஐம்பது வயதளவும் கைகால்களைக் கட்டி வைத்துச் சேர்க்கும் அப்பணத்தினுல் நான் எனது கிழப் பருவத்தில் அடையப் போகும் சுகந்தானென்ன?

இனியஇன்பங்களை இளமையில் நன்கு அனுபவியாது, பாவம், புண்ணியம், சண்ணியம், புகழ் என்னும் வீண் விஷயங்களைப் பிதற்றவோ இவ்வுடலெடுத்திருக்கிறேன். சாத்தியமான வழியில்தான் என் மனம் ஒருமாறாது செல்லுமன்றி வேறில்லை நான் இவ்வாறே செய்து முடிப்பேன். தெய்வமே, என்னை ஏன் இவ்வாறு சோதிக்கிருய். "நன்மை விதைத்தால் நன்மை விளையும், தீமை விதைத்தால் தீமை விளையும்; 'நன்மையும்தீமையும்பின்வரக்காணலாம்" என்று எனது நண்பரொருவர் அடிக்கடிச் சொல்வாரே. 'அண்ணன் ஒரு விதத்தில் அழிந்தான், தம்பியும் வேறுவழியில் ஒழிந்தா'னென்று உலகமுள்ளவரை வசை மொழிக்காளாவதென்றால் இப்பாழும் மனம் உடன்படவில்லையே. என்ன செய்வேன்! இது சரியா? அதுசரியா? ஒன்றும் விளங்கவில்லையே. நான் முன்னேறக்கூடிய வழியை நானே ஆலோசிக்க வேண்டுமன்றிக்கவலைப்படுவதாலாவதென்ன"? என்றிவ்வாறு ஆலோசித்தவண்ணம்கோபாலன் அன்றையப் பொழுதைக் கழிக்கலானுன் இவ்வாறு நியாயம் ஒரு புறம், அநியாயம் மறுபுறமாக மனச் சாட்சியை இழுத்து வருத்தியதால் இரண்டொரு நாட்களில் உடம்பு இளைத்து முகம் வெளுத்து மனவலிவின்றி கோபாலன் பல வருஷங்கள் நோய்வாய்ப்பட்டவன் போல் காணப்பட்டான். சூதும் வாதும் வேதனை செய்யுமன்றோ.

3-வது அதிகாரம்.

திருச்சிமாநகரில் உள்ள பாங்குகளில் 'லக்ஷ்மீ சுதேசி பாங்கு' பெருத்த மூலதனமுள்ள தென்பது பிரசித்தம். சென்னையில் ஆர்பர்நட் கம்பெனி முழுகியதும் சற்று கண் விழித்த சென்னை மாகாணத்தார் ஆங்காங்கு சுதேசி பாங்குகளை ஸ்தாபிக்க முயன்றதில் லக்ஷ்மீ சுதேசி பாங்கு திருச்சியில் ஐம்பது லக்ஷம் ரூபாய் மூலதனத்துடன் 1910-ல் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் டைரெக்டர்களில் பலராமன் ஒருவர் ஆனது பற்றியும், பலராமன் வெறும் பலராமனுக மட்டும் இல்லாது திவான் பகதூர் பலராமனுக இருந்ததினுலேயும் பலராமன் தம்பி கோபாலனுக்கு இப்பாங்கியில் காஷியர் வேலை கிடைத்தல் சுலபமாயிற்று, பெருத்த பாங்கு ஒன்றில் டைரெக்டராகவிருந்த பலராமனின் குடும்பம் அவர் காலமானதும் சோற்றுக்குத் திண்டாட நேரிட்டதேன் என்று வாசகர்கள் சந்தேகிக்கலாம். இதற்குப்பதில் சொல்ல நம்மால் இயலாது. ஏனெனில் பாங்குகளின் ஸ்தாபன விஷயங்களைப் பற்றியோ அதிலுள்ள டைரெக்டர்களைப் பற்றியோ நமக்கு அதிகம் தெரிந்து கொள்ள சாவகாசமில்லை. டைரெக்டர்கள் கட்டியுள்ள தொகையை யனுசரித்து அதில் சிறிதளவுதான் கடன் வாங்கலாமா, அல்லது கட்டும்

மூலதனம் வேறு, கடன் வாங்குதல் வேறு என்ற அர்த்தமாவென்பதை நாம் ஆராய்தல் அனுவசியம். திவான் பகதூர் பலராமன் அநேக பொது ஸ்தாபனங்களில் தலைவராகவுமிருந்திருக்கிறார் என்றால் அவர் அந்தஸ்தை அளந்துபார்க்க யாரால் சாத்தியப்படும்? பலராமன் இறந்த பின் அவர் பேரும்புகழும் இருந்த விடந்தெரியாது ஒளிந்ததன்றி அவர் உயிர்த்திருந்தவரை செல்வச் சீமானாகவும் கண்ணிய புருஷராகவும் ஜனங்களிடையே மதிக்கப் பெற்றிராவிடில் பதினைந்து லக்ஷம் ரூபாய்க் கடனை இரண்டாம் பேர் அறியாது உயிர்த்திருக்கும் வரையில் மூடுமந்திரமாக வைத்துக்கொள்ள அவரால் முடியுமா? வாசகர்காள்! ஒரு விஷயத்தைச் சொல்ல முன்வரும் பொழுது பல விஷயங்கள் இடையிடையே கலக்குமானாலும் முக்கியமாயுள்ள விஷயத்தை நாம் கவனிக்க வேண்டியது அவசியமானது பற்றி லக்ஷ்மீ சுதேசி பாங்கியில் கோபாலனுக்குக் காஷ்கீபர் வேலை கிடைத்ததற்கு அவன் தமையன் பலராமன் அதில் ஒரு டைரெக்டரா யிருந்ததே காரணமென்பதை மட்டும் தெரிவித்து மேல்க் கதையைத் தொடர்வோம்.

பிரபல சுதேசி பாங்கு ஆகிய இதில் லக்ஷம் ரூபாய் களவு போய் விட்டதாக ஒரு வதந்தி ஏற்படுமானால் அதை எளிதில் நம்பமுடியுமா? இது விஷயம் கூடிய வரை இரண்டு மூன்று நாட்கள் பரம ரகசியத்திலிருந்ததாயினும் திருச்சியிலுள்ள நிருபர் ஒருவர் சுதேசமித்திரனில் 'திருச்சி லக்ஷ்மீ சுதேசி பாங்கியில் ஒரு லக்ஷம் ரூபாய் களவு போய் விட்டதாக ஒரு பிரஸ்தாபம். ஆனால் நம்பக்கூடிய விதமான செய்திகள் கிடைக்கவில்லை' என்று ஜாடையாகப் பிரஸ்தாபித்து விட்டார். முடிவில் ஒருவாறாக பாங்கியில் லக்ஷம் ரூபாய் களவு போயிருப்பது உண்மையென்றும் அத்துடன் காஷ்கீபர் கோபாலன் காணப்படவில்லை என்றும் பாங்கு அதிகாரிகளால் பகிரங்கப்படுத்தப்பட்டதிலிருந்து ஜனங்கள் இது விஷயமாகப் பலவாறு பேசிக்கொண்டார்கள். பாங்கில் களவு போனதற்கும் கோபாலன் காணாமற் போனதற்கும் சரியான சம்பந்தமிருக்கவேண்டியது நியாயந்தானென்று பலர் தீர்மானித்தனர். இது விஷயமாகப் போலீஸார் செய்து வரும் விசாரணைகளெல்லாம் பரம ரகசியமாகவே இருந்தனவாகையால் களவு போன விஷயத்தைப்பற்றி விவரமான தகவல் ஒன்றும் வெளியாகவில்லை. "ஆசாமி நல்ல கெட்டிக் காரடபேர்வழிதான்! பலராமன் தம்பியல்லவா இந்த கோபாலன். மீன் குஞ்சுக்கு நீந்தப் பழக்குவாரும் வேண்டுமோ? சரியானபடி லக்ஷம் ரூபாயைத் தட்டிக்கொண்டு ஆள் கப்பி நீட்டி விட்டானே. ஆமய்யா! இந்த உத்தியோகத்திற் கெல்லாம் யோக்கியனாயுள்ளவனை நியமனம்செய்ய வேண்டியிருக்கப் பெரிய விடத்து சிபார்சுக்காக ஒருவனுக்குக் காஷ்கீபர் வேலையைக் கொடுத்து விட்டார்களே. அவன் விழி எப்போதும் திருட்டு விழியாகவிருந்திருந்தால் ஆயிரம் இரண்டாயிரத்துடன் போயிருக்கும். கோபாலன் பலராமன் தம்பியானதால் பெருந்தன்மைக்குக் குறைவில்லாமல் பெருத்த தொகையை அடித்துக் கொண்டு போய் விட்டான். இந்த நஷ்டத்தை யார் தலையிற் போடுவது? பாங்கில் அதிகாரிகளை நியமிக்கும் உரிமையை டைரெக்டர்களிடமே ஒப்படைத்து விடாமல் பாங்குக் காரர்களின் பொதுக்கூட்டத்தில் இவ்விஷயங்கள் சர்ச்சை செய்யப்பட வேண்டுமென்று ஏற்படாமல் போனதாலல்லவோ இவ்வாறு நஷ்டமேற்படக் காரணமாயிற்று! இன்னம் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதோ, ஏற்படப் போகிறதோ கடவுளுக்கே வெளிச்சம். கையிலுள்ள பணத்தைத் திரட்டிக் கொடுத்து விட்டுக் கையைக் கட்டிக் கொண்டு கிருஷ்ணா, ராமா, கோவிந்தாவென்று கிடக்கவேண்டியது தான்" என்றிவ்வாறு பலர் பற்பல விதமாகப் பேசிக் காலங்கழித்தனர். அன்று திருச்சி நகர் முழுதும் பாங்கில் களவு போனது பற்றிப் பல விதச் செய்திகள் நிமிஷத்திற்கு நூற்றுக் கணக்காகப் பரவிக்கொண்டிருந்தன.

ஜனங்களிடையே உள்ள பிரஸ்தாபமெவ்விதமிருந்தாலும் உண்மையில் நடந்த விஷயமென்ன? கோபாலன்தான் திருடிச் சென்றானா? அல்லது வேறுவழியிற் களவு போனதை கோபாலன் மீது சுமத்தியிருப்பார்களா? 'காக்கை வந்ததும் பனம்பழம் விழுந்ததும்' என்பது போல வெள்ளிக்கிழமை மாலையில் களவு போயிருப்பதாகத் தெரிகிறது. சனிக்கிழமை யன்றும் கோபாலன் வேலை பார்த்திருக்கிறான். ஞாயிறன்று ஓய்வு நாளானது பற்றிக் கோபாலனைக் கவனிப்பாரில்லாமலிருக்கலாம். திங்களன்று களவு போயிருப்பதாகப் பகிரங்கப்படுத்தப்படிருக்கிறதென்றால் இக்களவு கோபாலனால் நடந்ததா, அல்லது ஒரு கால் பாங்கு கட்டடத்திலுள்ள பழம் பெருச்சாளிகள் சிலர் தலை மறைவாகப் பதுங்கியிருந்து நாளாவட்டத்தில் சன்னம் சன்னமாக லக்ஷம் ரூபாயை மென்று தின்று விட்டனவா? போலீஸ் அதிகாரிகள் இவ்விசாரணையை இவ்வளவு ரகசியத்தில் நடத்துவதேன்?

கோபலன் திருடிச் சென்றதாக வைத்துக் கொண்டாலும் இதை அவன் வெளிப்படாது காப்பாற்றுவதென்றால் சாத்தியப்படுமா? கோபாலன் எந்த வேஷமெடுத்து எங்கு ஒளித்திருந்தாலும் நமது போலீஸ் வீரர்களின் ஆராய்ச்சியிலிருந்து தப்பமுடியுமா? கோபாலா, நீ ஒரு முட்டாள் அன்றி வேறில்லை. பெருத்த தொகையைத் திருடிச்சென்று வெளியாகாமலிருக்க வேண்டுமே என்று நீ உன் வாழ் நாளையெல்லாம் பெரும் கலக்கத்துடன் கழிப்பதைக் காட்டிலும் வேறு சிறைச்சாலை வாசமும் உனக்கு இருக்கிறதோ! ஐயோ, பாவம்! 'முதற் கோணல் முற்றும் கோணல்' என்றபடி ஆரம்பத்திருந்தே நீ ஒழுங்கற்ற வழிகளிற் சென்று உன் அறிவை—உனக்குக் கடவுள் அளித்த அறிவை—ஒப்பற்ற அறிவை—மனித வாழ்க்கைக்குப் போதாதாரமாயுள்ள அறிவைத் தீய வழிக்குத் தீபமாக உபயோகித்துக் கொண்டு விட்டாயே. கெட்டிக்காரன் பொய் எட்டு நாளில் வெளிப்படுமென்பது உலகச் சொல். ஆனால் கோபாலன் விஷயத்தில் இப்பழமொழி எப்படி முடியுமோ கவனிப்போம்.

4-வது அதிகாரம்.

'கண்ணால் கண்டது பொய், காதால் கேட்டதே மெய்' என்று சாதிப்பார் பலர் உளர். திங்களன்று வழக்கம் போல் காஷ்கீபர் கோபாலன் ஆபீசுக்கு வரவில்லை. வீட்டில் விசாரித்ததில் முன் தினம் அதிகாலையிலேயே கோபாலன் வீட்டை விட்டு வெளியிற் சென்றதாக வேலைக்காரன் தெரிவித்தான். இதை யாதாரமாக வைத்துக்கொண்டு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் தீரவிசாரித்ததில் வழக்கம் போல் கோபாலன் குணசேகரம் சென்று காவிரி யாற்றில் ஸ்னானம் செய்ததாயும் விளையாட்டாகச் சற்று நீந்திக் கொண்டிருந்த சமயம் முழுகிப் போய் விட்டதாகவும் தெரிய வந்தது. ஆடி மாதத்தியப் பெரும் வெள்ளத்தில் ஆழ்ந்துவிட்டவன் சவத்தைக்கண்டுபிடிப்பது முடியாத காரியம். சுமார் பதினைந்து வருஷகாலமாகக் கோபாலன் காஷ்கீபர் வேலை பார்த்து வந்திருக்கிறான். ஒரு சமயத்திலும் சிறிய தவறு ஒன்றைக்கூட செய்தவனல்ல. இன்றளவும் அவன் வைத்த கணக்கு வழக்குகளில் பிசகு நேர்ந்

தது மில்லை. இவ்வாறிருக்க, இன்று பாங்கில் களவு போயிற்றென்றால் அதற்குக் கோபாலனைப் பாத்தியப்படுத்தல் என்ன நியாயம்? ஆனால் சமயத்திற்கேற்றவாறு பேசுவதே சகஜமாயிருக்கின்றது. கோபாலன் காவிரி யாற்றில் மூழ்கி மாண்டான் என்ற சொல் வெளியானதும் 'ஆம், அவன் மெத்த யோக்கியனாயிற்றே. இவ்வாறு செய்வானா? பாங்கியில் திருடவேண்டுமென்று அவன் நினைத்திருந்தால் பதினைந்து வருஷகாலமாக ஒழுங்குடன் வேலை செய்து காத்திருக்கவேண்டுமோ? இருநூறு ரூபாய் சம்பளம் வாங்கக்கூடிய ஒருவனுக்கு இவ்வாறு புத்தி கெட்டு விடுமோ? கோபாலன் காவிரியாற்றில் முழுகி இறந்த செய்தி வெளியாகாமற் போயிருக்குமாயின் அவன் தலையில் தானே இப்பழி சுமர்ந்திருக்கக் கூடும். பாங்கு நடவடிக்கைகளில் ஏதோ பெருத்த மோசம் கலந்திருப்பதாலேயே விசாரணை விஷயமொன்றும் வெளிவராமல் சிதம்பர ரகசியமாக அடக்கி வைக்கப்பட்டிருக்கிறது போலும்' என்று மீண்டும் ஜனங்கள் பேசவாரம்பித்தார்கள். இவர்கள் முதலிற் பேசியது உண்மையா, அல்லது பிறகு சொல்வது வாஸ்தவமா என்றால் இதை யாரால் தான் தீர்மானிக்க முடியும்? எல்லாம் வல்ல கடவுளுக்கு இவ்வுண்மை தெரியுமானாலும் கடவுள் வாய்திறந்து வெளியிடப் போவதில்லையல்லவா? முடிவில் ஒரு வழியுமற்று ஏமாந்தவர்கள் கோபாலனுக்குக் கடன் கொடுத்தவர்களேயன்றி லக்ஷம் ரூபாய் களவு போனதால் பாங்கிக்கு ஒரு நஷ்டமும் ஏற்படவில்லை. முன்னிலும் பதின் மடங்கு பிரசித்தி யடைந்து வந்தது. லக்ஷம் ரூபாய் எங்கே போயிற்றென்றும் எவ்வாறு போயிருக்குமென்றும் ஜனங்கள் தங்களுக்குள் பலவாறு பேசிப்பேசிப் பொழுது போக்கினார்கள். போலீஸ் அதிகாரிகள் இக்களவு விஷயத்தில் எடுத்துக்கொண்ட சிரமத்திற்கும் குறைவில்லை. அதற்கிடையே வினாடிகள் நிமிஷங்களாகவும் நிமிஷங்கள் மணிகளாகவும் மணிகள் இராப்பகல் நேரமாகவும் இராப்பகல் ஒரு நாளாகவும் பலநாட்கள் மாதங்களாகவும் மாதங்கள் வருஷங்களாகவும் இவ்வாறு பல வருஷங்கள் கழிந்து விட்டன. பாங்கியில் களவு செய்தவர் யார் என்ற பிரஸ்தாபம் போய்க் களவு நடந்ததென்ற விஷயத்தையும் ஜனங்கள் அறவே மறந்து விட்டார்களென்றே சொல்லலாம். பாங்கியில் களவுபோன விஷயமாகக் கவனம்செலுத்தப்பட்டதாவென்று சென்னை சட்டசபையில் அடிக்கடி ஜனப்பிரதிநிதிகளால் கேள்வி கேட்கப்படுவதற்கெல்லாம் கவனிக்கப்படுகிறதென்ற பதிலும் பழம்பாடமாய் விட்டது. கொலையாளி இன்னார் என்று வெளிப்படாது பல கொலைக்கேசுகள் நடைபெறுவதைக் காட்டிலும் இதில் பிரமாதமென்ன விருக்கிறது! நமக்குத்தான் என்ன? நாமும் மறந்து விடுவோம். ராமனாண்டாலென்ன ராக்ஷஸனாண்டாலென்ன?

5-வது அதிகாரம்.

நாடகம் என்பது முன்னோர்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்ட கலைகளில் ஒன்று. நாகரிகக் கோலாகலத்தினிடையே நாடகம் என்பது ஆபாசக் களஞ்சியமாகவும் அசந்தர்ப்ப நடவடிக்கைகளுக்கு இருப்பிடமாகவும் ஏற்பட்டு நடைபெறுமானால் அதற்காக நாடகம் என்ற கலையையே அடியோடு வெறுத்துத் தள்ளல் பொருத்தமானதன்று. ஜனங்களிடையே நல்லொழுக்கத்தையும் மதப் பற்றுதலையும் தெய்வ பக்தியையும் எளிதிற் பிரசாரம் செய்வதற்கென்றே நாடகம் நடிக்கப்படுவது முற்கால வழக்கம். கண்ணனிடம் மெய்யன்பு பூண்ட பக்த சிகாமணிகள் தங்கள் உள்ளத்திலுள்ள பக்தி வெள்ளம்போல் துள்ளி யெழ இவ்வானந்தக் கடலில் அனைவரும் எளிதில

மிழ்ந்து புனிதராகட்டு மென்ற நோக்கத்துடன் கிருஷ்ண பரமாத்மாவின் லீலைகளை நாடகங்களாக நடித்து நல்லுபதேசம் செய்திருக்கிறார்கள் என்பது புராணப் பிரசித்தம். மேனாட்டு சரித்திரங்களிலும் இவ்வுண்மை விளங்குகிறது. ஆதி கவியெனப்போற்றப்பட்ட ஷேக்ஸ்பியர் தமது நூல்களின் கருத்து ஜனங்களிடையே நன்கு பரவுவதற்கு நாடகமே சிறந்ததெனக்கண்டு பல நாடகங்களை இயற்றி அவைகளை முதன் முதலில் வேஷமிட்டு அரங்கமேடையில் நடிக்க அமைத்ததாகவும் தெரிகிறது. பண்டைய காலத்தில் அரசர்களால் ஆதரிக்கப்பெற்ற கலைகளில் நாடகமும் ஒன்றாக இருந்தது. ஒரு சரித்திரத்திலுள்ள சாராம்சத்தைத் திரட்டி ஒழுங்காயமைத்துச் சில அங்கங்களில் தெளிவுபட எடுத்துக்காட்டக்கூடிய சக்தி நாடகத்திற்கே அமைந்துள்ளது. தன்னையறியாது மனவுணர்ச்சியைக் கொழுந்து விட்டெரியச் செய்து தன்மயமாக்கக்கூடிய அபார சக்தியை நாடகம் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது. இதனாலேயே நாடகமென்பது சிறப்பான வழியில் உயர்ந்த நோக்கத்துடன் நடைபெற வேண்டுமென்ற உண்மையறிந்த பலர் சில சமயம் இதற்கு மாறாக நடக்கும் நாடகங்களை வெறுத்ததிலிருந்து பொதுவாக நாடகமென்ற உயர்ந்த கலை ஆதரிப்பாற்று ஒடுங்கி விட்டதென்றே சொல்லலாம். உண்மையை வலியுறுத்திக் காட்டவேண்டுமென்ற எண்ணத்தினாலேயே ஆதி கவியான வால்மீகி பகவான் லோகமாதாவாகிய சீதாப் பிராட்டியாரை ஸ்ரீராமசந்திரன் காட்டிற் கனுப்பிய நிகழ்ச்சியைத் தமது ஆச்சிரமத்தில் ஸ்ரீராமனுக்குறான நாடகமாக நடித்துக்காண்பிக்கச் செய்தார். உலகாபவாதத்தையே பெரிதாக மதித்த ஸ்ரீராமபிரானுடைய உள்ளமானது இக்காட்சியைக் கண்டு அனலிலிட்ட மெழுகைப்போல் உருகித்தவித்ததில் விசேஷ மென்ன விருக்கிறது! சீதை துக்கித்து அலறியதாகவும் வனதேவதைகளைப் பிரார்த்தித்ததாகவும் வனவிலங்குகளைக் குறித்துத் தன்னை விழுங்கி விடும்படி மன்றாடியதாகவும் நடிக்கப்படும் சமயங்களில் ஸ்ரீராமபிரான் மூர்ச்சை யடைந்ததாகவும் சில சமயங்களில் தன் உருவத்தை மறைத்துக் கொண்டு உபசரித்த சீதாதேவியின் கரஸ்பரிசத்தால் ராமமூர்த்தியை எழுப்பவேண்டியதாயிற்றென்றும் நாம் படித்திருப்பதிலிருந்து உற்றுணர்ந்து உண்மையைப் போதிப்பதில் நல்லாசானாக விளங்கும் கலை நாடகமொன்றே என்பதை நன்கறியலாம். நாடகமென்பது நவரசத்தால் சூழப்பட்டிருப்பினும் தற்காலத்திற்கேற்றவாறு குறைக்க வேண்டியதைக் குறைத்து உயர்ந்த முறையில் நடிக்கப்பெறும் நாடகத்தைக் கண்டு களிப்பதில் அறிவாளிகளுக்குள்ள விருப்பம் அளவு கடந்ததன்றோ? 1920 வருஷம் ஜூன் மாதம் ஐந்தாந்தேதியன்று மதுரை நகரிலுள்ள ஆட்டக்கொட்டகை ஒன்றில் வர்ணக்கொடிகள் கட்டப்பட்டு வாத்தியம் முழங்கிக் கொண்டிருந்தது. தெருச்சுவர்களிலெல்லாம் மாலையில் நடக்கவிருக்கும் நாடகத்தைப்பற்றி நோட்டீசுகள் ஒட்டப்பட்டிருந்தன. ஜட்கா வண்டிகள் பல தமது கூட்டின்மீது கொட்டைபோலப் பெரிய எழுத்துக்களில் அச்சடித்து ஒட்டப்பட்டிருக்கும் விளம்பரங்களுடனும், ஒலிக்கப்படும் வாத்திய கோஷங்களுடனும் நாடக விளம்பரத்தை மதுரையிலுள்ள சிறு சந்து பொந்துகளிலும் தாராளமாக வாரியிறைத்துச் சென்றன. எங்கு பார்த்தபோதிலும் மாலையில் நடக்கப் போகிற நாடகத்தைப் பற்றியே பேச்சாக விருந்தது. நாடகம் சென்று கண்டுகளிக்க எண்ணமுள்ள பள்ளிச் சிறுவர்களெல்லாம் அன்றிரவு வாத்தியார் வீட்டில் படிக்கச் செல்வதாகப் போக்குக் காட்டி தங்கள் பெற்றோரிடம் அனுமதியை

வெகு எளிதிற் பெற்றுக்கொண்டு விட்டார்கள். அன்று பகல் மூன்று மணிக்குள்ளாகவே நாடகசாலையிலுள்ள சோபாக்களும் நாற்காலிகளும் ‘ரிஸர்வ்’ செய்து முடிக்கபெற்று மற்ற டிக்கெட்டுக்களும் கணக்கின்படி விற்கப்பட்டு விட்டமையால் இரவு ஏழு மணியிலிருந்து நாடகக்கொட்டகையின் வாயிலில் இரண்டாம் ஆட்டத்திற்காக ஜனக்கூட்டம் அதிகரித்து உள்ளே செல்ல வேண்டியதற்காகச் சந்தடி செய்துகொண்டிருந்தது. சிலப்பதிகாரக் கதையின் சாராம்சமாகின்ற கோவலன் சரித்திரம் அன்று நடிக்கப்படுவதாயின் அன்று ஜனக்கூட்டம் அதிகரிக்காமலிருக்குமா? நாடக சபைகளில் புகழ்பெற்ற இக்கம்பெனியில் நடிப்பதில் ஒப்புயர்வற்ற புகழ் படைத்திருக்கும் இருவர் கோவலனாகவும் மாதவியாகவும் நடிக்கப்போவதறிந்து இதைக் கண்டுகளிக்க வெண்ணிய ஜனங்களின் ஆர்வத்தை யறிந்த போலீஸ் சிப்பந்திகள் இயன்றவரை இடமமைத்துக் கொடுப்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்தார்கள். ஐந்து மணியடித்ததும் நாடகசாலைக்குள் பிரவேசித்த ஒருவரைக்கண்டு இவர்தான் கோவர்த்தன் லால என்று பலர் பேசிக்கொண்டனர். புஷ்பகவிமானம் போன்ற பல மோட்டார் ரதங்கள் நாடகசாலையின் தெருவை யடைத்துக் கொண்டு நின்றன. மெல்லிய மஸ்லின் உடைகள் ஒரு பக்கம், அழகிய கதராடைகள் ஒரு பக்கம், பளபளவென்று பகட்டும் வைர மோதிரங்கள் ஒரு பக்கம், மினுமினு வென்று ஒளி வீசும் வெற்றிலைப் பெட்டிகள் ஒரு பக்கம்; ஒய்யார நடை ஒரு பக்கம், ஒளி வீசும் கங்கணங்களணிந்த கையால் பட்டுக் குட்டைகளைக்கொண்டு பாதி மறைத்தும் மறைக்காமலும் வெளித்தோன்றச் செய்யும் புன்னகை ஒரு பக்கம்; உயர்தர செண்ட் ஒரு பக்கம், அழகிய பொய்க் கூந்தலால் அமைக்கப் பெற்ற கொண்டைகளில், அணியப்பெற்ற மலர்களின் நறுமணம் ஒரு பக்கம்; சிலிப்பர் பூட்சுகளின் சத்தம் ஒரு பக்கம், உயர்தர சரிகைச் சேலைகளின் உராய்தலால் உண்டாகும் ஓசை ஒரு பக்கம்; இவ்வாறு அந்நாடகசாலையானது பலவாறு பிரகாசித்தது. ஊன்றிப் பார்க்கும் வழக்க முள்ளவர்களின் கண்களுக்கு நான்கு புறங்களையும் சுற்றிப் பார்க்கும் காலத்தில் இது என்ன வைரச் சுரங்கமோ, அந்நிய நாட்டுத் துணிகளை சேமிக்கும் பண்டகசாலையோ, சுகந்தச் சோலையெனப் பெயர் பெற்ற கும்பகோணம் K. அப்துல் ரகிமான் அண்ட் சன்ஸின் நறுமணச் சாலையோ, நவநாகரிகம் நர்த்தனம் செய்யும் அரங்கஸ்தலமோ, தேசாபிமானக் குழவியின் சிறு தொட்டிலோ என்பதாகப் பலவிதத் தோற்றங்களை அக்கூட்டம் தன்னுள் அடக்கிக் கொண்டிருந்தது.

அரங்கமேடையின் முகப்பில் "கந்தர்வ கான ஸபா" என்ற எழுத்துக்களுடன் விளங்கிக் கொண்டிருந்த திரைச்சீலை மெல்லெனெ அசைந்தாடிய வண்ணம் விலக ஆரம்பித்தது. முன் வரிசையிலுள்ள பிரபுக்கள் தத்தமது ஆசனங்களில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்கள். நாடக பாத்திரங்களின் பிரவேசத்திற்கு முன் இனிய தேசீய கீதமொன்று ஒலித்ததும் ‘நாம் யார்’ என்ற எண்ணம் அனைவருடைய மனதிலும் மின்னலொளிபோல் ஊடுருவிப் பாய்ந்தது. கதாநாயக நாயகிகளின் நடிப்பு அங்குள்ள கலைஞானிகளின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதென்பது மிகைச்சொல் அல்ல. கோவலனாக நடித்தவர் தகாதவழியிற் செல்வதால் ஆடவன் அடையக் கூடிய துன்பத்தை சமயோசிதமான முறையில் அர்த்த புஷ்டியுள்ள அரும்பதங்களைப் பிரயோகித்துச் சுருக்கமாக எடுத்துக்காட்டி இனிய நடையில்

ழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் 17037

செய்த சொற்பெருக்கானது அவ்விடம் விஜயம் செய்திருந்தவர்களில் சிலருக்குப் புதிய உணர்ச்சியொன்றை விளைவித்ததுடன் கற்றவர்களால் துவேஷபுத்தியின்றிப்போற்றக்கூடிய நிலைமையிலும் பொருந்தியிருந்தது. கதையின் முதற்பாகத்தில் மாதவியாகவும் இரண்டாம் பாகத்தில் கண்ணகியாகவும் நடித்தவர் ஒருவரேயாயினும் இவரது அபிநயசாமர்த்தியத்தை என்னென்றுரைப்பது? மாதவி வேடத்துடனிருக்கும்போது இருந்த ஒய்யாரமும் உள்ளத்தை மயக்கும் தந்திரமும் கள்ளப்புன்னகையும், கண்ணகி வேடத்திற் பெற்றிருந்த சாந்தமும் அமைதியும் சோகரசமே உருவெடுத்து வந்ததைப்போன்ற முக விலாசமும் அடுத்தடுத்து எவ்வாறு ஏற்பட்டதென்று பார்ப்பவர்களுக்கு மெத்தவியப்பையும் பிரமிப்பையும் விளைவித்தது. சோகரசப் பிரதானமான இந்நாடகத்தைப்பார்க்க வந்திருக்கும் கனவான்களின் மத்தியில் ஸ்ரீமான் கோவர்த்தன்லால் என்ற பிரபல ரத்தின வியாபாரி அமர்ந்திருந்தார். அவர் தமதருகில் உட்கார்ந்திருப்பவரைக்கொண்டு கோவலனாக நடிப்பவர் ஸ்ரீமான் P. S. வேலு நாயர் என்றும், மாதவியாகவும் கண்ணகியாகவும் நடிப்பவர் ஸ்ரீமான் K. S. அனந்த நாராயண ஐயர் என்றும் இவ்விருவரும் தென்னிந்திய நாடக உலகில் நற்புகழ்படைத்தவர் என்றும் தெரிந்துகொண்டார்.

நாடகத்தின் முடிவில் ஸ்ரீமான் கோவர்த்தன்லால் எழுந்து சென்ற சமயம் சிலர் செய்த மரியாதையாலும், பின் தொடர்ந்து சென்ற அவர் மனைவியின் விலையுயர்ந்த ஆடையாபரணங்களாலும், வெள்ளிக் கூஜாவையும் வெற்றிலைப் பெட்டியையும் தாங்கிச்சென்ற ஆட்களின் பரபரப்பினாலும் கோவர்த்தன் லாலின் செல்வப்பெருக்கு இரட்டிப்பாகக்காண்பிக்கப்பட்டதென்று சொல்லலாம். பல பிரபல ஸ்தர்களின் பரிசய[illegible] இன்று இவர் கிடைக்கப்பெற்றார். நாடகம் என்றால் இவ்விதமாகவே இருக்கவேண்டுமென்றும், சோடா புட்டிகள் உருசியாயிருக்கவில்லை என்றும், சோபாவில் மூட்டைக்கடி அதிகமென்றும், தூக்கம்கெட்டுவிட்டதென்றும், ‘விசேஷகாலத்தில் சதிர்க்கச்சேரி வைத்ததால் வந்த ஆபத்தைப் பாருங்கள்’ என்றும், ‘ஏ ஐயா! சற்று நடுவில் கண்ணயர்ந்துவிட்டேனே, மாதவி வீட்டிலிருந்து கோவலன் எப்போது திரும்பி வந்தான்’ என்றும் ‘கோவர்த்தன்லால்! எவ்வளவு அழகான பெயர்; யார் இப்புதிய பேர்வழி’ என்றும் இவ்வாறு அவரவர்கள் தங்கள் மனதிலுள்ளதைத் தாராளமாக வெளியிட்டுப் பேசிய வண்ணம் தத்தமது வீட்டிற்குச் சென்றார்கள். மதுரையில் கோவர்த்தன்லாலின் பெயர் பரவுவதற்குக் கந்தர்வகான சபையாரின் ஆட்டமும் ஒரு காரணமாக ஏற்பட்டது.

6-வது அதிகாரம்.

கோவர்த்தன்லால் வடஇந்திய வாசியாயிருந்தும் அவர் மதுரைக்குவந்த சில மாதங்களிலேயே தமிழைப் பிழையறப் பேசவும் எழுதவும் தெரிந்துகொண்டார். அகன்ற மார்பும் உயர்ந்த உருவமும் சிவந்தமேனியுமுள்ள கோவர்த்தன்லாலைப் பார்ப்பவர்கள் இவர் ஒரு யுத்தவீரனென்றே மதிப்பார்கள். ஒருவரையும் லக்ஷியம் செய்யாத மனோபாவமும் உற்சாகமே உருவாய்க்கொண்ட முகப்பொலிவும் செல்வப்பெருக்கும் பெற்றுள்ள இவரிடம் ஈகையென்ற உயர்குணமும் பொருந்தியிருந்தது. வியாபார விஷயமாக மதுரைக்கு வந்திருந்தபோதிலும் நாள் தவறாது ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேசுவரரின் தரிசனம் செய்துவந்ததுடன் வாரத்திற்கொருமுறை ஏழை எளியவர்களுக்கு அன்னதானமும் வஸ்திரதானமும்

செய்துவந்தார். இதனால் இவர் பெயர் மதுரையில் நாளுக்கு நாள் பிரபலமடைந்து வந்தது.

பல பொது ஸ்தாபனங்களுக்குப் பணத்தை ஓட்டாஞ்சல்லிபோல் வாரி வாரி இறைத்து வந்தார். கோவர்த்தன்லால் பெயரால் வாழ்த்துக்கவியும் புகழ்ச்சிப்பாடலும் பாடிப் பரிசு பெறாதார் மிகச்சிலரே. ஆரம்பத்தில் இவர் மதுரையில் சில நாட்களே தங்குவதாக நினைத்திருந்தார். ஆனால் அவ்வூரின் சுகாதார நிலையையும் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசர்களின் திவ்விய தரிசனத்தையும் அங்கு ஏற்பட்ட உயர்தர அதிகாரிகளின் நட்பையும் பிரபுக்களின் சகவாசத்தையும் முன்னிட்டு மதுரையில் சில காலம் வசிக்கவேண்டுமென விருப்பமுற்றார். தல்லாக்குளத்தில் குடியிருப்புக்கு வசதியுள்ளதும் மா, பலா, தென்னை முதலிய மரங்களும் மல்லிகை இருவாக்ஷிபோன்ற புஷ்பச்செடிகளும் நிறைந்த பெருந்தோட்டத்திடையே கட்டப்பட்டிருப்பதுமான இரண்டடுக்குமாளிகை யொன்றை லக்ஷம் ரூபாய்க்கு வாங்கினார். இம்மாளிகைக்கு இவர் மனைவியின் பெயரை முன்னிட்டு 'சுசீலாகிருகம்' என்று பெயரிடப்பட்டது. வியாபார முறையில் இவருக்கிருந்த சாமர்த்தியமும் பொருளீட்டலில் இருந்த சுறுசுறுப்பும் அளவுகடந்ததாயிருந்தன. உயர்தர ஆடையாபரணங்களையணிந்து உற்சாகமாக மோட்டாரில் உலாவச்செல்லும் சுசீலையைக்கண்டு 'பெண்ணென்று பிறந்தால் இப்படியல்லவோ இருக்கவேண்டும்! அடியம்மா! அதென்ன நகை, அதென்ன சேலை, அவளல்லவோ பாக்கியசாலி! நாமும் பிறந்திருக்கிறோமே, அந்தியும் சந்தியும் அடுப்பைக்கட்டிக் கொண்டழுவதற்கு!'' என்றிவ்வாறு சில பெண்கள் மனம் வருந்துவதுமுண்டு. இந்திர சபையோ, அளகாபுரிப் பட்டணமோ என்று கண்டவர் வியக்கும்படி சுசீலா கிருகத்தை யலங்கரித்து அடிக்கடி கனதனவான்களுக்கு விருந்தளித்துக் கோவர்த்தன்லால் தமது செல்வப்பெருமையைப் பிரகாசிக்கச் செய்துகொண்டார்.

சுமார் நாற்பது வயதிற்குள் அபரிமிதமான செல்வம், அழகிற் சிறந்த மனைவி, அளவுக்கு மிஞ்சிய பெரும்புகழ் இவ்வளவும் ஒருவனுக்குக் கிடைக்குமானால் மனித வாழ்க்கையில் தேவையானது மற்றென்ன விருக்கிறது? அதுவும் தற்காலத்தில் பெரும்புகழ்ச்சிக்குரியது பணம் ஒன்றேயன்றோ? பணம் பிரதானமாகவிருக்கும் இக்காலத்தில் குணமும் அத்துடன் பொருந்தியிருக்குமானால், ஈகையும் கலந்திருக்குமானால் அவனைக் கேவலம் மனுஷியனென்று சொல்லாது அவனையொரு தெய்வீக அருள் பெற்ற புண்ணியபுருஷனாக ஏன் சொல்லக்கூடாது? ஆகையால் கோவர்த்தன்லாலின் புகழ் அளவுகடந்து பெருகியது கண்டு ஆக்ஷேபித்துக் கூற யாரால் முடியும்? ஈகையென்றதின் தத்துவமான தியாகத்தன்மையானது புண்ணிய பூமியாகிய பரத நாட்டில் சற்று மறைவுற்றதினாலன்றோ ஏழ்மையும் தாழ்மையும் அபிப்பிராய பேதங்களும் தலைகாட்ட ஏதுவாயிற்று.

இவ்வரிய குணம்படைத்திருக்கும் கோவர்த்தன்லால் நாளுக்கு நாள் பிரசித்த புருஷராக விளங்கி வந்தார்.

வியாபார விஷயமாக ஒரு வாரம் இவர் சென்னைக்குச் சென்றிருந்து திரும்பினார். இச்சமயம் பொக்கிஷ அறையிலுள்ள இரும்புப்பெட்டி திறக்கப்பட்டு விலையுயர்ந்த ஆபரணங்கள் களவாடப்பட்டிருந்தன. இதைக் கண்டு போலீஸ் அதிகாரிக்கு இச்செய்தியைத் தெரிவித்தார். களவுபோன உருப்படிகளின் மதிப்பு சுமார் இரண்டு லக்ஷமென மதிக்கப்பட்டது. திருட்டைக் கண்டு பிடிப்பவர்களுக்குப் பதினா

யிரம் ரூபாய் பரிசளிக்கப்படுமென்று பத்திரிகைகளில் கோவர்த்தன்லால் விளம்பரப்படுத்தினார். அச்சமயம் மதுரையில் போலீஸ் சப் இன்ஸ்பெக்டராக வேலை பார்த்து வரும் சோமசுந்தரம் துப்பறிவதில் மெத்த நிபுணரெனப் பேர்படைத்தவர். இவருக்குள்ள சாமர்த்தியத்தை யோசிக்குங்கால் இவர் இச்சமயத்தில் போலீஸ் சூபரிண்டெண்டாக வேலை பார்க்க வேண்டியவர் என்பதிற் தடையில்லை.

சுமார் பத்து வருஷங்களுக்கு முன் திருச்சி லக்ஷ்மீ சுதேசி பாங்கியில் நடைபெற்ற களவைக்கண்டு பிடிப்பதாகத் தலைமை யதிகாரியிடம் சபதம் கூறித் தோற்று விட்டதினால் இன்றைக்கும் இவர் சப் இன்ஸ்பெக்டர் வேலையிலேயே இருக்கவேண்டியதாயிற்று. கோவர்த்தன்லால் வீட்டில் நடந்திருக்கும் களவைக்கண்டு பிடிப்பதால் பெரிய விடத்துப் பழக்கமும் மேலதிகாரிகளிடம் நன்மதிப்பும் கிடைப்பதுடன் பத்தாயிரம் ரூபாய் நன்கொடையையும் பெறலாமல்லவா? பொதுவாக சோமசுந்தரத்திற்கு அன்றிலிருந்து சுக்கிரதிசை யாரம்பமாயிற்றென்றே சொல்லலாம். களவு போன இரண்டு வாரத்திற்குள் பொருள்களைக்கண்டு பிடித்துத் திருடர்களையும் விசாரணைக்குட்படுத்திவிட்டார். களவு போனவை யகப்பட்டுத் திருடர்களுக்கும் தண்டனை விதிக்கப்பட்டதும் சோமசுந்தரத்தின் அபார சாமர்த்தியத்தைப் பற்றிப் பத்திரிகைகள் வெகுவாய்க் கொண்டாடத் தலைப்பட்டன. பத்திரிகைகளில் விளம்பர மிட்டபடி பதினாயிரம் ரூபாய் பரிசை சோமசுந்தரத்திற் களித்தல் பொருந்துமானபடியால் இப்பரிசளிப்புக் கொண்டாட்டத்திற்கென ஒரு நாளைக்குறிப்பிட்டு கோவர்த்தன்லால் மதுரையிலுள்ள அதிகாரிகளுக்கும் பிரபலஸ்தர்களுக்கும் அழைப்புக் கடித மனுப்பிவிட்டார். இந்த வைபவத்தைக்கண்டு களிக்கவென்றும், டீ பார்ட்டியில் கிடைக்கக்கூடிய தின்பண்டங்களையுத்தேசித்தும் அழைப்புக் கடிதமின்றிப் பலர் அன்று சுசீலாகிருகத்திற்கு விஜயம் செய்திருந்தனர். இதற்கென அமைக்கப்பட்டிருந்த அழகிய பூப்பந்தலின் வாயிற் படியில் நின்றுகொண்டு மிஸ்டர் கோவர்த்தன்லாலும் மிஸஸ் கோவர்த்தன் லாலும் வரும் விருந்தினர்களைக் கைகுலுக்கி வரவேற்று உபசரித்து நின்றார்கள். பாண்டு வாத்தியம் ஒருபுறமும், வீணை பிடில் கச்சேரிகள் மறுபுறமும் ஒலித்துக் கொண்டிருந்தன. விருந்தினர் விருந்துண்டு முடிந்ததும் அவரவர் தத்தமது அந்தஸ்திற் கேற்ற ஆசனங்களில் அமர்ந்தனர். ஜில்லா ஜட்ஜிக்குவலப்புறத்திலும் போலீஸ் சூபரின்டென்டெண்டுக்கு இடது புறத்திலுமாக அமைக்கப்பட்டிருந்த சோபாவில் கோவர்த்தன்லால் தம்மனைவியுடன் வீற்றிருந்தார். அன்று நடக்கவிருக்கும் பரிசளிப்பைப்பற்றி சப்ஜட்ஜ் சிலவார்த்தைகளை முகவுரையாகப் பேசினார். கோவர்த்தன்லாலின் பெருந்தன்மையைப் பற்றியும் தயாள சிந்தையைப் பற்றியும் ஒப்பற்ற செல்வப் பெருக்கைப்பற்றியும் (இதற்கென்றே முன்னதாகத் தயாரிக்கப் பட்டிருந்தவர்கள்) புகழ்ந்து சிலர் பேசி முடித்ததும் புன்னகையுடன் கோவர்த்தன்லால் தமது ஆசனத்தை விட்டெழுந்து நின்றார். தம் வீட்டில் களவு போனதால் தாம் அதிக நஷ்டமடையப் போவதில்லையானாலும் களவு செய்தவர் இன்னார் என்று கண்டுபிடிக்க வேண்டுமென்ற கருத்தினாலேயே இக்களவைக் கண்டு பிடிப்பவர்களுக்குப் பதினாயிரம் ரூபாய் பரிசு அளிப்பதென்று தாம் முற்பட்டதாகக் கூறி சப் இன்ஸ்பெக்டரின் சாமார்த்தியத்தைக்கொண்டாடிவிட்டு மூர்த்தி வாக்களித்தது பதினாயிரம் ரூபாயாக இருப்பினும் இப்பொழு

தேற்பட்டுள்ள மனச் சந்துஷ்டியை உத்தேசித்து இருபதினாயிரமாகப் பரிசளிக்கப்போவதாகத் தெரிவித்துத் தம்சட்டைப்பையிலிருந்த செக் புத்தகத்தை எடுத்து 'இருபதினாயிரம் ரூபாய்' என்றெழுதி விரைவாகக் கையெழுத்திட்டு சப் இன்ஸ்பெக்டர் கையில் அளித்த வண்ணம் இதைச் சரிவரக் குறித்துக்கொள்ளுகிருர்களா என்று கவனிக்கும் நிமித்தம் பத்திரிகா நிருபருட்காந்திருக்கு மிடத்தை கோவர்த்தன்லால் உற்று நோக்கினர். செக்கைக் கையிற் பெற்றுக்கொண்ட இன்ஸ்பெக்டர் பெரும் வியப்புற்று கோவர்த்தன் லாலின் முகத்தைப்பார்த்து நின்றார். இவ்விருவர்களின் நிலைமையானது சித்திரத்திலுள்ள பதுமைகளின் செயலை யொத்திருந்தது. இதற்கிடையே ஓரே மூச்சில் இருபதினாயிரம்ரூபாய் கிடைத்து விட்டதால் சோமசுந்தரம் சந்தோஷத்தால் திகைப்படைந்து விட்டதாகச் சிலர் தமக்குள் பேசிக் கொண்டனர். அடுத்த நிமிஷத்தில் அவ்வளவு பெரிய சபையில் பெருத்த அதிகாரிகள் குழுமியிருக்கு மிடத்தில் சப் இன்ஸ்பெக்டர் சோமசுந்தரம் வழக்கப்படித் தம் சட்டைப்பையில் வைத்திருந்த கைவிலங்கை யெடுத்துத் தங்கு தடையின்றி பிரபுக்களின் உச்சஸ்தானத்தை யலங்கரித்து விளங்கும் ஸ்ரீமான்—அல்ல—மிஸ்டர் கோவர்த்தன் லாலின் இருகைகளிலும் மாட்டிப் பூட்டி விட்டார். இச்சம்பவம் கண்டு சபையிலுள்ளவர்கள் விஷய மின்னதென்றறியாது மிரள உருள விழித்தார்கள். அதிக சந்தோஷத்தால் சப் இன்ஸ்பெக்டரின் மூளை கலங்கி விட்டதாகச் சிலர் கூச்சலிட்டனர். சபையில் வீற்றிருந்த அதிகாரிகளுக்குஇச்செய்கைமெத்தகோபத்தை விளைவித்தது. போலீஸ் சூபரின்டென்டெண்டு எழுந்து சப் இன்ஸ்பெக்டர் அருகிற் சென்று 'உனக்கு புத்தி கலங்கி விட்டது போலும்' என்று அதட்டினார். 'இல்லை, இல்லை. ஒருகாலுமில்லை. எனக்கா புத்தி கலங்கிவிடும்? ஒரு நாளு மில்லை; இதோ இந்தக் கையெழுத்தைப் பாருங்கள், செவ்வையாய் கவனியுங்கள்' என்று சோமசுந்தரம் கையிலுள்ள செக்கை சூபரின்டென்டெண்டினிடம் அளித்தார். இதுவரை இன்னதென்றறியாது திகைத்து நின்ற கோவர்த்தன் லாலுக்குத் தான் செய்த பிழை இன்னதென்று இப்பொழுதுதான் புலப்பட்டது. பழக்கத்தின் பெருமையையும் மறதியின் சாமர்த்தியத்தையும் இன்றே அவர் அறிந்து கொண்டார். பாபம்! முன் செய்த தீச்செயல்களை மறந்தோ, அல்லது அவைகளைச் செய்ததற்காக வருந்தியோ தற்போது பெருத்த தனவானாகவும் கொடையாளியாகவும் கண்ணியமாய் வாழ்ந்துகொண்டிருக்கும் கோவர்த்தன் லாலை இப்படிக் கைதவறிக் கையெழுத்திடச் செய்தது அவரின் படாடோப எண்ணமேயன்றி வேறில்லை. எல்லாரும் வருவதற்கு முந்தியே சாவகாசமாய்த் தனியாகவிருக்கும் போதே அந்தப்பாழும் செக்கைத் தயாரித்திருந்தால்! "என்ன தனவான்! என்ன பெரிய மனசு!! ஒரு நிமிஷத்தில், பேசினவண்ணமே ஒரு கையெழுத்தில் இருபதினாயிரத்தை—ஒன்றல்ல, இரண்டல்ல—இருபதினாயிரத்தை ஒருவனுக்குக் வெகு சுலபமாகக் கொடுத்தானே! என்ன தயாள குணம்!" என்று சபையோர் தன்னை மெச்சவேண்டுமென்ற எண்ணத்தில் தானே தன்னைத்தான் மறக்க நேரிட்டது! அற்ப சந்தோஷம் பிராண சங்கடமல்லவோ! சரீரத்தோற்றத்தை அங்கசாதனை (தேகாப்பியாசம்) யாலும் சாயலை அயலூராரின் நடவடிக்கைகளினாலும் மாற்றிக்கொண்டு லக்ஷம் ரூபாயைப் பத்து வருஷங்களிற் பல லக்ஷமாக அபிவிருத்தி செய்து கொண்ட புத்திமானாகிய கோவர்த்

தன்லாலைப் பழக்கமானது ஏமாற்றி விட்டதென்றால் பழக்கத்திற்குள்ள உயர்வைப் பற்றி என்னென்று சொல்வது! வாசகர்களே! கோவர்த்தன்லால் சப் இன்ஸ்பெக்டருக்களித்த செக்கில் 'கோபாலன்' என்று கையெழுத்திட்டு விட்டதற்கு இவர் லக்ஷ்மீ சுதேசி பாங்கியில் பதினைந்து வருஷகாலம் ஒரே மாதிரியாகக் கையெழுத்திட்ட பழக்கம் காரணமாயிருந்ததா? திருச்சி பாங்கியில் களவாடிச் சென்ற கோபாலனை கோவர்த்தனலாலின் உருவத்திலேயே வெளிக்காட்டி விட்டது மறதியோ அல்லது பழக்கமோ என்பதை ஆராய்ச்சி செய்வீர்களாக.

சுபம்.

ஜனவிருத்தியும் அதன் தீமையும்.

(ஸ்ரீமான் A. நாகேச்வரய்யர், B.A.)

உலகில் வாழும் ஜீவராசிகளில் மானிட ஜன்மம் மிகச் சிரேஷ்டம். அவற்றுள் கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தல் அதிலும் சிரேஷ்டம். பசிப்பிணி, வறுமை, நோய், புத்திரப் பேறில்லாத் துன்பம் இவை நீங்கி வாழ்தல் யாவற்றினும் அதிசிரேஷ்டம். இது நிற்க, மானிட ஜன்மத்திற்கும் இதர ஜீவராசிகளான ஊர்வன, புள்ளினம், மிருகாதிகளுக்கும் மகத்தான வேற்றுமை ஒன்றுண்டு. அது யாதெனில் பகுத்தறிவு. பசித்தால் புசிப்பதும், தாக விடாய் தீர்ப்பதும், காமத்தைத் தணிப்பதும் எல்லா ஜீவன்களுக்கும் இன்றியமையா உணர்ச்சியாகப் பொருந்தியுள்ளது. ஆனால் காரணம், சாதனம், முறைமை அறிந்து சமயோசிதமாயும், கால தேசவர்த்தமானத்தை அனுசரித்தும் நடந்து கொள்ளும் அரிய குணத்தை மானிட ஜன்மத்திற்கேசுச்வரன் அனுக்கிரகித்துள்ளான். ஆகிலும் இத்தகைய சிறந்த பகுத்தறிவு என்ற உணர்ச்சியைப் பல ஜனங்கள் பலவாறு உபயோகிக்கின்றனர். சில சமயங்களிற் பகுத்தறிவெனும் உயர் குணம் மானிடர்களுக்கு உளதோவென்று ஐயுறும் வண்ணம் சிலர் நடந்து கொள்வதையும் நாம் காணலாம். எழுதப்புகும் விஷயத்தில் அத்தகைய குறைவை எடுத்துக் காட்டுவதற்கன்றி, அக்குறைவால் நேரும் பல கெடுதிகளையும் விவரிக்கத் துணிந்தேன். அவற்றில் அன்னப்பட்சி க்ஷீர நீரதைப் பிரித்தல் போல் குற்றத்தைக் களைந்து குணத்தை அங்கீகரிப்பீர்களென்று நம்புகிறேன்.

ஜனவிருத்தி உலகிற்கு நன்மை பயக்குமா அல்லது தீமையை விளைவிக்குமா என்பது விஷயம். நமது முன்னோர்கள் இவ்விதக்கேள்வியை கேட்கவுமில்லை, ஆராயவுமில்லை. அதற்கு இடமும் கொடுக்கவில்லை. அவர்கள் நடத்தையால் இவ்வித ஆராய்ச்சி அனாவசியகாமாய் விட்டது. ஜனவிருத்தியால் அவர்கள் லாப நஷ்டத்தைக் கருதவில்லை. தற்காலத்தில் நாளுக்கு நாள் ஜனசங்கை அதிகரித்து, அதற்குரிய சாதனங்கள் குறைந்து, ஜனங்கள் பலவிதத்திலும் துன்புறுகின்றனர். சிருஷ்டித்த பின் அதனைப் பாதுகாத்தல் பொருத்தமல்லவா? ஆனால் மானிடர்கள் சிருஷ்டியில் திருஷ்டியாயிருப்பதுபோல் அவற்றைப் போற்ற வேண்டுதலாகிய கடமையில் அவ்வளவு ஊக்கங் கொண்டவர்களாகக் காணவில்லை. ஆகையால் மஹாத்மா காந்தி முதலிய பெரியோர்களும், சாஸ்திர விற்பன்னரும் ஜன அபிவிருத்தியால் நாட்டிற்கு நேரும் துயர்களையும் மானிட ஜன்மத்திற்கு விளையும் பல அல்லல்களையும் கவனித்து யாவற்றிற்கும் பிதம் வேண்டுமென்றும்

அபிதத்தாலும் அவிவேகத்தாலும் ஜன சிருஷ்டிக்கு விரோதிகளாவார்களென்றும் பலவாறு எடுத்துரைத்திருக்கின்றனர்.

ஐம்புலன் அடக்கிய தபசிகளும், மஹான்களும் துறவிகளும் அநுஷ்டித்தும் உபதேசித்தும் வந்த இவ்வித போதனைகள் பகுத்தறிவை மிகுதியாய்க் கொண்டாடாதவர்களுக்கு ஏற்கவில்லை. ஸ்திரீ புருஷ வாத்ஸல்யம் இத்தகைய கட்டிற்கு பந்தகப்படுவதில்லை யென்றும் நடவாக்காரியத்தில் பலவை சொல்லிய மஹான்களின் வார்த்தைகளில் இதுவும் ஒன்று என்றும் நிராகரிக்கின்றனர். இல்லற வாசிகளும் சாஸ்திர அநுபவமுள்ளவர்களுமான மற்றும் சிலர் உலக ரீதியை அனுசரித்தும் மானிட அவாக்களைக் கவனித்தும் பலகாரணங்களால் ஜன அபிவிருத்தி மிதமாக அடக்கி ஆள்வது சிரேஷ்டமென்று தீர்மானித்துள்ளார். அவற்றுள் சிலவற்றைப் பின் வருமாறு அறிவோம்.

ஸ்திரீ புருஷ விசுவாசமென்பது மானிடருக்கன்றி ஏனைய ஜீவராசிகளுக்கும் இன்றியமையாத இயல்பு. யாவர்க்கும், அதாவது மானிடருக்கு ஜந்துக்களுக்கும், தம் இனத்தை விருத்தி செய்யவேண்டு மென்பது பொதுவான இச்சையாய் உளது. ஆனால் கீழ் பிறப்பான ஆன்மாக்களைவிட மானிட ஜன்மத்தில் இவ்விச்சை அதிக மென்றும் பலகாலும் உளதென்றும் சொல்லலாம். பூர்வீகத்தில் அளவு கடந்த மனைவிகளும் எண்ணிறந்த மக்களும் ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டென்பதற்குப் புராண இதிஹாசங்களே அத்தாட்சி. நமது வழிபடு கடவுளான ஸ்ரீ கிருஷ்ணபகவான், முருகக்கடவுள் இவர்களுக்கு இரண்டு மனைவிகளுண்டு என்பதை நமது வீட்டிலிருக்கும் படங்களிற் காணலாம். திருதராஷ்டிரனுக்கு நூற்றுவர் புதல்வரென்றும் கீசனுடன் சகோதரர்கள் சதமென்றும் நாம் கதைகளில் வாசித்திருக்கிறோம். தற்காலத்தில் நாகரிக முதிர்ச்சியால் ஸ்திரீ புருஷர்கள் பெரும்பான்மையாய் ஏக பதிசதிகளாகவேஇருக்கிறார்களென்று கூறலாம். அவரவர் குலதர்ம சீலராய் குடும்ப ரீதியைக் கைப்பற்றி மக்கட் பேறைப் பெற்று இனிது வாழ்ந்தால் அதுவே இல்லறமெனலாம். பெற்ற பிள்ளைகளையும் மனைவியையும் காத்தல் மானிடரின் பொறுப்பு. மனைவியரின் கடமையோ மிகவருத்தத்தை விளைவிப்பது. குழந்தைகளைப் பெறுதலும்அவைகளைப்போற்றலும் மனைவியரின் ஆயுளைக்குறைக்கும் தன்மையது. ஆடவர்கள் மிதம் மிஞ்சி நடந்து கொள்ளாதிருத்தல் போற்றத் தக்கது. வேறு விதமாக நடப்பின் வியாதியால் பீடிக்கப்பட்டு நரம்பற்று, நாடியற்று மதிகெட்டு, சம்சாரப் பற்றற்று உழல்வர். பெண்டிர்கள் தம் இச்சையை அடக்கி யாளாவிடில் பல பிரசவங்களால் தீராநோயும், குழந்தைகளின் மிகுதியால் நீங்காத் துயரமும் சில வேளை தமது உயிருக்கே ஹானியும் விளைவிக்கின்றனர். இந்திய ஸ்திரீகளுக்குப் பிரசவம் புனர் ஜன்மம். மேனாட்டாரைப் போலன்றி இவர்களுக்கு சுகப் பிரசவ சாதனங்கள் மிகக்குறைவு. இத்தகைய பல கஷ்டமான காலத்தைக் கழித்து உயிர் தப்பினால் தேகவன்மை யிழந்து நடைபிணமாக மாறி ஆயுளைக் குறைக்கின்றனர். இதற்குக் காரணம் மிதமின்மையே. ஆகையால் ஆடவர்களை விட ஸ்திரீகள் வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்பது அவசியம்.

இது தவிர ஜனவிருத்தியால் உலகில் பிழைப்பிற்கும் அதிகக் கஷ்டம் உண்டாகிறது. தாம் பெற்ற மக்களுக்குத் தேவையானவற்றைச் சேகரித்துக் கொடுப்பதிலும் அவைகள் பசியாது வாழ வேண்டுமென்று தாங்கள் உழைத்தும் தீராக்கவலையில் ஆடவர்கள் ஆழ்கின்றனர். இளவயதில் கல்வி கேள்வி கேளிக்கைகளில் நாட்களை இனிது கழிக்காது அவர்கள் சம்சார சாகரத்தில் நீந்திக் கரை காணாது ஏங்க நேரிடுவது மிக்கப் பரிதாபகரமானது.

சதிபதிகள் மணந்த நாள் முதல் மக்கட்பேறு அடைதல் வேண்டுமென்ற அவா கொள்கின்றனர். அது மிகவும் போற்றத் தக்கது. ஆனால் மக்களை ஈன்ற பின் அவர்களுக்குச் சரிவர ஏற்பாடு செய்தல் அவசியமான கடமை என்பதைப் பலர் கருதுவதில்லை. இக்காரணத்தால்தான் மேனாட்டில் ஆடவர்கள் காலங் கடந்து மணம் புரிகின்றனர். ஏனெனில் தாங்கள் மணக்கும் ஸ்திரீகளுடன் தக்க ரீதியில் சம்சாரம் நடத்தவும் குழந்தைகளைப் பெறின் அவற்றை நல்லஸ்திதிக்குக் கொண்டு வரும் ஹேதுக்களைத் தேடி வைக்கவும் இது முதலான சாதனங்கள் பொருந்தின பின்னரே அநேகர் கடிமணம் புரிவார். நமது நாட்டில் பெண்கள் மிகுதியால் ஆடவர்கள் விலை கூறித் தங்களைத் தான் விற்று அப்பணத்தைக்கொண்டு பிழைக்கின்றனர் சிலர். மற்றும் சிலர் படிப்படியாய்ப்பெண்களைச்சேர்ந்தாரைப் பிடித்துப் பணத்தைக் கிரகித்துவயிறு வளர்க்கின்றனர். இவ்வித மிருந்தும் அவர்களைக் காமப் பேய் மாத்திரம் எப்பொழுதும் ஆட்டி வைக்கின்றது. அதனால் சீக்கிரத்தில் குழந்தைகளைப் பெற்று அவர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்கும் மணம் செய்விப்பதற்கும் அவர்கள் படுந்துயரம் சொல்லொணாது. இவ்வித வருத்தத்திற்கு மிதமில்லா இச்சையே காரணமாகும்.

ஆகையால் ஜனவிருத்தியை அடக்க வேண்டுமென்றால் ஸ்திரீ புருஷர்கள் தம்மனத்தை அடக்கியாள்வது முக்கியமாகும். இதனால் திரவியம் செலவில்லை, உயிருக்கு அபாயமுமில்லை, தீராநோயும் நீங்காக் கவலையும் நெருங்காது. ஆடவர் தம் மனைவிகள் நுட்ப தேகவன்மையுயர்ந்திருப்பதை அறிந்து அதன்படி நடக்க வேண்டும். இதனால் ஒவ்வொருவரும் சந்நியாசிகளாய் உலகப்பற்றை ஒழிக்க வேண்டுமென்று யான் சொல்லவில்லை. இளைஞர்கள் சதிபதிகளாய்த் தீர்க்ககாலம் திடசரீரம், வனப்பு, ஆரோக்கிய முள்ளவர்களாயும், நீடித்த ஆயுள் வாய்ந்த குழந்தைகளைப் பெற வேண்டுபவர்களாயும், சம்சார பாசத்திற் கட்டுப்படாது சுயேச்சையாய் வாழ விரும்புபவர்களாயும், பெண்டு பிள்ளைகளுக்கும் தமக்கும் சுகஜீவனத்திற்கு ஏற்பாடு செய்து கொள்ள இச்சையுள்ளவர்களாயும், உயர் கல்வியில் தேர்ச்சியடையக் கருத்துள்ளவர்களாயும் எவ்வெவர் கோருகின்றனரோ அவர்கள் ஆசை யெனும் பாசத்தில் அதிகமாய்க் கட்டு படாதிருத்தல் அவசியம். இதற்காகத்தான் மணத்திற் குரிய வயதைக்குறித்து சட்டதிட்டங்களும் நிர்வகிக்கப்படுகின்றன. மானிடர்கள் தம்மை யடக்கி ஆள்வார்களென்று ஏற்பட்டால் சட்டங்கள் எதற்கு? இதனால் நம் சிறுவர் சிறுமிகள் சரியாக நடந்து கொள்ளவில்லை. யென்ற ஏற்பாட்டுடன் சட்டங்கள் நிரூபிக்கப்படுகின்றன. இது நமது பெருமைக்கும், வாழ்க்கைக்கும், நாகரிகத்திற்கும் பழிப்பிற் கிடமாகிறது. இக்காரணத்தால்தான் இந்தியர்கள் ராணுவத்திலும், ராஜீய விஷயத்திலும் பலரும் உயர் பதவியடைய அசக்தர்களெனக் கருதப்படுகின்றனர். ஆகவே நாம் ஆசையெனும கடலை மிதமென்ற கழிகளால் சமசாரமாகிய ஓடத்தில் கடந்து இகபர சுகிர்தமாம் மோக்ஷமெனும் கரையை அணுக வேண்டும். இதன் உண்மையை இந்தியர்கள் தமது நடத்தையில் அநுசரித்துப் பரிசோதிக்க வேண்டுமென்று நான் வாசகர்களை மிகவும் கேட்டுக் கொள்கிறேன்.

[திடகாத்திரமும் பூரணாயுளுமுள்ள ஜனவிருத்தியால்நாடு செழிக்குமன்றித் தற்காலத்திலுள்ளதுபோல நோயும் நொடியும அகால மரணமும் சிசுக்கள் மரணமும ஜனவிருத்திக்கும் தேசத்திற்கும் ஹானியை விளைவிப்பதாயிருக்கிறதென்பது நமது அபிப்பிராயம் ப.ர்.]

எனது கப்பற் பிரயாணம்.

(ஸ்ரீமதி லக்ஷ்மி.)

இக் கோடை லீவைப் பர்மா சென்று பார்ப்பதில் கழித்து விடுகிறது என்று என் கணவர் பன்முறை சொல்லக்கேட்டு முதலில் கப்பற் பிரயாணத்தை முழுவதும் விரோதித்த நான் பிறகு என்னை யறியாமலே சிறிது சிறிதாக அதற்கிணங்கத் தொடங்கி விட்டேன். குளவி கொட்டிக் கொட்டிப் புழுவைத் தன் இனமாக்கி விடுவது போல அடிக்கடி கூறப்பட்ட இச்சொற்களும் என் தீர்மானத்தை மாற்றி விட்டன போலும்! இதுவரையும் செய்திராத கப்பற் பிரயாணத்தைப்பற்றி நினைக்கும் பொழுதே பல உணர்ச்சிகள் மாறிமாறி மனதிலெழுந்து போராடின. வீட்டை விட்டு வெளியில் ஐந்து நிமிஷம் அதிகம் தாமதிக்க நேர்ந்தாலும் தவிக்கக்கூடிய மனமமைந்தவர்களுக்குக் கடலில் கப்பலேறிச் செல்வதென்றால் எவ்வித உணர்வு தான் உண்டாகாது? நிலமார்க்கமாக இவ்வுலக முழுமையும் வேண்டுமாயினும் சுற்றி வந்து விடலாம்; ஏனெனில் தொடர்ந்த காட்சிகளேயும் மனித சஞ்சாரத்தையும் மற்றும் உறுதியுள்ளதாக நாம் கருதும் இப்பூமியையும் கண்டுகொண்டே செல்லுகின்றோமல்லவா? நாம் விட்டு வந்தவிடத்திற்கும் நாமினி அடையப் போகுமிடத்திற்கும் நடுவிலுள்ள பூமியானது இவ்விரு பிரதேசங்களும் சேர்த்துக் கோர்க்கப்பட்ட சங்கிலியே போன்று நமக்குத் தோன்றுகிறது. ஆனால் இவ்வகன்ற கடல் மார்க்கமோ எவ்வித ஆதாரமுமின்றி புயற்காற்று முதலாகிய எண்ணிறந்த ஆபத்துக்களும் குடி கொண்டதாகவன்றோ காண்கின்றது!

இவ்விதமெல்லாம் எண்ணி மனம் தவித்த போதிலும் பயணமென்னவோ தீர்மானமாகி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருந்தன. எங்கள் நண்பர்களும் மற்றுமுள்ள பந்துக்களும் இச்செய்தி கேட்டு "நன்றாயிருக்கிறது! அரசன் போல் வீட்டோடு ஊரிலிருப்பதை விட்டு எங்கோ கப்பலேறிக் கடலைத்தாண்டி பர்மாவுக்குப் போவார்களோ! வயிற்றுச் சோற்றுக்கு வகையற்று ஊரூராய்ச் சென்று சிரிப்பாய்ச் சிரிப்பவர்களுக்கன்றோ பர்மா எங்கே, பினாங் எங்கே என்று போக வேண்டும்" என்று பலவிதமாய்த் தடுத்தார்கள். என்ன சொன்ன போதிலும் என் கணவர் தீர்மானத்தை யார் மாற்றக்கூடும்? யாவும் சித்தமாகி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கெல்லாம் அவசரம் அவசரமாகச் சிறிது உணவுண்டு புறப்பட்டு விட்டோம். எங்களை வழியனுப்பத் துறைமுகம் வந்திருந்த நண்பர்களுடனும் பந்துக்களுடனும் சிறிது வருத்தத்துடனேயே விடை பெற்றுக் கப்பலேறியதும் அதுவும் எங்கள் துக்கத்தை உடன் அனுபவிப்பது போன்று மெதுவாய்த் துறைமுகத்தினின்றும் நகருவது தெரியாமல் செல்லத் தொடங்கிற்று. மேற் தட்டிலிருந்து நாங்கள் நோக்கி யிருக்கும் பொழுதே சிறிது சிறிதாகப் பூமியைவிட்டு விலகிச் செல்லும் அக்கப்பலைக் காண ஒரு ஞானியின் இருதயமும் இவ்வண்ணம்தான் சம்சார பந்தத்தினின்றும் விலகிச் செல்லுமென ஏன் எண்ணலாகாது?

நம் ஆசைக்குரிய பலரையும் உடைய அப்பிரதேசம் ஒரு கோடாகத் தோன்றிப் பின்பு அதுவும் மறையவே எங்கும் ஒரே சூனியத்தாற் மூடுண்டது. நாற்புறமும் கடல் நீர் தவிற வேறொன்றும் காணப்படாததால், நம் ஜீவிய சரிதத்தின் ஓர் அத்தியாயம் முடிவுற மற்றோர் அத்தியாயம் திறக்குமுன் எண்ண இடப் போதுமான சாவகாச மிருப்பதுபோல் தோன்றலாயிற்று.

மிகுந்த உர்ச்சாகதுடன் கப்பலேறிய என் கணவர் அது சிறிது தூரம் செல்வதற்குள் அவ்வாட்டத்தால் தலை சுற்றல் முதலாகிய அசௌக்கிய முற்று "இனி பர்மா போய்ச் சேருமளவும் இவ்வேதனையை எவ்விதம் சகிப்பது?" என்று பரிதபித்துக் கொண்டிருந்தார். "நான் வேண்டாமென்று சொன்னேனே, கேட்டீர்களா?" என்று மட்டும் நானப்பொழுது சொல்லியிருந்தால் அவர் அனுபவிக்கும் வேதனையோடு கோபமும் அடைவாரென்பதினால் தனக்காகப் படவேண்டிய அவ்வெண்ணத்தை நாம் சொல்ல வேண்டாமெனச் சும்மாயிருந்தேன். விதியை வெல்ல யாராலாகுமென்பது போல, கப்பலேறி விட்டால் அது ஒரு கரை போய்ச் சேருமளவும் அதிலிருப்பதை விட்டு நடுவிலிறங்குவது என்பது எப்படி முடியும்? அவ்விதம் செய்யின் எண்ணிறந்த கொடிய ஜந்துக்களுடன் கூடிய இவ்வாழமுற்ற பரந்த கடலன்றோ விழுங்கக் காத்திருக்கின்றது! அவைகளுக்கு இரையாகா வண்ணம் நம்மைக் காப்பாற்றுவது இக்கப்பலல்லவா? அதற்கன்றோ நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று எண்ணவும், அதைச் சிருஷ்டித்த மனிதனின் யுக்தி புத்திக்காக வியப்புண்டாயிற்றென்றால் அதில் அதிசயமென்ன? உலகத்தின் ஒரு முடிவிலிருந்து மற்றொரு முடிவை அடையச் செய்விக்கும் சிறு உலகமாகவன்றோ அது இருக்கின்றது! ஒரு தேசத்திலிலாப் பொருளை மற்றொரு தேசத்திலிருந்தடையவும் மற்றும் நாகரிகமோ அறிவோ இவைகள் பெரிது பரவவுமல்லவா இக் கப்பல் காரணமாயிருக்கின்றது!

அதுவுமன்றி நம்முடன் செல்லும் பிரயாணிகளிடம் நம்மை யறியாமலே ஒரு பிரிய முண்டாகி வேறெந்தப் பிரயாணத்திலிருந்தும் உண்டாகாத வோர் நட்பையும் சில சமயம் நம்மை அடையச் செய்கின்றது. கப்பல் சம்பந்தப்பட்ட வளவில் அவர்களுடையதும் நம்முடையதுமான தலை விதியானது ஒன்றாய் இருப்பதினாலேயே நெருங்கிய உறவு போன்றதோர் உணர்வு நமக்கு ஏற்படுகிறது என்பது திண்ணம். எவ்விதம் கணவன் மனைவி இருவருடைய சுகதுக்கமானது ஒன்றையொன்று பாதிப்பதாக ஏற்பட்டிருப்பதனாலேயே அவர்களினன்பு மேன்மேலும் அதிகரிக்கின்றதோ, அவ்விதமே இப்பிரயாணத்திலும், அதில் நேரக்கூடிய ஆபத்துக்கள் முதலாகிய யாவையும் அதிற் செல்லுவோர் சேர்ந்தனுபவிக்க வேண்டியவர்களானதுபற்றி, அவர்களுள்ளும் அன்பு அதிகரிக்கின்றது போலும்! அதிலிருக்கும் ஆட்களும் நம் அநேகம் கேள்விகளுக்கும் பரிவாக விடையளிப்பார்களே யன்றி, உதாசீனமாகவேனும், கோபமாகவேனும் விடை பகருவதில்லை. இவை யாவற்றையும் யோசிக்கும்பொழுது, நாம் பூமியிற் பிரயாணம் செய்யும்போதுண்டாகாத ஒரு மனோ நிம்மதியை இங்கு அனுபவிக்கின்றோம் என்று நிச்சயமாய்க் கூறலாம்.

மேற் தட்டிலுட்கார்ந்து வெகு தூரத்தில் ஆகாசமும் சமுத்திரமும் ஒன்று சேருவதாகத் தோன்றுமிடத்து அலைகள் படிந்து படிந்து போய் விழுவதையும், பௌர்ணமி சந்திரனை விட இருமடங்கு பெரிதான சூரியன், நம் கண்களால் குளிர்ந்து நோக்கக்கூடிய வண்ணம், அச்சமுத்திரத்தினின்றுமே கிளம்புவது போற் றோன்றுவதையும் நோக்குங்கால் மிக்க ஆனந்தமே உண்டாகின்றது. ஏன்? பாதாளலோகமென்பதும் இதன் கீழிருப்பதாகவே நாம் சொல்லுகிறோமல்லவா? அங்கிருக்கக்கூடிய

மாட மாளிகைகளைப் பற்றியும் அலைகளில் வசிக்கும் ஜனங்களைப் பற்றியும் கூட எண்ணமிடாமல் நம்மால் அச்சமய மிருக்க முடியாது.

இவ்விதம் மனக்கோட்டையில் எண்ணமிட்டுக் கொண்டிருக்கையிலேயே, கப்பலாட்டத்தைத் தாங்காது ஒரு முறை வாந்தி செய்த என் கணவர் இதனால் தம் உயிருக்கே ஆபத்து நேர்ந்துவிட்டதாகக்கருத, அவரைச் சமாதானம்செய்துஎங்கள் பக்கத்தறையிலிருந்த டாக்டரை யழைத்து மருந்து கொடுக்கச் செய்தும், பின்பு அறையிற் படுத்த வண்ணமே பல விநோதப் பேச்சிலும் அன்று பொழுதைப் போக்கினோம்.

தாமாகவே பலவகையாகச் சிந்திக்கும் மனமுடையோருக்கல்லாது மற்றவர்களுக்கு இக் கப்பல் யாத்திரையில் பொழுதுபோக வகையற்று ஒவ்வொரு தினமும் ஒருயுகமெனக் கழியுமென்பது நிச்சயம். உறவினர் நண்பர்கள் இவர்கள் மத்தியில் உற்சாகத்தை யளிக்கக்கூடிய வேறு காரியங்களுமில்லாமல், ரயில் பிரயாணத்திற் காணும் பலவிதக் காக்ஷிகளும் வெவ்வேறு மனிதருமின்றி, சரீரத்திற்காயினும், மனதிற்காயினும் எவ்வித வேலையுமின்றி யிருப்பதால், பொழுதுபோவது கடினம்தான். கையிற் கொண்டுவந்திருக்கும் தின்பண்டங்களையும் கட்டு சாத வகைகளையும் அத் தலைசுற்றலிலும் வயிற்றுப் பிரட்டலிலும் கண்டாலே கோபம் வருகிறது. கையிலிருக்கும் பழதினுசுகளோ சொல்லவேண்டியதே யில்லை. வெருங்காயாகவோ அல்லது மிகவும் கனிந்து கசங்கியதாகவோ யிருந்தால் எப்படி உட்செல்லும்? ஏதாவது சூடாக ஒன்று தானாகப் பண்ணி சாப்பிட்டாற் போதுமெனத் தோன்றுகிறது. கப்பலில் விற்கும் ரொட்டி பிஸ்கோத்து வகைகளை கண்டாலேயே அருவருப்புண்டாகிறது. ஆனால், நெருப்பு மூட்டக்கூடாது என்று கப்பற்சட்டம். இதற்குமாறாக அவரவர்கள் அறையில் கதவைத் தாளிட்டு ரகசியமாக "குக்கரி"ல் சமைக்கும்பொழுது, கதவு தட்டப்படுமோசை கேட்டுக்கலவரத்துடன் சடுதியில் நாம் பறத்திவைத்திருக்கும் சமயல் சாமான்களை அப்புறப்படுத்திக் கதவைத்திறக்கவும், அங்கு நம் பக்கத்தறையிலிருப்பவரையோ, அல்லது மேற் தட்டிலுட்கார்ந்திருந்த நம்மிலொருவரையோ காண, பயம் நீங்கி நாமடையும் விநோதத்தையும் சிரிப்பையும் வறெங்கு அநுபவிக்கக்கூடும்? கப்பலாட்டத்தாலுண்டான மயக்கத்தில், சமையலில் நாமிழைக்கும் தவறுதல்களை இன்று நினைத்தாலும் சிரிப்பே உண்டாகிறது.

இவ்விதம் பகற்பொழுது பாதியும் செல்ல, பாக்கிப்பொழுதை நான் முன் சொன்னவாறு விநோதமாக வார்த்தை யாடுவதிலும், பற்பல விதமாய்ச் சிந்திப்பதிலும்தான் கழிக்கவேண்டும். ஆனால் நாங்கள் பிரயாணம் செய்த இரண்டாம் நாள் மாலையோ திடீரென புயற்காற்றின் குறிகள் தோன்றி யாவரையும் பயமுறுத்திற்று. இருண்ட மேகங்கள் நாற்புறமும் சூழப் பளீரெனத் தோன்றி மறையும் மின்னல்களுடனும், கற்பாறைகள் ஒன்றையொன்று மோதுவது போற் சப்திக்கும் இடிகளுடனும் பெருத்த மழையானது பொழியத் தொடங்கவே இன்னவிதமென்று சொல்லத் தெரியாத ஒரு பீதி மனதை வாட்டத் தொடங்கி விட்டது. யாவரும் ஒருங்கு கூடிப் பலவாறு பேசலாயினர். புஸ்தகங்களிலும் தினசரிப் பத்திரிகைகளிலும் நாம் வாசித்திருக்கும் அநேகம் கடல் விபத்துக்கள் நினைவிற்றோன்றி எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணச் செய்தன. எங்கள் பக்கத்தறையிலிருந்த டாக்டர் ஒருவர் ரங்கூனிலிருந்து செல்லுகையில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைக் கூறினார்,

அதாவது, அவரும் அவர் மனைவியுமாகப் பிரயாணம் செய்யும்பொழுது கல்கத்தாவுக்குச் சமீபத்தில் ஒரு மணற்பாங்கில் கப்பலுராய்ந்து கொள்ள அதனால் அதனடியிற் துவாரமுண்டாகித் தண்ணீர் நிரம்பத் தொடங்கி விட்டதாம். உடனே யாவரும் தங்களாலியன்ற மட்டும் அந்நீரை வெளியிலிறைத்தும் அதிவேகத்தில் நீர் நிரம்புவதைக்கண்டு யாதும் செய்ய வகையறியாது தளர்வுற்று நின்றார்களாம். அச்சமயத்தில் அவர்களின் மனோ நிலைமையை அநுபவித்தாலன்றி வாயாற்கூற இயலுமோ? மனைவி கணவனையும், தாய் மகளையும், அவரவர்கள் உறவினர் அவரவர்களையும் தழுவியலறியதானது அச்சமுத்திர வோசையினும் மேம்பட்டுக் கல்லையும் கரைந்துருக்கக் கூடியதாயிருந்ததாம். அவர்களுடைய நற்காலத்தால் இவ்வாபத்து சடுதியிற் கரையிலிருப்பவர்களுக்கெட்டி அவர்களும் விரைந்து வந்து முக்கால் வாசியும் தண்ணீருள் முழுகியிருந்த கப்பலினின்றும் இவர்களைக் காப்பாற்றினார்களாம். இவ்வண்ணம் அவர் கூறி கொண்டிருக்கும் பொழுதே காற்றினாற் கொந்தளிக்கும் அக்கடலினுள் கப்பலை அமிழ்த்தி விடவே எண்ணியது போல் ஒரு பெருத்த இடி இடிக்க நான் பயத்தால் என் கணவரைப் பிடித்துக் கொண்டேன். அவர் என்னை அணைத்து "உன் வார்த்தையைக் கேளாததால் நாம் அநியாயமாக இச் சமுத்திர ராஜனுக்கு இரையாகப் போகிறோம்" என்று வருத்தப்பட்டார். உயிருக்கே ஆபத்து நேரக்கூடியதாயிருக்கும் அச்சமயத்திலல்லாது வேறு சமயமட்டும் அவரென்னை மெச்சியிருந்தால் என் ஆனந்தத்திற்கு அளவேயிருக்காது. அக்காற்றிலும் மழையிலும் கப்பல் முழுகாமற் செல்லுவது பிரயாசமெனவே தோன்றிற்று. ஒவ்வோரலையும் அதைத் தன் கீழ் அமிழ்த்திவிடவே எண்ணியது போல் மோத அதைச் சமாளித்துச் செல்வது மிக்க கடினமே. அறையிற் போய்ப்படுத்தும் காற்றினோசையும், அலைகளின் ஆரவாரமும், கப்பல் அதிலகப்பட்டு உழல்வதும் தெரியாமலிருக்கவில்லை. அன்று காலனே இரவு முடிவதற்குள் அதிலிருக்கும் உயிர்களைத் தனக்கிரையாக்கிக் கொள்ளத் தீர்மானித்தான் போலும்!

இப்பயங்கர இரவும் ஒரு விதமாய்க் கழிய, மறு நாளுதயத்தில் நேற்று ஆரவாரித்த கடல் இது தானோவென்று சந்தேகிக்கும் வண்ணம் நிம்மதியுற்று, மேகங்களற்ற ஆகாயமும் சூரிய கிரணத்தால் நிர்மலமாய்த் துலங்கிற்று. நிலையற்றதாகக் கூறப்படும் செல்வத்துடனும் அவ்விதமே மாறும் குணமுடைய ஸ்திரீகளின் மனதுடனும் இச்சமுத்திரத்தையும்சமமாகவே கூறலாம். சாந்தமே உருவெடுத்த ஞானியைப் போன்று நிம்மதியுற்று மனோரம்மியமாயிருக்கும் கடலைக் காண ஒருவித பயமும் ஆநந்தமும் சேர்ந்துண்டாயிற்று. அன்று முழுவதும் அவரவர்கள் முதல் நாளிரவு தூங்காமல் தவித்ததையும் எண்ணிய எண்ணங்களையும் பற்றிப் பேச்சாகவே யிருந்தது. ஏன்? எவ்வளவு சமயங்களிற் துறை முகத்தினின்றும் புறப்பட்டகப்பல் யாதாயிற்றென்றும்யாவரும் அறிய முடியாமற்போய் விட்டதைப்பற்றியும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்! அதிற் சென்றவர்கள் கதிதான் நினைக்க வொண்ணாததாயிருக்க, அவர்கள் வருகைக்காகக் காத்திருப்பவர்களின் நிலைமையோ! அதை நாம் சொல்லவும் வேண்டுமோ? எதிர் பார்த்து நிற்கும் அவர்களுடைய ஆவலானது கவலையாக மாறவும், அந்தோ! அக்கவலையே பின்பு ஆராத் துயராகவும் முடிகின்றதன்றோ!

"கரைகண்டுவிட்டது" என்று மின்சாரசக்தி போல் பாயுமிச்சொல் நான்காம் நாட்காலை எங்கள் செவிகளில் விழுந்தது. பாபரப்புடன் மேற் தட்டிற்கோடவும் அங்கு எங்களுக்கு முன் அநேகர் ஓடி ஆவலாய் வெகு தூரத்தில் தென்படும் கரையை நோக்கி யிருக்கக் கண்டோம். இம்மூன்று நாட்களாய் நாங்கள் பார்க்காத

சில நாட்டுக் கோட்டை நகரத்தாரும் அதிலிருந்தனர். ஆபத்திலிருப்பதாக எண்ணிய சமயத்திலும் தங்கள் படுக்கையினின்றும் எழுந்துவராத இவர்கள் கரை தென்படவும் அதைக்காண வந்து விட்டார்களென்றால் பூமியைத் தாய் எனக் கருதுவது மிக்க பொருத்தமேயல்லவா? தான் காணாது தவித்துக்கொண்டிருந்த தாயை ஒரு சிறு குழந்தை திடீரெனக் கண்டு விட்டால் எவ்வித சந்தோஷத்தை யடைகிறது!

நகரத்தார்கள் அடிக்கடி பிரயாணம் செய்பவர்களாதலால் அப்புயலைப்பற்றி வெகு சாதாரணமாகவும் அன்று விடிவதற்குள் கரை தென்பட்டு விடுமென்று தாங்கள் சரியாய்க் கூறியதைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தனர். அப்பொழுது கப்பல் ஐராவதி நதியிற் சென்று கொண்டிருந்தது. இருபுறமும் பச்சைப்பசேலென்றிருக்கும் கரையும், வெகு தூரத்தில் "பகோடா" என்னும் பர்மீஸ் கோவிலின் சுவர்ணத்தாலாய ஸ்தூபி தெரிவதையும் பார்க்க அவ்வூரையும் அதில் வசிக்கும் ஜனங்களையு மெண்ணி ஒரு புது உணர்ச்சி யுண்டாயிற்று. சிறு குழந்தைகளும் கீழேயிருக்க மனமில்லாமல் மேற் தட்டிற்கு வந்து குதூகலத்துடன் நோக்கி யிருக்க, நாங்கள் செல்லும் அப்பெரும் கப்பலை எதிர்கொண்டு அழைக்க வந்தவை போல் அநேகம் சிறு கப்பல்கள் ஆகாயத்தில் மேகங்கள் போன்று தென்படலாயின. அவைகளிலொன்று நேராக எங்களை நோக்கியே வர, அதிலிருந்து பர்மா தேசத்து ஸ்திரீ புருஷர்கள் இருவர் எங்கள் கப்பலிலிருந்து தொங்க விடப்பட்ட நூலேணி வழியாக ஏறி நாங்களிருந்த விடத்திற்கு வந்தனர். அந்த ஸ்திரீயானவள் மாதுளம் பூவின் நிறத்தை யொத்த சிவந்த பட்டாடை யுடுத்துத் தன் கருத்த நீண்ட கூந்தலைக் குல்லாய்போற் தலையிற் சுற்றிக் கட்டியிருந்ததானது அவள் பொன்னை நிகர்த்த மேனியை இன்னும் அதிகமாயெடுத்துக் காட்ட, மிகுந்த அழகுள்ளவளா யிருந்தாள். அவள் காதிலணிந்திருந்த கமலகுண்டலங்கள் கோடி சூரியன் போற் பிரகாசித்தன. பர்மாவை பிரும்மலோக மென்றும் அதிலிருக்கும் ஸ்திரீகளை தேவஸ்திரீகளென்றாலும் தகுமெனவே நான் எண்ணினேன். அவள் யார் என்று வினவியதில் அவள் ஒரு பெரிய வியாபாரியென்றும் எங்களுடன் பிரயாணம் செய்த அவள் வியாபாரத் தலைவனை அழைத்துச் செல்ல வந்தனளென்றும் கூறினார்கள். அப்படியே அவள் விசேஷ அனுமதி பெற்று அவனை நாங்கள் யாருமிறங்குமுன் அழைத்துச் சென்று விட்டாள். அவள் சென்ற பின் 'என்ன அழகாயிருக்கிறாள் பார்த்தீர்களா?' என்று நான் என் கணவரிடம் வியந்து கூறிய பொழுது அவர் "அச் சிவந்த பட்டாடையை நீ உடுத்தியிருந்தால் இன்னு மெவ்வளவோ சோபித்திருப்பாய்" என்றார். 'என்ன பரிகாசம்!' என்று நான் அலக்ஷியமாய்க் கூறினேனாயினும் நாணடக்கியும் வெளித் தோன்றிய சந்தோஷமானது அவ்வலக்ஷியத்தைப் பொய்யாக்கியது.

இதற்குள் கப்பலும் துறைமுகம் அணுக, யாவரும் விரைவாக இறங்கத் தொடங்கினர். நாங்களும் எங்கள் நண்பரொருவர் எங்களுக்காகக் காத்திருப்பதை யறிந்து சந்தோஷத்துடனிறங்கி ஆவலாய் எதிர்கொண்டழைக்கும் அவரை யணுகினோம். அப்பொழுதென் கணவர் 'புதிதான இப்பெரும் ஆபத்தைத் தாண்டி நம் நண்பரையும் கண்டு விட்டோம். இனி அதை மறந்து விடுவதே நமக்கு உற்சாகத்தை யளிக்கக் கூடிய மருந்து" என்று கூறினார். நம் ஊருக்குத் திரும்பும்பொழுது மற்றொரு முறையும் அனுபவிக்க வேண்டியதாயும் பல உணர்ச்சிகளையும் மனதி லெழுப்பக்கூடியதாயு மிருக்கும் அப்பிரயாணத்தை எவ்விதம் அவ்வளவு சுலபமாக மறக்கக் கூடுமென்பதை அவர் மறந்தார் போலும்!

Some Select Opinions on "Chinthamani."

Dewan Bahadur T. RANGACHARIAR, C. I. E., Dy. President, Indian Legislative Assembly, writes under date 29th Dec. '25 as follows:—

I have been a regular subscriber to the monthly magazine "*Chinthamani*" edited by that talented and well-known lady Sister Balammal and occasionally read it also. My daughters take a copy each and read it regularly. The magazine is written in homely and beautiful Tamil. The choice of the subjects is most appropriate and well conceived for educating our ladies in worldly knowledge and social evils. The magazine is run on advanced conservative lines,—neither too radical nor violently reactionary. It is thoroughly readable from page to page. It deserves large support at the hands of the Tamil reading public. It will be a very useful magazine for students of both sexes.

K. A. NARAYAN, Esq., c/o Messrs. Paterson Simons & Co., Ltd., Kuala Lumpur, writes:—

I may say that those who have been regular readers of "Chintamani" are very appreciative, especially womenfolk are jubilant over some of your picturesque and telling articles.

Wishing you continued prosperity and rapid increase in subscribers.

T. S. SANKARASUBBU, Esq., M.A., B.L., Nagercoil, writes under date 30—12—1925 as follows:—

I had an occasion to go through one of the volumes of your most invaluable and interesting magazine. I am sorry I did not make my acquaintance with it sufficiently early. "Your Chintamani is a beacon-light to Indian womanhood."

(ஒரு சகோதரர் எழுதுவது.)

அம்மா!

தமிழகந்தோறும் அவசியம் அலர்ந்திருக்க வேண்டிய தங்கள் "சிந்தாமணி" நாளுக்கு நாள் நல்வளர்ச்சி யுறுவது கண்டு மகிழ்கிறேன். அதில் தாங்கள் எழுதிவருகிற கதைகளிலே பெண்கள் விசேஷ பிரியங்கொள்ளுகிறார்கள்.

(ஸ்ரீமதி ஆர். சி. நாயுடு, தென்னாப்பிரிகா, எழுதுவது.)

ஸ்ரீமதி சகோதரிக்கு வந்தனம்.

'சிந்தாமணி' யென்னும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகையை யான் வாசித்துக் களிப்புறுகிறேன். என் போன்ற வெளிநாட்டிற் பிறந்த பெண்மக்களுக்கு நமது தாய் பாஷையை வாசிக்கவும் உபாயமாகக் கற்றவர்கள் அதை விருத்தி செய்து கொள்ளத்தக்க சௌகரியமும் கிடையாது. ஆதலால் பெரும் பான்மையாய் நம்பாஷையைக் கைவிட்டு இதர பாஷையைக் கைக்கொள்ளுகிறார்கள். தாங்கள் மெத்த பிரயாசை யெடுத்து வெளியிடும் "சிந்தாமணி" தமிழ் நாட்டிற்கு அளவு கடந்த நன்மையைச் செய்வதன்றி வெளி நாட்டிலுள்ள எங்களுக்கும் மிகப் பிரயோஜன முள்ளதாகவுமிருக்கிறது.

☞ எமது ஏஜண்டு:—ஏ. வி. அண்டு சன்ஸ், ஆவிச்சி செட்டியார் அவர்கள், காரைக்குடி.

பரிமள ஓடை ! நறுமண மேடை !! வாசனை வாடை !!!

இவை யாவும் ஒருங்கே அமைந்த

சுகந்தச் சோலை

எது ?

தங்கமெடல் பரிசுபெற்ற கும்பகோணம்

K. அப்துல் ரஹிமான் சாஹிப் & ஸன்ஸ்

பரிமளச்சாலையே. அங்கு என்ன கிடைக்கும் ?

1. காந்திகண்ட சந்தனுதியாம்	9. தேஷ்பாண்டே மெச்சிய கேசர் பவுடர்
2. அரவிந்தர் ஆண்ட அரைக்கீரைத் தைலம்	10. படேல் பார்த்த பஞ்சவர்ணக் கொப்பரை
3. தாஸர் போற்றிய சந்தன வில்லைகள்	11. பண்டித நேரு பரிமளப் பாக்கு
4. முகம்மதலி விரும்பும் பத்தி தினுசுகள்	12. ஷௌகத் அலியின் சரிமணச் சுண்ணம்
5. அந்தணர் மாளவியா அகமகிழ் தசாங்கம்	13. பெஸண்டு புகழும் பில்லை தினுசுகள்
6. லஜபதி களித்திடும் அம்பர் அரகஜா	14. கிச்சிலு கோரிய நற்குண குல்கந்து
7. சரோஜினி சாற்றிடு ஸ்நானப்பவுடர்	15. கெல்கார் விரும்பிய ஐயர்தரப் பற்பொடி
8. ஜவாஹிர்லால் புகலும் புனுகு ஜவ்வாது	16. காங்கிரஸே களித்த நறுமணக் கலவை

காங்கிரஸ் மகாசபையார் கண்டு களித்தது.

ஏஜண்டுகள் தேவை. நல்ல கமிஷன் ! கேட்லாக் இனாம் !! இன்றே எழுதுங்கள் !!!

K. Abdul Rahiman Sahib & Sons,

ATTAR MERCHANTS, **KUMBAKONAM.**

பல கண்காக்ஷிகளில் மெடல்கள் பெற்ற

பி. சுப்பராயின் அபூர்வ ஔஷதங்கள்.

1. லக்ஷ்மிகா கஸ்தூரி மாத்திரைகள்.—தாம்பூலம் தரிப்பவர்கள் கையிருப்பில் எப்பொழுதும் வைத்துக்கொள்ள வேண்டிய விலையுயர்ந்த வஸ்து. தந்த ரோய், வாய் நாற்றம், அஜீரணம், பித்தவாய்வு இதுகளை நீக்கும். தாம்பூலத்துடனாவது, தனியாகவாவது சாப்பிட்டபின் 2 மாத்திரை உபயோகித்தால், எப்பேர்கொத்த கனத்த சாப்பாட்டையும் உடனே ஜீரணம் செய்வதுடன், வாயில் அனேக மணி நேரம் சுகந்த வாசனையைத்தரும். பிரதிதினம் காலையில் இரண்டு மாத்திரைகள் சாப்பிட்டால் நீடித்த அக்கினி மந்தம், மலச்சிக்கல், அஜீரணத்தினாலுண்டாகும் வயற்றிழிவு, வயற்றுநோய், நெஞ்செரிச்சல் முதலிய பற்பல வியாதிகள் தீரும். பிரசவகாலத்தில் தாம்பூலத்துடன் உபயோகித்துவந்தால் ஜன்னி கிட்ட நாடாது. ஜன்னியில் கொடுக்க ஜன்னி தீரும். இதில் லாகிரி முதலான யாதொரு அபாயகரமான வஸ்து சேரவில்லை. காஷ்மீர் தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி, தங்கரேக், பச்சைக் கற்பூரம் முதலிய அனேக விலைபெற்ற மருந்து சாமான்களும், வாசனைத் திரவியங்களும் சேர்த்துச் செய்யப்பட்டிருக்கிறது. அறைக் குழந்தைகள் முதல் வயது சென்றவர்களுக்கு சளி, இருமல், காசம், காலரா, பிளேக், சுரம் முதலானவைகளுக்கு வயதுக்கும், தேகத்துக்கும் தகுந்தபடி 1 முதல் 4 மாத்திரைகள் வரையில் வெற்றிலைச் சாற்றில் கொடுக்க சுகமாகும். டப்பா 1க்கு விலை அணா 4, இந்தியாவில் 1 முதல் 12 டப்பாக்கள் வரையில் அனுப்ப பாக்கிங்கு, வி. பி., தபால் சார்ஜ் அணா 8 பிரத்தியேகம்.

☞ பி. சுப்பராய்,
ஆயுள்வேத ஔஷதசாலை,
ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோவில் சன்னதி, தஞ்சாவூர்.

ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம்.

சனாதன தர்மப் பிரசாரம் செய்யும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை.

வருஷ சந்தா:— உள்நாடு ரூ 3
வெளிநாடு ரூ. 4

விலாசம்:
மானேஜர், ஸ்ரீராம கிருஷ்ண விஜயம், ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாபூர், சென்னை.

"தமிழ் நேசன்."

பத்திராதிபர் கெ. நரசிம்மய்யங்கார்.

இப்பெயருள்ள தமிழ் வாரப் பத்திரிகை கோலாலம்பூரினின்றும் பிரதி புதன்கிழமை தோறும் வெளிவருவதாகும். மலேயா நாட்டிலுள்ள தொழிலாளர்களின் முன்னேற்றங்கருதி முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் பரஸ்பரம் அபிமானத்தையும் ஒற்றுமையையும் விருத்தி செய்யக்கூடிய வழியில் நடைபெறும். இப்பத்திரிகை தமிழரால் ஆதரிக்கக் கூடியதாகும். வருஷ சந்தா இந்தியா, பர்மா, இலங்கை முதலிய நாடுகளுக்கு ரூ. 7—0—0. வேண்டுவோர், மானேஜர், 'தமிழ்நேசன்,' 212, பத்துரோட், கோலாலம்பூர் (F. M. S.) என்று எழுதவும்.

மெய்கண்ட மித்திரன்.

சுக்கிர வாரந்தோறும் வெளி வருவது.
கிரவுன் பன்னிரண்டு பக்கம் கொண்டது.

தமிழருக்கு இன்றியமையாத பாஷாபிமானம், தேசாபிமானம், சமயாபிமானம், ஒற்றுமை முதலிய சன்மார்க்கங்களை விளங்க உரைப்பது. நடுநிலைமை கோணாது நின்று நியாயம் வழங்கும் இயல்புடையது.

உள் நாட்டுச் சந்தா விகிதம் தென்னாப்பிரிக்காவுக்குத் தபாற் கூலி உள்பட வருஷ சந்தா

பவுன்	1	0	0
ஆறு மாதங்களுக்கு	0	11	6
மூன்று மாதங்களுக்கு	0	6	0
ஒரு மாதத்துக்கு	0	2	0

சந்தாவை முன்பணமாக அனுப்பவதே முறை.

வெளியூர் சந்தா விகிதம் ரோடிஸியா,஬ிலோன், இந்தியா, பர்மா முதலிய இடங்களுக்கு வருட சந்தா தபாற்கூலி உள்பட

பவுன்	1	2	0
ஆறு மாதங்களுக்கு	0	12	6
மூன்று மாதங்களுக்கு	0	7	0

தனிப்பிரதி 4 பென்ஸ்

ஆசிரியர்,
மெய்கண்ட மித்திரன்,
பி. ஓ. பாக்ஸ் 628, பிரிட்டோரியா.

SIDDHA KALPA MAKARADHWAJA

(REGISTERED)

THE WONDERFUL DISCOVERY IN THE MEDICAL WORLD

FOR ALL "ACUTE" & "CHRONIC" DISEASES

ONE PHIAL OF 60 PILLS (for a Complete Cure).

Price Rs. 10. (Rs. TEN). V. P. Extra.

THE MADRAS AYURVEDIC PHARMACY, LTD.

44, Govindappa Naick St., G. T., Madras.

190376

தமிழ் பிரசுரங்கள்.

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. G. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M.A., விலை அணா 10.

   Approved as a Library Book.

2. போஜ சரித்திரம்—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L. ஸப்ஜட்ஜ், நாகபட்டணம். விலை அணா 10.

   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B, dated 19-5-1925.

3. ராஜ ராஜ சோழன் I.—ஆசிரியர் P. V. ஜகதீச ஐயர் அவர்கள், K. ரங்காசாரியாரவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணா 8.

   Approved as a Text-Book suitable for School use.

4. இட்டார்க்கு இட்ட பலன்—ஆசிரியர் மிஸ் J. பொன்னுசாமி ராவ். விலை அணா 10.

   Approved as a suitable Text-Book, vide *Fort St. George Gazette*, **dated 24-7-23.**

5. திலகவதி.—சகோதரி V. பாலம்மாள் (சிந்தாமணி பத்திராதிபர்) எழுதியது. ராவ் ஸாஹெப் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடியது. விலை ரூ. 1—4—0.

   Approved as a Library Book.

6. தமிழ் வசன லக்ஷணம்—G. தாமோதர முதலியார், B.A., எழுதியது. விலை. அணா 12.

   Approved as a Text-Book for Schools and Colleges, vide *Fort St. George Gazette*, **21st October 1913.**

7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1—6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7—12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

   Parts I and II are approved as suitable class-books, vide *Fort St. George Gazette*, **Part I-B, page 478, dated 3-6-24.**

9. சுகாதாரபோதினி.—(மூன்றாவது பாரத்திற்கு) K வரதராஜ ராவ் இயற்றியது. விலை அணா 8.

   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B dated 19-5-1925.

10. மனு சரித்திரம்—சென்னை க்ரிஸ்டியன் காலேஜ் தமிழ் போதகாசிரியராயிருந்த ஆர். இரங்காசாரியார், MA., L.T., அவர்கள் இயற்றியது. விலை அணா. 10.

SRINIVASA VARADACHARI & CO., TRIPLICANE AND MOUNT ROAD, MADRAS.

தமிழ் தெரிந்தவர்கள் வெகு சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடியது.

10,000 ஜனங்களால் வாசித்து பிரபலமடைந்தது.

எமது லேடி டிரேட்மார்க் போட்டிருக்கும் புஸ்தகம் பார்த்து வாங்குங்கள்.

இப்புத்தகத்தில் சொல்லிய படி இல்லாவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

ஆங்கில ஆசான்.

60 நாளையில் இங்கிலீஷ் யாவரும் கற்றுக் கொள்ளலாம்.

இது இங்கிலீஷ் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக் கொள்ளக் கூடிய சுலபமான தமிழில் சுமார் 600 பக்கங் கொண்டபெரிய புத்தகம். 5-ம் பதிப்பு.

விலை ரூ. 2. தபாற் செலவு அணா 8.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை தெரு, மதராஸ்.

ஸ்திரீளுக்கு—மனோஹரமானது.
அலங்காரத்திற்கு—அவசியமானது.
கூந்தலுக்கு—இன்றியமையாதது.
ஸ்நானத்திற்கு—சுகமானது.

மணித்தைலம்.

தலைமயிரை உதிராமற் றடுப்பதன்றி, அவைகளை மிருதுவாயும், பளபளப்பாயும், கருப்பாயுமாக்கும். பால்யத்தில் முகத்திலுண்டாகும் வடுக்களையும், பருக்களையும், நிவர்த்திக்கும். உள்ளங்கைகளிலும்உள்ளங்கால்களிலும் தடவி தேய்த்தால் தேகசிரமம் மனோ ஆயாசம் நீங்கும். ஆயுர்வேத முறைப்படி செய்யப்பட்டு சென்ற 45 வருடகாலமாக விற்பனையாகி வருகிறது

புட்டி 1-க்கு விலை ரூபா 1.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

சுதேச பரிபாலினி.

ரங்கூனிலிருந்து வெளியாகும் தமிழ் தினசரிப் பத்திரிகை.

பத்திராதிபர்: P. E. முதலியார்.

பர்மாவில் நடைபெறும் அரசியல் முதலிய சகல விஷயங்களையும் வெளியிட்டுவரும் தினசரி இது ஒன்றே. விளம்பரம் செய்வோருக்குப் பயனளிக்கக்கூடியது இதுவே.

தா: உள்ளூர்: ரூ.22 வெளியூர்: ரூ. 26
: மானேஜர், சுதேச பரிபாலினி,

31-32 பார் ஸ்டிரீட், ரங்கூன்.

விவேகபாநு.

தென்னாப்பிரிகாவில் வசிக்கும் தமிழ் மக்களின் முன்னேற்றங்கருதி வெளிவரும் தமிழ் வாரப்பத்திரிகை. இதில் அரசியல், மதாசாரம் முதலிய விஷயங்களும் தென்னாப்பிரிகாவில் நடைபெறும் விஷயங்கள் முழுதும் வெளியிடப்படுகின்றன. தூரதேசத்திலிருக்கும் சகோதரர்களின் க்ஷேமலாபங்களை விவரமாகத் தெரிவித்துவரும் விவேகபாநுவை ஒவ்வொரு இந்தியரும் வரவழைத்துப் படித்தல் கடமையாகும். ஒருவருஷ சந்தா 15 ஷில்லிங். இந்தியா, சிலோன், மோரேஷஸ், பினாங்கு, சிங்கப்பூர், ரோடேசியா முதலிய இடங்களுக்கு 17 ஷில்லிங்.

விலாசம்:—

மானேஜர், விவேகபாநு,

86, க்வீன் ஸ்டிரீட், டர்பன், நெட்டால்.

கைமேற்பலன்! அதை நீங்கள் கட்டாயம் அடையவேண்டும்

கீழே காட்டியுள் புத்தகங்களை வாசிப்பதனால் நீங்கள் கைமேற்பலனடைவீர்களென்பது நிச்சயம்!

		ரு.	அ.	பை
1	வியாசக் கொத்து — அநேக அரிய வியாசங்களைக் கொண்டது	2	0	0
2	அதிசயப் பொக்கிஷம் — ஒரு சாமானியமனிதன் கோடீச்வரனான விந்தை	1	8	0
3	இன்னுரைக் களஞ்சியம் — 40 அருமையான விஷயங்களைக் கொண்டது	1	0	0
4	விஷயரஸமஞ்சரி — எழுபது விஷயங்களை விரிவா யுரைப்பது	1	0	0
5	திருவள்ளுவரும் அவரது உபதேசங்களும் — புதிய முறையில் வரையப்பட்டது	0	8	0

இன்னும் அநேக புதிய, அரிய, அறிவை வளர்க்கக்கூடிய புத்தகங்கள் எங்களிடம் உண்டு.

நவீன கதா புத்தகசாலை, 122, Montgomery St., இரங்கூன்.

ஜரிகையில்லாத பட்டுச்சேலைகள்

18 முழம் நீளம் $2\frac{1}{2}$ முழ அகலம். பட்டினால் ருத்திராக்ஷகரை போட்டவை. உடல் மிகவும் அழுத்தமானது. எல்லா நிறங்களிலும் கிடைக்கும். சேலை 1க்கு விலை ரூபா 35.

ஷை மாதிரி சேலைகள் ஜரிகைக் கரைபோட்டது

சேலை 1-க்கு விலை 50 ரூபாய் முதல் 80 ரூபாய் வரை. ரவிக்கைகள் எல்லா நிறங்களிலும், எல்லா மாதிரியிலும் ரவிக்கை 1-க்கு 3 ரூபாய் முதல் 5, 6, 7, 8, 10 வரை.

பெரிய கேட்லாக் "இனாம்."

விலாசம்:— மானேஜர், பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

SILK PITAMBER CO., BENARES CITY.

மஹானால் கிடைத்த "அருமையான மூலிகை"

தமிழ்வைத்திய சங்கத்தில் தங்கமெடல் பெற்றவை.

குஷ்டம், க்ஷயம், மூலம், கிராணி, பிரமை, பைத்தியம், இழுப்பு, வலிப்பு, மூத்திர வியாதி முதல் காட்டப்பட்ட சகலவித வியாதிகளும், பார்வை, பில்லி, சூனியம், வைப்பு, ஏவல், விஷவியாதி, செய்வினை என சொல்லப்பட்ட பலவிதக் கஷ்டங்களும் கவலைகளும் உடனே நிவர்த்தியாகும்.

ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்களைக் காணலாம்

புத்திர பாக்கியமில்லாதவர்களுக்கு 48 நாளில் கேர்ப்பம் உண்டாகும்.

பிரபலமான பேப்பர்களிலெல்லாம் பார்த்திருப்பீர்கள். உலகப்பிரசித்திபெற்றவை எதற்காகத் தேவையிருந்தாலும் ஆரம்பமுதல் சரிவர விபரமாக எழுதுங்கள். தங்கள் முழுவிலாசத்துடன் பதிலுக்கு 1 அணா ஸ்டாம்பு அனுப்பினால் சகலவித விபரமும் அனுபந்தமும் கிடைக்கும் எந்ததேச ஸ்டாம்பும் அனுப்பலாம்.

முக்கியமான காரியங்களுக்கு ஸ்பெஷலாக வேண்டியதைச் செய்தனுப்பக்கூடும்.

மானேஜர், பாலசந்திரன் ஆபீஸ், மேட்டுப்பாளையம், கோயமுத்தூர் ஜில்லா, சவுத் இந்தியா.

தேசபக்தன். ஓர் தேசியத் தமிழ்ப் பத்திரிகை.

பிரதி திங்கள், புதன், வெள்ளி தோறும் கொளும்பிலிருந்து வெளி வருவது.

ஆசிரியர் கோ. நடேசய்யர். சந்தா விவரம்.

கொழும்பில் ஆள் மூலம் வருஷம் 1-க்கு ரூ. 9 0 0 ஷை ஷை 6-மாதம் ரூ. 5 0 0

பிறவிடங்கள் (தபால் மூலம்) வருஷம் 1-க்கு ரூ. 13 0 0 பினாங்கு, சிங்கப்பூர் முதலிய விடங்களுக்கு வருஷம் 1-க்கு ரூ. 16 0 0

தனிப்பிரதி 6-சதம்.

சந்தாத்தொகை முன்பணமாகவே கட்டவேண்டும். 6-மாதத்திற்குக்குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

விலாசம்:—

மானேஜர், தேசபக்தன் ஆபீஸ், நெ. 43, ரெக்ளமேஷன் ரோடு, கொழும்பு.

கேஸரியின்

லோத்ரா.

ஸ்திரீகளுக்குள்ள சகல கஷ்டங்களையும் நிவர்த்திக்கும்.

பயனடைந்த பெண்மணிகளின் அபிப்பிராயம்

ஸ்ரீமதி மிஸர்ஸ் காத்தர் எழுதுகிறார்: "நான் பத்து வருஷ காலமாய் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ருது சூலை, வயிற்று வலி கேசரியின் 'லோத்ரா'வை உபயோகித்த பிறகு அத்தியாச்சரியமாய் நிவர்த்தியாயிற்று."

ஸ்ரீமதி கோபால பணிக்கர் எழுதுவதாவது:—'லோத்ரா' உபயோகித்ததால் நானும் என் சகோதரியும் ருது சூலைக் கஷ்டத்தினின்று நிவர்த்திக்கப்பட்டோம்.

இது எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்,

ஆயுர்வேத அவுஷத சாலை, எழும்பூர், மதராஸ்.

கிரேட் ஈஸ்டர்ன் லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

(இங்கிலாந்தில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு ஸ்டிரெயிட் செட்டில்மெண்டில் இணைக்கப்பட்டது.)

55-வது வயது வரையில் எல்லா நபர்களையும் இன்ஷியூர் செய்யப்படுகிறது.

ஸ்திரீகள்கூட இன்ஷியூர் செய்யப்படுகிறார்கள்.

எல்லா கேஸ்களிலும் பறிமுதல் செய்யப்படாது தானாகவே ஆதரவு கிடைக்கக் கூடியது. காலத்தில் ப்ரீமியம் கட்டாததற்காக பாலிஸிகள் காலாவதியாக விடப்படமாட்டா. ஆயுள்காலத்தில் அகஸ்மாத்தாகவோ அல்லது வியாதியினாலேயோ அசக்தர்களாகி விட்டால் அவர்களுக்கு பாக்கியுள்ள காலத்திற்கு ப்ரீமியங்கள் வாங்கப்படமாட்டா. எந்த தேதி ஏற்பட்டதோ அதுவரையிற் சேர்ந்துள்ள இன்ஷியூர் செய்யப்பட்ட தொகை கொடுக்கப்படும்.

தொழில், வசிக்குமிடம், அல்லது பிரயாணம் ஆகியவற்றில் பூரணசுதந்திரம். குழந்தைகளுக்கான எண்டௌமெண்டும், மற்றுமுள்ள பிளான்களும் உண்டு. மாகாணமெங்கும் சாமர்த்தியமான ஏஜெண்டுகள் தேவை.

பிரகடனப் பத்திரத்திற்கு எழுதவும்.

R. வேங்கடாசாரி,

சீப் ஏஜண்டு, "ரிதர்டன் ஹவுஸ்," வேப்பேரி, மதராஸ்.

"சிந்தாமணி"

இரண்டாவது வருஷம்.

ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ் பத்திரிகை 1924 ஆகஸ்டிலிருந்து வெளிவருவது

பத்திராதிபர் : சகோதரி வி. பாலம்மாள்.

D. Crown 8vo. 64 பக்கங்கள். உயர்ந்த அபிப்பிராயங்கள். சிறந்த வியாசங்கள்.

வருஷ சந்தா (தபால் கூலி உள்பட) உள்நாடு ரூ. 5; வெளிநாடு ரூ. 6.

தனிப்பிரதி அணா 8. மாதிரிப்பிரதி வேண்டுவோர் 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

சிந்தாமணி இந்தியா, பர்மா, சிலோன், தென்னாபிரிக்கா, மலாய் நாடுகள் முதலிய தேசங்களிலிருக்கும் தமிழர்கள் வீடுகளில் அதிகமாக உலாவுவதால் இதில் செய்யப்படும் விளம்பரங்கள் மிகவும் லாபகரமாகவே யிருக்கும்.

விளம்பர விகிதங்கள் :—பிரதி மாதத்திற்கும் ஒரு பக்கம் ரூ. 10; அரைப் பக்கம் ரூ. $6\frac{1}{2}$; கால் பக்கம் ரூ. 3. விளம்பரங்கள் தோன்றும் இதழ்கள் இனாமாய் அனுப்பப்படும்.

நீடித்தகால விளம்பரங்களுக்குப் பிரத்தியோகமான விகிதங்கள். விவரத்துக்குப் பின்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
சிந்தாமணி ஆபீஸ்,
விவேகாச்ரமம், ஸலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை

பத்திராதிபர் அறிவிப்பு.

1. வியாச மெழுதுவோர் தயவு செய்து ஒரே பக்கத்தில் தெளிவாய் எழுதி யனுப்புவதுடன் பெண்மக்களின் முன்னேற்ற விஷயமாகவே பெரும்பாலும் எழுத வேண்டு மென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2. வியாச மெழுதுவோர்களின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதி யல்லர்.

3. ஓரணா அனுப்பினால் பிரசுரிக்கப்படாத வியாசம் திருப்பியனுப்ப சௌகரியப்படும்.

4. வியாசங்கள், மதிப்புரைப் புத்தகங்கள் இவைகளை பத்திராதிபர், "சிந்தாமணி," "விவேகாச்ரமம்," சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை, என்று எழுதவும்.

5. மாதிரிக் காபி வேண்டுவோர் எட்டணா ஸ்டாம்பு அனுப்பவும்.

6. நிருபம் எழுதுவோர் அவைகளில் வரக்கூடிய பாடல்களைப் பிழையின்றிக் கவனித்து எழுதுதல் முக்கியம்.

7. நிருபங்களில் விசேஷமாகப் பாடல்கள் போட்டு நிறப்பிவிடாமல் விஷயத்தைத் தெளிவாயும் சுருக்கமாகவும், தொடர்ச்சியாய் வரக்கூடிய வியாசத்தை முழுவதும் ஒரே தடவையிலும் எழுதியனுப்பும்படி விஷயதானம் செய்வோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

8. எட்டணா முன்பண மனுப்பிச் சிந்தாமணி மாதிரிக் காபி பெற்றுக் கொண்டவர் சந்தாதாராகும் பக்ஷத்தில் மாதிரிக் காபி விலை எட்டணா வருஷ சந்தாவில் கணக்கிட்டுக் கொள்ளப்படும்.

9. சிந்தாமணியின் நிர்வாக விஷயங்கள், விளம்பர சம்பந்தமான கடிதங்கள் முதலியவைகளுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
சிந்தாமணி ஆபீஸ்,
சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை